# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 289

ஞாயிற்றுக்கிழமை
11 செப்ரெம்பர் 2022

ஆவணி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+8

விலை: 60/=




முச்சந்தி முரளி

"அப்ப இனிமேல் இலவசக் கல்வி எண்டதுக்கு பதில் இரவல் கல்வி எண்டு சொல்லுங்கோ..."

## மனித உரிமைகள் ஆணையாளரின் –

# பொறுப்புக்கூறல் திட்டத்தை பேரவை வலுப்படுத்தட்டும்

- இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு உறுப்பு நாடுகள் ஆதரவு வழங்கவேண்டும்
- ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திட தூண்டவேண்டும்
- சர்வதேச மன்னிப்புச் சபை நீண்ட அறிக்கை

கொழும்பு, செப்ரெம்பர் 11

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளிப்படுத்திய பொறுப்புக்கூறல் திட்டத்தை – உலகளாவிய நியாயாதிக்கப் பிரயோகத்தை – முன்னெடுக்க வேண்டுமென பேரவையின் உறுப்பு நாடுகளை சர்வதேச மன்னிப்புச் சபை பகிரங்கமாகக் கோரியுள்ளது. 15

## உள்நாட்டு பொறிமுறையே நடைமுறைப்படுத்துவோம்

*மனித உரிமை பேரவைத் தலைவரிடம் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 11

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச ஆகியோர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் பெடொரியோ வில்லியர்ஸை சந்தித்துள்ளனர். 15

## புத்தகங்களுக்கு இந்தியா சீருடைகளுக்கு சீனா

*இலங்கை மாணவர்களுக்கு கைகொடுப்பு*

கொழும்பு, செப். 11

இந்தியக் கடன் உதவியின் கீழ், பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு தேவையான மூலப்பொருள் 15

## விவசாயிகளுக்கு 40 மில். டொலர்

கொழும்பு வந்திறங்கிய சமந்தா பவர் அறிவிப்பு

கொழும்பு, செப். 11

நாட்டின் விவசாயிகளின் தேவைகளுக்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதாக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் (யு.எஸ்.எயிட்) நிர் 15

## காக்கா அமெரிக்கா பறக்கிறது நாட்டைக் காத்தோர் சிறைக்குள்

*சஜித் கடும் விசனம்*



கொழும்பு, செப். 11

நாட்டை வங்குரோத்தாக்கிய காக்கை அமெரிக்கா செல்கிறது. ஆனால் நாட்டுக்காகப் போராடிய இளைஞர்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள் –இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 15

## எடை குறைத்து பாண் விற்பனை

கொழும்பு, செப். 11

சில பேக்கரி உரிமையாளர்கள் நிர்ணயிக்கப்பட்ட எடைக்குக் குறைவான பாணை, 190 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு இறாத்தல் பாணின் எடை 450 கிராமாக இருக்க 15

## புலனாய்வுத் தகவல்களை கணக்கெடுக்காத படைகள்

***போராட்டகாலச் சம்பவங்கள் தொடர்பான விசாரணை அறிக்கையில் தகவல்***

கொழும்பு, செப். 11

கடந்த மார்ச் மற்றும் மே மாதங்களில் இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வு அமைப்புக்களில் பல குறைபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. 15

## நிலக்கரி விநியோகம் நிறுத்தம் மின்வெட்டு அதிகரிக்கும்!

கொழும்பு, செப். 11

நிலக்கரி விநியோகஸ்தர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சட்டரீதியாகத் தீர்க்கப்படும் வரையில் விநியோகம் இடம்பெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். குறைந்த விலையில், நிலக்கரியை 15

## உறவுகளுக்கு கரம்கொடுத்து உயிர்ப்புடன் சிறை மீட்போம்

மகஸின் சிறையை நோக்கிய பயணம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 11

நீண்டகாலமாகசிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை சந்திப்பதற்காக அவர்களின் உறவினர்கள், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு மகஸின் சிறைச்சாலைக்கு, சர்வதேச கவனமொன்றை 15

## சட்டபூர்வ அனுமதியூடாக மாத்திரம்

# யாழ்ப்பாணத்தில் 8 ஆண்டுகளில் ஒரு இலட்சம் பனைகள் சாய்ப்பு

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். மாவட்டத்தில் கடந்த 8 ஆண்டுகளில் அனுமதி பெற்று ஒரு இலட்சத்து 572 பனை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக 'உதயன்' பத்திரிகை பெற்றுக்கொண்ட தகவலிலேயே பனை அபிவிருத்திச் சபை இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 2016ஆம் ஆண்டிலேயே அதிகளவான பனை மரங்கள் - 16 ஆயிரத்து 285- தறிக்கப்பட்டுள்ளன. பின்னர் படிப்படியாக இந்த எண்ணிக்கை குறைந்து வந்தாலும் 15

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு ஊர்திவழிப் போராட்டம் ஆரம்பம்

(விரிவு பக்:8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கடன் நிவாரணம் வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை தேவை!

## சீனா போன்ற நாடுகளிடம் நாணய நிதியத் தலைவர் வலியுறுத்து




**கொழும்பு, செப்.11**

**சீனா போன்ற பெரிய கடன் வழங்கும் நாடுகள் சிறிலங்கா போன்ற நாடுகளுக்கு கடன் நிவாரணத்தை வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டினா ஜோர்ஜிவா வலியுறுத்தியுள்ளார்.**

தனது இந்தியப் பயணத்தின் போது ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைத்த அவர், வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களில் சுமார் 25 வீதம் பேராபத்தில் உள்ளன என்றும், சிறிலங்கா நீண்ட காலமாகவே இப்படிப்பட்ட நிலையிலேயே உள்ளது என்றும் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 60 வீதத்துக்கும் அதிகமான நாடுகள் இதனால் ஆபத்தை எதிர்நோக்கின்றன. வலுவான அடிப்படைகளைக் கொண்ட நடுத்தர வருமான நாடுகள் கூட மோசமான சூழ்நிலையில் விழுந்துள்ளன. வலுவான அடிப்படைகளைக் கொண்ட நாடுகள் கூட பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் உள்ளன. இதிலிருந்து கற்க வேண்டிய பாடங்களாக, விவேகமான நிதிக்கொள்கைகள் மற்றும் அதிர்ச்சிகளைத் தாங்கும் திறனை உருவாக்குதல் ஆகியவை அமைந்துள்ளன.

சீனா போன்ற பெரும் கடன் வழங்கும் நாடுகள், குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு, இந்த அதிர்ச்சிகளின் சூழலில், தலைமைத்துவத்தைக் காட்டவேண்டும். இந்த நாடுகளுக்கு கடன் நிவாரணம் வழங்க விரைவாக முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும். - என்றார். (எ-இ)

# சுதந்திர மக்கள் சபை பெரமுனவுக்கு சவால்

கொழும்பு, செப். 11

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உண்மையான உறுப்பினர்கள் நாங்கள். முடிந்தால் எம்மைக் கட்சியிலிருந்து நீக்கிக் காட்டட்டும்.

இவ்வாறு டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை சவால் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இன்னமும் பொருளாதார நெருக்கடி தீரவில்லை. ஆனால் இராஜாங்க அமைச்சு நியமனம் இடம்பெறுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் அநாதரவாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காகவே நாம் புதிய அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளோம்.

ஆயினும் கட்சியை விட்டு நீக்கினால் நிச்சயம் நீதிமன்றத்தை நாடுவோம். உண்மையான பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் நாமே. முடிந்தால் எம்மைக் கட்சியிலிருந்து நீக்கிக் காட்டட்டும்- என்றார். (ச-44)



# மாணவர்களுக்கு சீனாவின் அரிசி

கொழும்பு, செப்.11

இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்களின் போஷாக்குத் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக சீனாவால் முதற்கட்டமாக 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் சீனத் தூதுவர் ஆகியோர் கலந்துகொண்டனர். சீன மக்களின் நட்புறவின் அடையாளமாக இலங்கை மாணவர்களின் போசணைக்காக சுமார் பத்து லட்சம் மாணவர்களுக்கு இந்த வேலைத்திட்டத்தின் கீழ் சீன அரசு அரிசி வழங்கவுள்ளது.

நாட்டில் தெரிவு செய்யப்பட்ட 7 ஆயிரத்து 925 பாடசாலைகளில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனவும் இது இலங்கையிலுள்ள மொத்த பாடசாலைகளில் 78 வீதமான பாடசாலைகளை உள்ளடக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ரயில் ரிக்கெட்டுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, செப்.11

ரயில் பயணச் சீட்டுக்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் பயணிகளுக்கு குறிப்பிட்ட தொகைக்கு ஏற்ப பயணச்சிட்டு வழங்கப்படுவதில்லை என சில பயணிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த புகையிரத திணைக்கள பிரதி பொது முகாமையாளர் எஸ்.பொல்வத்த, பிரயாணச்சீட்டு அச்சிடுவதற்கு தேவையான காகிதத் தட்டுப்பாடு காரணமாகவே இந்த நிலைமை காணப்படுகின்றது என்று தெரிவித்தார். (எ-இ)

# சஷீந்திரவுக்கு அமைச்சுப் பதவி; ராஜபக்சக்களது அரசியல் நகர்வே

## விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 11

ராஜபக்சக்களுக்கு மீண்டும் பதவிகளைப் பெற்றுகொடுப்பதற்கான நகர்வே சஷீந்திர ராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சுப் பதவி.

இவ்வாறு மேலவை இலங்கை கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலிமுகத்திடலில் அமைதி முறையில் போராடிய போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியவருக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ராஜபக்சக்களின் அரசியலை நாட்டு மக்கள் நிராகரிக்கின்றனர்.

ஆயினும் சஷீந்திர ராஜபக்சவுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் சூத்திரம் செயற்படுகின்றது. சஷீந்திரவுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கினால், நாமலுக்கு கட்டாயம் அமைச்சுப் பதவியொன்று வழங்கப்பட வேண்டும். இதுவே அவர்களின் நகர்வு- என்றார். (ச-44)

# இலங்கையரிடமிருந்து 332.5 மில். டொலர்

கொழும்பு, செப்.11

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் வெளிநாடு வாழ் இலங்கையரிடம் இருந்து 332.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறப்பட்டுள்ளது என்று சிறிலங்கா மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதேவேளை, இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் கடந்த ஓகஸ்ட் மாதம் வரையில் வெளிநாடு வாழ் இலங்கையரிடம் இருந்து 2 ஆயிரத்து 214.8 மில்லியன் அமெரிக்க டொலர் பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா கடும் டொலர் நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில், வெளிநாடு வாழ் இலங்கையர்கள் அனுப்பும் டொலரையே பெரிதும் எதிர்பார்த்துள்ளது. (எ-இ)

# உண்டியல் பணப் பரிமாற்றம்: தீவிர விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, செப்.11

உண்டியல் மற்றும் ஹவாலா ஆகிய சட்டவிரோத முறைகளின் மூலம் இரண்டு மாதங்களில் ஒன்பது கோடி ரூபா பணம் பரிமாற்றம் செய்யப்பட்ட வங்கிக் கணக்கு தொடர்பில் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நாடுமுழுவதிலும் உள்ள உண்டியல் மற்றும் ஹவாலா ஆகிய சட்டவிரோத பணப்பரிமாற்ற முறைமைகள் தொடர்பில் மத்திய வங்கி மற்றும் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது இந்த விடயம் தெரியவந்துள்ளது. மடகாஸ்கரில் இருந்து வாகனங்களை இறக்குமதி செய்வது என்ற போர்வையில் உண்டியல் கடத்தல்காரர்களால் இந்தப் பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இந்தக் கடத்தல் தொடர்பில் பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி கீதல் தலைமையில் விசேட குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. (எ-இ)

# பொதுஜன பெரமுன கட்சியில் 12 பேருக்கு அமைச்சுப் பதவி?

கொழும்பு, செப். 11

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் 10 பேர் உட்பட 12 பேருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி புதிய அமைச்சர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அடுத்தவாரம் பதவியேற்கவுள்ளனர் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுஜன பெரமுனவின் பட்டியலில் ரோஹித அபேகுணவர்த்தன, பவித்ரா வன்னியாராச்சி, காமினி லொக்குகே, சி.பி. ரத்னாயக்க, ஜனக்க பண்டார தென்னகோன் உள்ளிட்டவர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இராஜாங்க அமைச்சர் நியமனத்தில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை!

## முண்டு கொடுக்கின்றார் மஹிந்த அமரவீர

கொழும்பு, செப்.11

புதிய இராஜாங்க அமைச்சர்களுக்கு பொறுப்புகளை வழங்குவதன் மூலம் நாட்டை கட்டியெழுப்புவதற்கான துரித பணிகளுக்குப் பெரும் பங்களிப்பு வழங்கப்படும். இராஜாங்க அமைச்சர்களாக அரசாங்கத்தின் பொறுப்புக்களை நிர்வகித்து, அந்த இராஜாங்க அமைச்சுடன் நேரடியாக தொடர்புபடுகின்ற அமைச்சுக்கு முழுமையான பங்களிப்பை வழங்குவதே இராஜாங்க அமைச்சர்களின் பிரதான பணியாகும்.

இவ்வாறு வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது 20 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களே இதுவரை நியமிக்கப்பட்டுள்ள பின்னணியில், அமைச்சர்களின் பொறுப்பில் உள்ளடக்காத ஏனைய அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்பிலேயே இருக்கின்றன.

அமைச்சரவை அமைச்சர்களுக்குப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்த எல்லைக்குள் வராத அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஜனாதிபதியின் கீழ் உள்ளன. ஜனாதிபதிக்கு அதிகளவான பொறுப்புக்கள் அமைச்சின் கீழ் வழங்கப்பட்டுள்ளதால், பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளில் குறைவினை காணக்கூடியதாக உள்ளது.

இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் தற்போது பல்வேறு தரப்பினரும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். நாடு நெருக்கடிகளை எதிர்நோக்கும் போது அரசாங்கம் இராஜாங்க அமைச்சர்களை நியமித்திருப்பது பொருத்தமான விடயமல்ல என சிலர் கூறுகின்றனர். ஜனாதிபதி, இராஜாங்க அமைச்சர்களை நியமித்தாலும் வழமை போன்று சகல வசதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது என தெளிவாகக் குறிப்பிட்டார்.

நிலையான அரசாங்கத்தை நடத்துவதற்கு, வலுவான அமைச்சரவை அவசியமாகும். ஒவ்வொரு அமைச்சிலும் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டமானது மிகவும் விசாலமானதாகும். அந்த பணிகளை ஓர் அமைச்சரால் மாத்திரம் தனியாக நிறைவேற்றமுடியாது. அதனால் இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை.

நாட்டை தற்போதுள்ள நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். புதிதாக பதவியேற்றுள்ள இராஜாங்க அமைச்சர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் - என்றார். (எ-இ)

# இராமேஸ்வரம் மீனவர் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, செப்.11

தமிழகத்தின் இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுதல் காலவரையற்ற பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர். சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், கைப்பற்றிய படகுகளையும் விடுவிக்கக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுன்றது.

இராமேஸ்வரம் மீன்பிடித்துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் மீனவர் சங்கங்களின் அவசர கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பணிப்புறக்கணிப்புக் காரணமாக இராமேஸ்வரம் மீன்பிடித்துறைமுகத்தில் 800க்கும் அதிகமான விசைப் படகுகள் கடலுக்குச் செல்லவில்லை என்றும், இந்த பணிப்புறக்கணிப்பால் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VACANCIES
@
BLC Campus Jaffna

We are looking for enthusiastic candidates for the following vacancies



1. Centre Manager
- Master degree Preferred
- Retired Professionals are wel comed to apply
- Should possess good interpersonal Skills
- Should be able to work on weekends
- Prior Experience in Education Sector will be an added advantage.

2. Academic Coordinator
- Should possess Higher Diploma or Degree Qualification
- Be fluent in English
- Should be able work independently
- Must be able to coordinate academic activities and handling documents
- Familiar to work with MS Office, Internet & Email

How to Apply: Please forward your detailed CV indicating the post applied with the details of two non-related referees to info@blccampus.com on or before 14th of September 2022.

BLC CAMPUS
23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 222 3355
E - info@blccampus.com
www.blccampus.edu.lk

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24.05.1947
மறைவு 23.08.2021



எமது குடும்பத் தலைவர்
அமரர் நாகலிங்கம் இரட்ணம்

எம் நிழல் போல இருந்தவர் நீங்கள்
நினைவாய் மாறினீர்கள்! கண் இமைக்கும் நேரத்தில்
கண்ணீர் துளியாகினீர்கள்! உங்கள் சிரித்த அழகுமுகம்
கண்டு ஓராண்டு ஆனதுவோ! எமை அன்புடன் அழைக்க
நீங்கள் இங்கு இல்லை. பரிதவிக்கின்றோம் நாம் !
எமக்கு ஆற்றும் வழிதேடுகிறோம்
ஆனாலும் ஆறவில்லை எம் இதயம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றும் அழியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம் என்றென்றும்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(cs.20692) (2-6)

## கிளி. பொது மருத்துவமனையில் தற்கொலை தடுப்பு தின நிகழ்வு

கிளிநொச்சி, செப். 11
உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு, "செயல் மூலம் நம்பிக்கையை உருவாக்குவோம்" என்ற தொனிப்பொருளில் தற்கொலை தடுப்பு தின நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் உளநலப்பிரிவால் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் உளநலப்பிரிவில் கொரோனாத் தொற்றுக் காலங்களில் சிறப்பாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா மருத்துவமனையின் உளநல மருத்துவர் எஸ்.சிவதாஸ் கலந்துகொண்டார்.
(எ-14,113)

# மக்களின் வரிப்பணத்திலே அமைச்சுகளின் பராமரிப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

**கொழும்பு, செப். 11**
**நாட்டு மக்களின் வரிப்பணம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 37 இராஜாங்க அமைச்சுக்களது பராமரிப்புச் செலவுக்கு பயன்படவுள்ளது. தாங்க முடியாத அழுத்தத்தால் நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் கண்ணீர் வடிக்கும் இந்தத் தருணத்தில் மொட்டுக்கட்சியினரை அதிகளவில் உள்ளடக்கி 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.**



இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
'சுதந்திரத்துக்காக குரல் கொடுப்போம்' எனும் கருப்பொருளில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
37 இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதன் மூலம் நாட்டில் வரிசெலுத்துவோரின் பணம் அவர்களது பராமரிப்புக்கு பயன்படப்போகிறது. ராஜபக்சக்களை பாதுகாப்பதற்காக தற்போதைய ஜனாதிபதியும் மக்களை ஒடுக்கி வருகின்றார். இந்தக் கொடூர ஆட்சி முறைக்கு எதிராக நாம் குரல்கொடுப்போம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு பயன்படுத்துவதைக் கண்டிப்போம். அது எதிர்ப்பை நசுக்கும் ஜனநாயக விரோத செயற்றிட்டமாகும்.
நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் அழுத்தங்களை இல்லாதொழிப்பதை விடுத்து ராஜபக்ச குடும்பத்தைப் பாதுகாக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது- என்றார். (ச-இ)

சர்வதேச உதவியைப் பெற

# சுகாதார அமைச்சால் புதிய வங்கிக் கணக்கு

கொழும்பு, செப். 11
சர்வதேச நாடுகளிலிருந்து சுகாதாரத் துறைக்கு அவசியமான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக புதிய வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.
உலக சுகாதார அமைப்புடன் இணைந்ததாக இந்தக் கணக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனூடாக சர்வதேச நாடுகளின் உதவித்திட்டங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
நாடு எதிர்நோக்கியுள்ள நலிவுநிலையில் உலக நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் உதவி சுகாதாரத்துறைக்கு மிக அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# அம்புலன்ஸ் சாரதியை தாக்கியவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், செப். 11
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நோயாளி ஒருவரை மருத்துவமனைக்கு ஏற்றிச் சென்ற நோயாளர் காவு வண்டி சாரதியை தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
அதேபகுதியைச் சேர்ந்த 32 வயதான இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தியபோது சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இன்னும் மாறாத பேரினக்குணம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் கலந்துகொள்வதற்காக ஜெனிவா சென்றுள்ள சிறிலங்காவின் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச, 'போர்க்குற்றங்களை ஏற்றுக்கொள்ளமாட்டோம். சிறிலங்காவின் மீது எவரும் போர்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த முடியாது' என்று வீறாப்புப் பேசியிருக்கின்றார்.

கடந்த காலங்களிலும் சிறிலங்கா உண்மைகளை ஏற்றுக்கொள்ளவோ, பொறுப்புக்கூறவோ தயாராக இருந்ததில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதும், சிறிலங்கா அவற்றைக் கணக்கில் எடுக்காதது போன்றே செயற்பட்டிருந்தது. நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச கூறியிருக்கும் வார்த்தைகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானத்தின் கதி எப்படி இருக்கும் என்பதை இப்போதே வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றது.

இதே விஜயதாச ராஜபக்ச ஜெனிவாவில் வைத்து 'தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தரும் .தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஓர் ஒழுங்குமுறையில் தீர்வுகளைக் காணும் பணியை எமது அரசு முன்னெடுக்கும்' என்றும் அவர் கூறியிருக்கின்றார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணாமல் புலம்பெயர் தமிழ் மக்களுடன் இலங்கை அரசு நெருக்கமாகச் செயற்பட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சிறிலங்காவில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த அடக்குமுறைகள்– வன்முறைகளை ஏற்றுக்கொள்ளாமல், இறுதிப்போரில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதிகளை ஒப்புக்கொள்ளாது, அவற்றுக்குப் பொறுப்புக்கூறாது ரணில் அரசாங்கம் எவ்வாறு தமிழ் மக்களுக்குத் தீர்வை முன்வைக்கும் என்பது மில்லியன் டொலர் கேள்வியாக முன்னிற்கின்றது. சிறிலங்காவில் பல தசாப்தங்களாக புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான மூலவேரைக் கண்டறிவதற்கும் நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களை ஒப்புக்கொள்வது மிக முக்கியமானது. ஆனால் இப்போதைய அரசாங்கமும், முன்னைய அரசாங்கங்களும் நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் மனச்சுத்தியுடன் செயற்படாததாலேயே நாடு இப்போது பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

நாடு மீண்டெழுவதற்குத் தமிழ் மக்களினதும், புலம்பெயர் தமிழர்களினதும் ஒத்துழைப்பு தேவை என்று கூறும் சிறிலங்கா, இப்போதும் கூட தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பாகவோ– அவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவோ –எள்ளளவேனும் சிந்திக்கவில்லை என்பதைத்தான் நீதியமைச்சரின் கூற்று வெளிப்படுத்துகின்றது. இப்போதும் வாக்கு அரசியலையும், இனவாத அரசியலையும் கையிலெடுத்தே தெற்கு அரசியல் தலைமைகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

போர்க்குற்றச்சாட்டு என்ற விவகாரம் இலங்கையில் இனங்களுக்கிடையில் மீளவும் பிளவை ஏற்படுத்தவே வழிவகுக்கும் என்று ஐ.நாவுக்கு அறிவுரை கூறும் சிறிலங்கா, தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதி மறுக்கப்படுவது தமிழ் மக்களைத் தூரத் தள்ளி வைக்கும் என்பதைப் புரிந்துகொள்ள மறுக்கின்றது. நாட்டில் சரிசமமாக நடத்தப்படுகின்றோம் என்ற எண்ணம் தமிழ் மக்களுக்கு எப்போது ஏற்படுகின்றதோ, அப்போதுதான் அவர்கள் சிறிலங்காவுக்கான தங்கள் பயணத்தை ஆரம்பிப்பார்கள். அந்த எண்ணம் தமிழ் மக்களுக்கு ஏற்பட வேண்டுமானால் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளை பெரும்பான்மையினம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பரிகாரத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். தெற்கு அதை உணர்ந்து செயலாற்றவில்லை என்றால், தமிழ் மக்களின் ஒத்துழைப்பு , குறிப்பாக புலம்பெயர் தமிழர்களின் பொருளாதார ஒத்தாசை சிறிலங்காவுக்கு ஒருபோதும் கிடைக்காது என்பதுதான் உண்மை.

**நாளொரு நல்வார்த்தை**

எல்லாச் செயல்களும் எண்ணத்தின் விளைவுகளே, எனவே எண்ணங்களே முக்கியமானவை.
- சாய் பாபா




# ஒருவேளை உணவின்றி 57 லட்சம் மக்கள் தவிப்பு

## உலக உணவுத் திட்டம் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.11**

**சிறிலங்காவில் சுமார் 57 லட்சம் பேர் ஒருவேளை உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் உள்ளனர் என்று உலக உணவுத் திட்டத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையை கொண்டுள்ள இலங்கையில் கடந்த 70 வருடங்களில் ஏற்பட்ட மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் உலக உணவுத்திட்டம் கூறியுள்ளது. அவர்கள் மனிதாபிமான உணவு அவசியத்தின் பின்னணியில் உள்ளனர் என்றும் உணவுத்திட்டத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார சிரமங்கள் காரணமாக தமது அன்றாட வாழ்க்கையில் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்துக்கொள்ள முடியாத மிகவும் கஷ்ட நிலைமையை எதிர்நோக்கியுள்ள பல குடும்பங்கள் சம்பந்தமாக தற்போது ஊடகங்களில் பரவலாக செய்திகள் வெளியாகி வருவதைக் காண முடிகிறது என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பில் உணவுப் பணவீக்கம் (உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பு) 80 வீதமாக அதிகரித்துள்ளது என்று கொழும்பு நுகர்வோர் சுட்டெண் மூலம் தெரியவந்துள்ளது.

நாட்டில் கடந்த மே மாதம் 58 வீதமாக காணப்பட்ட உணவுப் பணவீக்கம் ஜூன் மாதம் 75.8 வீதமாக அிகரித்துள்ளது என்று கொழும்பு நுகர்வோர் சுட்டெண்ணில் பதிவாகியுள்ளது. (எ-இ)

# மூடப்படவுள்ள நோர்வேத் தூதரகம்

கொழும்பு, செப்.11

சிறிலங்காவில் உள்ள தூதரகத்தை மூடுவதற்கு நோர்வே தீர்மானித்துள்ளது. நோர்வேயின் வெளிநாட்டுச் சேவையில் மேற்கொள்ளப்படும் கட்டமைப்பின் ஒரு பகுதியாகவே தூதரகம் மூடப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள தூதரகத்தை மூடும் முடிவு நோர்வேக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என தூதரகம் தெரிவித்துள்ளது.

நீண்டகால இருதரப்பு இராஜதந்திர உறவுகளின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக, நோர்வே ஒரு தூதரை அங்கீகரித்து இலங்கையை உள்ளடக்கிய பிராந்தியத்தில் உள்ள மற்றொரு நோர்வே தூதரகத்தை இயக்க எதிர்பார்க்கிறது. கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் மூடப்படும் செய்தியைப் பகிர்ந்து கொள்வதில் நான் வருத்தமடைகிறேன் என்று நோர்வே தூதுவர் ட்ரைன் ஜோரன்லி எஸ்கெடால் கூறியுள்ளார்.

வெளிநாட்டுச் சேவையில் மேற்கொள்ளப்படும் கட்டமைப்பில் அடுத்தாண்டு ஜூலை மாத இறுதிக்குள் கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் உட்பட வெளிநாடுகளில் உள்ள ஐந்து தூதரகங்களை நிரந்தரமாக மூடவும் நோர்வே அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை 12.09.2022 திங்கட்கிழமை ஆவணி 27
சுபநேரம் : 12.03 - 01.33
ராகுகாலம்: 07.33 - 09.03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
11 செப்ரெம்பர் 2022

03

# எனது ஊரிலும்தான்...

சி. கதிர்காமநாதன்



தம்பி! இந்தியா போறது பற்றி முதலாளி பிற கொண்டும் கதைக்கேல்லையோ?" இரவு அம்மா கேட்டாள்.

"இன்னும் இல்லை. கொஞ்ச நாள் செல்லும் போல கிடக்கு."

நான் மெல்லப் பேசசை இழுத்தேன்.

"உனக்குப் போக விருப்பமில்லையோ? எங்களைப்பற்றி யோசியாதை. நீ போனலென்ன, நிண்டாலென்ன நாங்கள் அனுபவிக்கிறது அனுபவிக்கிறது தானே? ஏன் உனக்கு வாற சந்தர்ப்பத்தை விடுகிறாய்? போய் என்ன கனகாலமே நிக்கப்போறாய்?."

"ஒரு வருசம் நிப்பம். பிறகு பாத்துச் செய்யலாம். "

"ஒரு வருசம் தானேயடா தம்பி. அது 'டக்'கெண்டு ஓடிப் போயிடும் "

மறுபடியும் யோசனை என்னைப் பிடித்தது.

"என்ன சின்னப்பிள்ளை மாதிரிக் குழம்பிறாய்? அவன வன் ஓடித்தப்பிற வழியைப் பாக்கிறான். நீயெண்டால்...?"

"போறது கஷ்டமில்லையம்மா. உவங்கள் முதலாளிமாரை நம்பி வெளிக்கிடுறது தான் பயம். தங்கட அலுவல் முடி யிறவரையும் நல்லா நடிப்பாங்கள். காரியம் முடிஞ்சுதோ எங்களைத் தெருவிலை விட்டிட்டு வந்திடுவாங்கள். "

"உன்ரை முதலாளி நல்ல ஆள் தானே. கனக்க யோசிக் காமல் போற அலுவலைப் பார்."

அம்மா முடிவாகச் சொல்லிவிட்டாள்.

எல்லோரும் உற்சாகப்படுத்தினார்கள். இப்போதே பட்டியல் எழுதத் தொடங்கினாலும் தொடங்கியிருப்பார்கள்.

"நல்ல கதைப்புத்தகம் வாங்கலாம்" அண்ணாவுக்குப் புத் தகப் பைத்தியம். கடைசித்தங்கச்சிக்கு கோலம் போடுவது பிடிக்கும். நல்ல கோலப்புத்தகம் வாங்கலாமாம்.

"நல்லதாப்போச்சு. இந்தியாவிலை நல்ல மருந்து சம்பந் தமான புத்தகம் வாங்கலாம். அனுப்பிவை." என்றாள் என் அடுத்த தங்கை. அக்கா மட்டும் அமைதியாக இருந்தாள். இவர்களுக்கு இப்படி ஆசை என்றால் தம்பி சும்மா இருந்து விடுவானோ?

" அண்ணை தியானம், யோகாசனம் பற்றிய புத்தகங்கள் கனக்க இருக்கு. மறந்து போகாதை."

இனி அடுத்திருப்பது அம்மா தான். "நல்ல நூல் 'சாறி' அங்கை எடுக்கலாம். கட்ட நல்லாயிருக்கும்."

அப்பா தான் இடையில் அநியாயமாய்ப் போய்விட்டார்.



அவரும் இருந்திருந்தால் இதைத்தான் சொல்லியிருப்பார்.

"நல்ல கரைபோட்ட வேட்டி ,சால்வை எடுத்து அனுப்பு. கோயி லுக்குக் கட்டலாம். "

மனதில் தான் எத்தனை ஆசைகளை வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நான் அங்கு போய்க் கொஞ்சம் கொஞ் சமாக நிறைவேற்றலாமே. இரண்டு நாட்கள் வேலைக்குப் போகவில்லை. நாங்கள் இருந்த பகுதியில் ஊரடங்குச் சட்டம் போட்டிருந்தார்கள். முதல் நாளிரவு தேடுதல் நடவடிக்கையின் போது ஏற்பட்ட மோதலின் பலன் இது.

இப்படித்தான் அன்றொருநாள் இருபகுதியினருக்கும் மோதல் தொடங்கியது. யாரும் நினைத்துக்கூடப்பார்க்க வில்லை. சமாதானத்தின் தூதுவர்களாக வந்தவர்களுடன் சண்டை என்று யார்தான் எதிர்பார்ப்பார்கள்.? அன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஒருவிதமான பதற்றநிலை .

"கோட்டையைச் சுற்றிப்பெடியள் 'சென்றி' போட்டிட் டாங்கள்"

"என்ன விசரே கோட்டையில் இப்ப சிங்கள ஆமியில் லையே!"

"காலையில யாழ்ப்பாணம் போகேக்க கதைச்சினம் இரண்டு பகுதிக்கும் ஏதோ பிரச்சினை எண்டு"

ஊரடங்கு இல்லாத வேளைகளில் மட்டும் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற வீதிகளுக்கு வருவார்கள். பின்னர் வீட்டினுள் முடங்கிவிடுவார்கள். உண்மையில் எங்களின் நலன்காக்கத் தான் வந்தார் களா? அல்லது ........?

யாரிடம் சொல்லி ஆறுதல் பெறுவது? இதெல்லாம் நெஞ் சில் நிலைத்துவிட்ட சம்பவங்கள்.

இரண்டு நாள்கள் வேலைக்குப் போகக் கூடக் கஷ்டமாக இருந்தது. அவ்வளவுக்கு மனம் குழம்பிப் போய்க்கிடந்தது. இந்தியா விடயம் மனதை அரித்துக்கொண்டிருந்தது. எனக்கு ஏற்கனவே பாஸ்போட் இருந்தது மிகவும் உதவி யாக இருக்கும் போலத் தோன்றியது. கடைசியில் போக வேண்டிய நிலைதான் வந்துவிடுமா....?

காலை வேலைக்குப் போக ஆயத்தப்படுத்தும் போது அம்மா கேட்டாள், "காந்தன் வீட்டுப்பக்கம் நீ போகேல் லையே? ஆளையும் இந்தப்பக்கம் காணேல்லை."

"போகத்தான் வேணும். முந்திப்பக்கத்திலை இருந்தினம். பிரச்சினையிலை. இடம்பெயர்ந்து இப்ப இருக்கிற இட மும் தூரம் தான். பாப்பம்... நாளைக்கு ஞாயிற்றுக்கி ழமை தானே. போவம். வழியிலை போய்வாறது தான் பிரச்சினை."

"பிரச்சினைதான் .என்ன செய்யிறது? நல்லபெடியன். நாளைக்கு நிலைமையைப் பார்த்துப் போவன்." என் றாள் அம்மா.

"என்னம்மா வெள்ளைக்கொடியைக் காணேல்லை! ஆர் எடுத்தது?"

"உவள் தங்கச்சி எடுத்துக்கொண்டு போட்டாள். கடைக் குத்தான் போனவள் வந்திடுவாள்."

வீதியிலே பச்சை உடைகள், நடந்து போயின. இரவு ரோந்து முடிந்து திரும்பிப் போறாங்கள் போலும்.

"தம்பி! ஒண்டு சொல்ல மறந்து போனன். 'சென்றியிலை' நிண்டவங்கள் சொல்லிப்போட்டுப் போறாங்கள். எங்கட வீட்டுப்பக்கம் ஆக்கள் வந்துபோயினமாம். கவனமா இருக்கட்டாம். அதுதான் நான் சொந்தக்காரர் ஒருத்த ரையும் இந்தப்பக்கம் வரவேண்டாம் எண்டு சொல்லப் போறன்." அம்மா ஏக்கத்துடன் என்னைப் பார்த்துச் சொன்னாள். "ஏன் தம்பி, அவங்கள் ஆக்களிலை சந் தேகப்படுகிறாங்களோ?"

"அப்பிடித்தான் இருக்கும்"

தங்கை கடையிலிருந்து வந்துவிட்டாள். வெள்ளைக் கொடியை வாங்கிக்கொண்டேன்.

கடைக்குப் போனவுடன் முதலாளியின் மகன் சொன் னார், "இந்தக்கிழமைக்குள்ள போகலாம் எண்டு இருக் கிறன். என்னையும் ஆயத்தப்படுத்த வேண்டும். வீட்டுக் குப் போகேக்க காசுதாறன்."

நான் ஒன்றும் பேசாமல் நின்றேன்.

"எனக்கு உம்மை மாதிரி நம்பிக்கையான ஆள் தேவை. அதுதான் உம்மைக் கொண்டு போறன். பயப்படாமல் வாரும். கொஞ்சக்காலம் தானே." முந்தி இவரை நம்பிச் சிலவேலைகளில் ஈடுபட்ட போது ஏற்பட்ட சிரமம் தான் ஞாபகத்துக்கு வந்தது. "வீட்டிலை கதைச்சுப்போட்டுச் சொல்லிறன்..." என்று இழுத்தேன்.

"கதைக்கிறதுக்கு ஒண்டுமில்லை. பிறகு வந்து காசை வாங்கிக் கொண்டுபோம்"

(தொடரும்)

# தமிழர்களை...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது முழுநிறை நியாயாதிக்க விசாரணை முறையைக் காண்பித்துச் சர்வதேச நீதி என்பது தமிழர்களுக்கு எட்டாக் கனி என்ற அவ நம்பிக்கையை அமெரிக்கா உள்ளிட்ட மேற் குலகம் தோற்றுவித்து வருகின்றது. அதற்கு இந்தியாவும் ஒத்தூதுகின்றது. குறைந்தபட்சம் இப்படியான விசாரணை முறைகளோடு ஒத்துப்போனால்தான் நல்லது என்ற எண்ண ஓட்டத்தைத் தமிழ்த்தரப்பிடம் அமெரிக்கா போன்ற நாடுகள் விதைத்தும் வருகின்றன. பொருளாதார நெருக்கடியால் இலங்கைத்தீவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழர்கள் இலங்கை அரசாங்கத்துடன் சமாளித்துச் செல்ல வேண்டும் என்ற கருத்துக்களும் மிக நுட்பமாக ஊட்டப்பட்டு வருகின் றன. அத்துடன் இலங்கை சீனாவின் பக்கம் சென்றுவிடும். இது அமெரிக்காவுக்குப் பிடிக்காது என்ற கதைகளும் கட்ட விழ்த்து விடப்படுகின்றன. ஆனால் சிங்கள ஆட்சியாளர்களின் முழுமையான நிலைப்பாடு சீனாவின் பக்கம் செல்வதல்ல. ஆகவே இவ்வாறான கதைகள் மற்றும் அமெரிக்க - இந்திய அரசுகளின் புவிசார் அரசியல் - பொருளாதாரத் தேவைகள் போன்றவற்றுக்காகத் தமிழ்த்தரப்புத் தமது கோரிக்கைகளை விட்டுக் கொடுத்து அல்லது சமாளித்துச் செல்கின்ற அணுகு முறைகளைக் கைவிட வேண்டும். அந்த அணுகுமுறையிலும் கூட ஒரு பகுதி தமிழ்த்தரப்பு ரணில் விக்கிரமசிங்கவுடனும், மற்றைய தரப்பு சஜித் பிரேமதாஸவுடனும், சில புலம்பெயர் அமைப்புகள் அமெரிக்காவுடனும். வேறொருதரப்பு இந்தியா வின் பக்கமும் பிரிந்து நின்று வெவ்வேறாகச் செயற்படுகின் றன. அதாவது தமிழ்த்தரப்பு வெவ்வேறாகக் கையாளப்படு கின்றது.

ஆனால் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட, அதுவும் ஏதோ தமக்குச் சார்பாகவே எல்லாம் நடக்கின்றது என்ற பொய் யான பிம்பத்துக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அப்பாவித் தமிழ்த்தரப்பு அரசியல் - பொருளாதாரப் பாதுகாப்புகளின்றித் தவிக்கின்றது. தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்தும் தேர்தல் கட்சிகளாகவும் தேர்தல் காலங்களில் மாத்திரம் தமிழ்த்தேசி யத்தைப் பேசுகின்ற கட்சிகளாகவும் மாறிவிட்டன.

இந்தப் பின்புலத்திலேதான் ஜெனிவா மனித உரி மைச் பேரவையின் மூலம் தமது புவிசார் அரசியல் - பொரு ளாதார நலன்களுக்குச் சாதகமான முறையில் அமெரிக்க- இந்தியா போன்ற நாடுகள் தமிழ்த்தரப்பிடம் மிக இலகுவாகத் தமக்கு இஷ்டமான் விடயங்களைத் திணிக்க முற்படுகின்றன.

அதாவது 'சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தொல்லை கொடுக்காமல், இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் இருக்கும் தீர்வுக்கு இணங்கிச் செல்லுங்கள்' என்ற போதனை வழங்கப்படுகின்றது. அதற்காகவே 13 ஆவது திருத்தச் சட்ட மும் ஜெனிவாத் தீர்மானத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இனிமேலும் காலம் தாழ்த்தாமல் செயற் பாட்டில் இறங்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நேர்மை யாகச் சிந்திக்கும் ஆற்றலும், குறிப்பாக அமெரிக்க - இந்திய மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களுக்குள் சிக்குப்படாமல் சுயாதீனமாக இயங்கும் தன்மையும் கொண்ட பொது அமைப்புகளுக்கே இப்போது பொறுப்பு அதிகமாகி யுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வி.குமார்:

## அழியாப் பாடல்களில் அமிழ்ந்தவன்



○ கோகுலராகவன்

மெலடி கிங்' என அழைக்கப்பட்டவர் இசையமைப்பாளர் வி.குமார். தென்னிந்திய சினிமாவில் முத்தான பாடல்கள் தந்தும் பயன்படுத்தப்படாத இசையமைப்பாளர். வி.குமார் இசையமைத்து மிக பிரபல்யமான பாடல் "நான் உன்னை வாழ்த்தி பாடுகிறேன் நீ வரவேண்டும்." நூற்றுக்கு நூறு என்ற படத்தில் வரும்.

இவரது இசையில் இன்னும் நிறையப் பாடல்கள் மனதுக்கு இனிமையானவை.

வி.குமார் இயக்குநர் பாலசந்தரின் ஆரம்ப காலத் திரைப்படங்களுக்கான இசையமைப்பாளர். பாலசந்தரின்" நீர்க்குமிழி" திரைப்படத்தின்," ஆடி அடங்கும் வாழ்கையடா" பாடல் வி.குமாரின் இசைக்கோர்ப்பு.

"வெள்ளிவிழா" திரைப்படத்தில் தனது இசையில் எம். எஸ்.விஸ்வநாதனை "உனக்கென்ன குறைச்சல்" எனும் பாடலைப் பாட வைத்தவர் .

இதேபடத்தில் "காதோடுதான் நான் பேசுவேன்" எனும் மெல்லிசைப் பாடல் மூலம், துள்ளிசைப் பாடகியான எல்.ஆர். ஈஸ்வரியை மெல்லிசைப் பாடகி ஆக்கினார். பாலசந்தரின் 'எதிர்நீச்சலில்' படத்தில் இடம்பெற்ற "அடுத்தாத்து அம்புஜத்த பாத்தேளா"

எனும் குறும்பான, துள்ளலான பாடலும் இவருடையதே. இன்றும் 'சுப்பர் சிங்கர்' பாடகர்களின் தெரிவுப்பாடலாக அது இருக்கிறது.

அதே படத்தில் "தாமரைக்கன்னங்கள்" எனும் பாடல் பி.வி.சீனிவாஸ் - எஸ். ஜானகி குரலில் ஒலிக்கும் மெல்லிசையின் உச்சம். பாலசந்தர் பிரபல்யம் அடையத் தொடங்கிய பின்னர், வி.குமாரை கைவிட்டு எம்.எஸ்.விஸ்வநாதனை இசையமைக்கத் தேர்வு செய்துவிட்டார்.திரைத்துறையில் அணிகள் அடிக்கடி மாறும்.

ஆனால் பாலசந்தரின் வளர்ச்சியில் பெரும் பங்கு வி.குமாருக்குரியது. அத்தகைய பாடல்களை இசையமைத்துக் கொடுத்தார்.

இதற்கான பதிவு எதனையும் பாலசந்தர் தராதது இருவருக்குமான ஒத்திசைவை அறியாமல் போய்விடக் காரணமாகி விட்டது.

இதன் பின்னர் வி.குமார் "தேன் சிந்துதே வானம்" எனும் திரைப்படத்தில் இசையமைத்த "உன்னிடம் மயங்குகின்றேன், உள்ளத்தால் நெருங்கிறேன்" எனும் பாடல் காலத்தில் அழியாத சாகாவரம் பெற்ற பாடல். "வஞ்சி உன் வார்த்தை எல்லாம் சங்கீதம்" என்ற வரியை ஜேசுதாஸ் உருகி உருகி பாடுவார்.

இந்தப் பாடலின் இசையமைப்பின் போதும் வி.குமாரின் குழுவில் இணைந்து, இளையராஜா 'கிற்றார் ' வாசித்தார்.

ஜேசுதாஸ் தான் பாடிய பாடல்களில் தன் மனைவிக்கு மிகவும் பிடித்த பாடல் இதுவே எனக் குறிப்பிடுகிறார். கேட்க கேட்கச் சலிக்காத பாடல்களாக இசையமைப்பதில் குமார் மேதைமை மிக்கவர். இதுவே வி.குமாரின் வெற்றியாக இருந்தது. இதனால்தான் "மெல்லிசைச் சக்கரவர்த்தி" எனும் பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்த மெல்லிசை சக்கரவர்த்தி என்ற பட்டம் இலங்கை வானொலியால் வி. குமாருக்கு வழங்கப்பட்டது என்பது இன்னொரு சிறப்புத் தகவல். வி.குமார் இசையமைத்த பாடல்களை நான் அதிகம் கேட்டது இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில்தான்.

அந்தந்தத் திரைப்படங்களைப் பார்க்கக் கிடைத்தது ரூபவாகினியின் புண்ணியத்தில் தான். இரண்டுக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

முக்தா சீனிவாசன் இயக்கிய ஆயிரம் பொய்,நிறைகுடம் ஆகியஇரண்டு படங்களுக்கும் வி.குமார் இசை வழங்கினார். அதில் "நிறைகுடம்" திரைப்படத்தில் பிரபல்யமான பாடல்கள் இருந்தன.

"கண்ணொரு பக்கம் நெஞ்சொரு பக்கம் " எனும் பாடல் பிரபல்யமானது. சிறந்த இசையை வழங்கியும் முக்தா சீனிவாசன் தொடர்ந்து வி.குமாருக்கு வாய்ப்பு வழங்காததும் வியப்புத்தான்.

வி.குமார் எப்போதும் பாடல் இசையில் தொடக்க இசை, பல்லவிக்கும் அனுபல்லவிக்கும் இடையேயான இசை, பாடலுக்கிடையேயான இடையிசை . வாத்தியங்களின் தேர்வு என்பவற்றில் கவனமாக இருப்பார். இதனாலேயே அவரது பாடல்கள் கவனத்தைப் பெற்றன.

ரஜனியின் ஆரம்பகால படமான சதுரங்கம் படத்தின் இசையும் வி.குமார்தான். அந்தப் படத்தில் "மதனோற்சவம் ரதியோடுதான்", எனும் பாடல் தேர்ந்த இசைப்' பாடல். அந்தக் கால இளைஞர்கள் முணுமுணுத்த பாடல். இந்தப் பாடலில் சாயலில் தான், இசையமைப்பாளர் ஆதித்தன் 'ரோஜாமலரே 'படத்தில் "அழகோவியம் உயிரானதோ " எனும் பாடலை உருவாக்கியிருப்பார். வி.குமாரின் இசையில் மேஜர் சந்திரகாந்த் திரைப்படத்தில் நாகேஷ் பாடி நடித்த" கல்யாண சாப்பாடு போடவா" பாடல் நாகேஷுக்கு மேலும் ஒருபடி உயர்வைக் கொடுத்தது. வி.குமார் இசையமைத்த காலத்தில், எம்.எஸ்.வி, கே. வி.மகாதேவன். ரி ஆர். பாப்பா, வேதா ஆகியோர் கொடிகட்டிப் பறந்தனர்.

15



இருந்து கதைப்பம்

அதுவொரு சவால் மிகுந்த காலம். ஆனால் அவர்களிடமிருந்து வேறுபட்ட இசையை உருவாக்கி தனித்துவமாக வி.குமார் மிளிர்ந்தார்.

அவர் நூறு படங்களுக்கு மேல் இசையமைத்தவர். 1980 க்கு பின் வி.குமாருக்கு இறங்கு முகம். இதன் பின் இரண்டு படங்களுக்கு மட்டுமே இசையமைத்தார். ஒன்று, தியாகராஜன், சரிதா நடித்த "சங்கரி." மற்றையது, 1985 இல் முரளி, ரகுமான், ரேகா நடித்த "மீண்டும் மகான் "ஆகியவை .

இரண்டு படப்பாடல்களும் அவரது முன்னைய பாடல்களுக்கு நிகரானவை அல்ல. சங்கரியில் ராஜ்குமார் பாரதியை, வாணி ஜெயராமுடன் பாட வைத்தார்.

'மீண்டும் மகான்' வி.குமார் இசையமைத்த கடைசிப் படம். வி.குமாரின் மனைவி சுவர்ணாவும் ஒரு பின்னணி பாடகி. "இனங்களிலே என்ன இனம் பெண்ணினம்" என்ற பாடலில் ஜேசுதாஸுடனும்,

"என்னோடு என்னென்னவோ ரகசியம் "எனும் பாடலில் ஜெயச்சந்திரனுடனும் அவர் பாடி இருப்பார்.

திரைத்துறையில் குமாரின் தொய்வு காலத்தை பற்றி மிக வெறுப்பை குமாரின் மனைவி சுவர்ணா வெளிப்படுத்தினார். "நன்றி அற்றவர்கள் நிறைந்த இடம் திரைத்துறை" என்கிறார் சுவர்ணா.


வி.குமார் 1996 இல் காலமானார். ஆனால் அவரது இசையில், "நான் உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்" பாடல் ஒலித்தால் இப்போதும் ஒருகணம் நின்று கேட்காமல் தாண்டிப் போக முடியாது. திரையுலகம் ஒரு மாயை. எவ்வளவு சாதனை படைத்தாலும் ஒருநாள் ஒதுக்கியே தீரும் . வி.குமாரும் இதற்கு விதிவிலக்கல்ல.

(இன்னும் கதைப்பம்)

○ இராகவன்



# ஊர்ப்புதினம்



56

எங்கட போட்டோ செல்வண்ணை அண்டைக்கு எங்களையெடுத்த போட்டோ சுப்பறாயிருந்திச்சுது. அதைப் பாத்தாப்போல தான் எனக்கு இன்னும் ரண்டு மூண்டு போட்டோக்களுக்குப் போஸ் குடுத்திருக்கலாமெண்டு கவலையாயிருந்தது. பஞ்சு மாமாவின்ர கலியாண வீட்டுக்கு கறண்ட் இழுக்கலாமெண்டு எங்கடை இளையண்ணா வெளிக்கிட்டவன். வசந்தியக்காவின்ர அப்பு தான் 'ஒருநாள் கூத்துக்கு ஏன் மீசையெடுப்பான்? பகல்ல நடந்து முடியிற கலியாணத்துக்கேன் கறண்ட் இழுப்பான்? அப்படியேதுமெண்டால் லாம்பை வைச்சுச் சமாளிப்பம். இல்லாட்டில் உவன் பெரியானிட்டச் சொல்லி ஒரு பெற்றோமக்ஸ் எடுப்பம்" எண்டு மறுத்திட்டார். இல்லாட்டில் வலுஎழுப்பமாக் கறண்ட் இழுத்து, கலியாண வீட்டைக் கலர்புல்லாக்கியிருப்பான். எங்கடை இளையண்ணா பட்டங்கட்டிறது. படங்கீறுறது, டெக்கிறேசன் பண்ணுறது எண்டு இதுகளிலயெல்லாம் எந்தளவுக்கு விண்ணனோ அந்தளவுக்குக் கறண்ட் இழுக்கிறதிலயும் வலுவிண்ணன். அப்ப இந்தச் சண்டை சச்சரவுகள் தொடங்கி இயக்கங்கள் தலையெடுத்தாப்போல தொலைத்தொடர்பெல்லாம் முற்றா அறுந்துபோச்சு. இப்பவெல்லோ உந்த மொபைல் போன், சிமாட் போன் எல்லாம் வந்தது. முந்தியெல்லாம் லைன் போன்தானே? சரி, இப்ப விசயத்துக்கு வருவம்.

எங்கடை இளையண்ணா வீட்டுக்கு கறண்ட் இழுத்தகதையைப் பாப்பம். அவன் எங்கையோ சுத்திச் சுழண்டு கொஞ்சம் ரெலிபோன் லைன் வயறுகளைச் சுட்டுக்கொண்டு வந்தான். அப்ப எங்கடையூரில நல்ல வசதியான ஆக்களின்ர வீடுகளைத் தவிர மற்ற வீடுகளொண்டுக்கும் கறண்ட் இழுக்கேல்ல. கறண்ட் இழுக்காத வீடுகளில எங்கடை வீடும் ஒண்டு.

ரெலிபோன் லைன் வயறை இளையண்ணா கொண்டுவந்து வைச்சிருக்கேக்குள்ள முதல்ல எனக்கொண்டும் விளங்கேல்ல. கறண்ட் லைன் மெயின் றோட்டாலதான் போகுது. அதுக்குப் பக்கத்தில நான் ஏற்கனவே சொன்ன டாக்குத்தற்றை காணியிருக்கு. அதுக்கடுக்காத்தான் எங்கடை வீடும் வளவுமிருக்கு. அதாவது கறண்ட் லைனிலயிருந்து ஒரு அம்பது மீற்றர் தூரத்தில எங்கடை வீடிருக்கு. எங்கடை வீட்டின்ர பின்வளவு முழுக்கப் பனையள் நிக்குது. அதுக்குள்ள ஒரேயொரு வளைஞ்ச பனையும் நிக்குது. இளையண்ணா மெல்லியன் பிறவுணும் கடும் நீலமும் கலந்த பின்னல் வயர் ஒரு றோல், ஒரு ஹோல்டர், ஒரு குண்டு பல்ப், ஒரு தொங்கு ஸ்விட் (கறுப்பு) எல்லாம் வாங்கியந்து உள் வயறிங் வேலையெல்லாம் செய்துமுடிச்சான். பிறகு இரண்டு நீட்டுச் செப்புக் கம்பியள எடுத்து . வளைஞ்ச பனைவரைக்கும் லைன் அடிச்சான். அதிலை வைச்சு அந்த செப்புக் கம்பியளோட ரெலிபோன் லைன் வயறுகள் இரண்டை ஜொயின்ற் பண்ணினான். பிறகு ரெலிபோன் லைன் வயறுக்ள் முடியிற இடத்தில இரண்டு நோர்மல் வயறுகளை ஜொயின்ற் பண்ணி அதின்ர முடிவில இரண்டு வெள்ளிக்கம்பியளை எடுத்து வளைச்சுக் கொழுக்கியாக்கினான். இதுக்குள்ள ரெலிபோன் லைன் வயறைப் பற்றியொண்டு சொல்ல மறந்திட்டன். அது கறுப்பு நிறத்திலயிருக்கும். உள்ளுக்கை நல்ல ரெம்பறான ஆனால் வளைஞ்சு குடுக்கக் கூடிய செப்புக் கம்பியிருக்கு. இந்த லைன் அடிக்கிற வேலை முடிஞ்ச கையோட இளையண்ணா ரெலிபோன் லைன் வயறை இடுப்பில சுத்திக்கட்டிக் கொண்டு வளைஞ்ச பனையில் விறுவிறெண்டு முக்காவாசிக்கு ஏறி, வயறைச் சுத்திக் கட்டினான். பிறகு பக்கத்து நேர்ப்பனையிலயும் அதேயளவுக்கு ஏறிச் சுத்திகட்டினான். அப்பதான் எனக்கு அவன்ர பிளான் வடிவா விளங்கிச்சுது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 வீதமான உணவகங்கள் இதுவரை மூடப்பட்டுள்ளன

## உணவக உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்புடன் நுகர்வோர் அந்தப் பொருட்களை கொள்வனவு செய்யாத நிலையும் அதிகரித்து வருவதாக-அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக உணவகங்கள் 'மூடப்படும் அபாயம் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாடகை அடிப்படையில் நடத்தப்படும் சுமார் 35 வீதமான உணவகங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# மறைந்த எலிசபெத் மகாராணிக்கு இலங்கை பாராளுமன்றத்தில் அஞ்சலி

(கொழும்பு)

மறைந்த எலிசபெத் மகாராணிக்கு இலங்கை பாராளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

இதன்போது இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன கேட்டுக்கொண்டதற்கு இணங்க இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (நி)

# திடீரென ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றம்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்ப அபேவர்த்தன தலைமையில் ஆரம்பமானது. இந்நிலையில் நேற்றைய அமர்வில் 10 இற்கும் குறைவான எம்.பிக்களே வருகை தந்ததன் காரணமாக பாராளுமன்றம் செப்டெம்பர் 20 காலை 9.30 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (நி)

# சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை நாட்டிற்கு அழைக்க தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

75 ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்ட ஏற்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் சார்க் வெளி விவகார அமைச்சர்களை அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

# யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர், யாழ்ப்பாணம்

## நிறுவுநர் தின சிறப்பிதழ் - 2022 செப்டெம்பர் - 10

### வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

சோமாஸ்கந்தக் கல்லூரி அமைந்துள்ள யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் என்ற வகையில் இக் கல்லூரியின் ஸ்தாபகர் உயர்திரு. மழவராயர் கந்தையா அவர்களினால் இக்கல்லூரியினை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சோமாஸ்கந்தக் கல்லூரியின் தர்மகர்த்தா சபையின் தலைவர் என்ற வகையில் இக்கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசில்தினமும் சிறப்படைய வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

இலங்கை அரசாங்கம் அனைவருக்கும் கல்வி வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இலவசக் கல்வியினை வழங்க முற்பட்டமைக்கு முன்னதாகவே புத்தூர் கிராமத்தில் தனி ஒருவரின் சிந்தனையில் இலவசக்கல்வி பற்றிய சிந்தனை உதயமாகியதன் விளைவாகவே இக் கல்லூரி மிளிர்வதற்கு அடிகோலியது. அவர் பெரும் பொருட் செல்வத்தை கொண்டு இப்பாடசாலையை உருவாக்கியதோடு மட்டுமல்லாது அதன் இடையறாத கல்விப்பணிக்காக ஏராளமான சொத்துக்களின் வருமானங்களை பாடசாலைக்கு பயன்படும் படியாக ஏற்பாடு செய்து அதனை நிர்வகிப்பதற்காக ஒரு தர்மகர்த்தா சபையினையும் நிறுவிப் பெரும் சமூகப்பணி புரிந்தார்.

பாடசாலையோடு புத்தூர் சிவன் தேவஸ்தானம் மற்றும் அன்னதான சத்திரம் ஆகியவற்றையும் அமைத்து அவற்றிற்கு பெரும் செல்வங்களை வழங்கியுள்ளமையை அறிய முடிகின்றது. இன்று பாடசாலை பல சிறப்புக்களையும் சாதனைகளையும் தன்னகத்தே கொண்டு கோப்பாய் கோட்டத்தின் சகல வளங்களும் கொண்ட பாடசாலையாகத் திகழ்வது வள்ளலாரின் அற்பணியின் சிறப்பாலே ஆகும்.

மேலும் இப் பாடசாலை சாதனைகளின் சிகரங்களைத் தொடவும் இறைவனை வேண்டுவதோடு இன்றைய நன்நாளில் பரிசில்களைப் பெறுகின்ற மாணவச் செல்வங்களையும், அயராது உழைக்கின்ற பாடசாலைச் சமூகத்தினரையும் மனமகிழ்வோடு வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

**திரு.மு.இராதாக்கிருஷ்ணன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

### கோட்டக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

அமரர்.மழவராயர் கந்தையா அவர்களால் 1931 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது இன்று ஒரு 1AB பாடசாலையாகத் திகழ்கின்றது. அமரர். மழவராயர் கந்தையா அவர்களால் இப்பாடசாலைக்குச் சொத்துக்கள் வழங்கப்பட்டு. தர்மகர்த்தா சபையானது அமைக்கப்பட்டது. பாடசாலையின் கல்வி அபிவிருத்தியை மையமாகக் கொண்டு மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவது. பிற பாடசாலைகளுக்கில்லாத இப்பாடசாலைக்கே உரித்தான சிறப்பம்சமாகும். இப்பாடசாலையில் இன்று 1163 பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். வருடாந்தம் பல்கலைக்கழகம். தேசிய கல்வியியற்கல்லூரி. பிற கற்கை நெறிகள் என்பனவற்றிற்குப் பெருமளவான மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது பாராட்டுக்குரியது. இன்று இப்பாடசாலையானது அதிபர். ஆசிரியர்கள். பாடசாலைச் சமூகத்தினரின் ஒன்றிணைவால். முன்மாதிரியான பாடசாலையாகத் திகழ்ந்து வளர்ந்து வருகின்றது. மென்மேலும் வளர எனது ஆசியும் வாழ்த்துக்களும்.

**திரு.நா.சிவநேசன்,**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர்,**
**கோட்டக்கல்வி அலுவலகம், கோப்பாய்.**

### தர்மகர்த்தா சபையின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணக் கல்வி பாரம்பரியத்தில் சைவத்தமிழ் பண்பாட்டை பாதுகாக்கும் மையமாக விளங்கும் புத்தூர் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிக்கென ஒரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. அத்தகைய பாரம்பரிய வரலாறானது வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களின் அறம்பணிகளால் விழிப்புணர்வை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் ஆலயம். கல்விக்கூடம். அன்னசத்திரம் முதலான தர்மப்பணிகளைச் செய்ததோடு அவை சிறப்புற செயற்பட வேண்டும் என அசையும். அசையாச் சொத்துக்களையும் வழங்கி அவை செவ்வனே செயற்படுவதனை நிர்வகிக்கவென தர்மகர்த்தாக்களையும் அமைத்துள்ளார்.

அமரர் அவர்களால் செயற்படுத்தப்பட்ட கல்விக்கூடமானது 91 ஆண்டுகளை அடைந்து பல ஆயிரக் கணக்கான கல்விமான்களை உருவாக்கி ஆலமரமாக வளர்ந்துள்ளமை வெள்ளிடை மலை.

ஒரு நாட்டின் பெறுமதிமிக்க வளம் மாணவர்களே. இவர்கள் சிறந்த கல்வியைப் பெற்று உயர்நிலையடைந்து மேலும் நாடு போற்றும் கல்வியாளர்களையும் நற்பிரஜைகளையும் உருவாக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்க அமரர் நாமம்
வளர்க அவர் பணி

**தர்மகர்த்தா சபையினர்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.**



## உயர்திரு.மழவராயர் கந்தையா
## ஸ்தாபகர்

தந்தை:- சிற்றம்பலம் மணியகாரன் மகன் மழவராயர்
தாய்:- சின்னையா மகள்- சின்னத்தங்கச்சிப்பிள்ளை
தோற்றம்:- 10.09.1887 (விபவ ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் நாள் ரோகிணி நட்சத்திரம்)
மறைவு- 15.05.1936 (வைகாசி மாதம் பூர்வபக்ஷ பஞ்சமி)
அத்திபார தினம்:- தைமாத அத்த நட்சத்திரம்
வித்திபாரம்பதினம்:- வைகாசி மிருகசிரிட நட்சத்திரம்

### வள்ளலாரின் பணிகள்:

- விசாலாட்சி சமேத விசுவநாத பெருமானுக்கான ஆலயம் (புத்தூர் சிவன் ஆலயம்) அமைத்தமை.
- புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியை அமைத்து இலவசக் கல்வி போதனையை மேற்கொண்டமை.
- ஏழைகளின் பசிப்பிணி தீர்க்க அன்ன சத்திரம் அமைத்தமை.
- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைக்க கதிர்வேலாயுத சுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை நல்லூரில் வழங்கியமை.
- கோடிக்கணக்கான சொத்தை உலக நன்மைக்கு தர்ம சாதனங்களைச் செய்தமை.

### பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

வரலாற்று மேன்மைகளையும் சமய அற்புத நிகழ்வுகளையும் உயர் பண்பாட்டு விழுமியங்களையும் ஒருங்கே அமையப்பெற்ற புத்தூர் பதியில் அமரர். வள்ளல் மழவராயர் அவர்களும் அவர் மகன் கந்தையாவும் இணைந்து ஆன்மீகப் பசிக்கு மருந்தாகவும் அறிவுப் பசிக்கு விருந்தாகவும் வயிற்றுப் பசிக்கு உணவாகவும் சிவதர்மப் பணிகளைச் செய்ததுடன் அவை எந்தவித தடங்கலுமின்றி செயற்பட அசையும். அசையாச் சொத்துக்களையும் வழங்கி தனக்கென ஓர் இடத்தை ஆழப்பதித்துள்ளார். அமரர் அவர்களின் பணிகள் எல்லோர் மனங்களிலும் என்றென்றும் நினைவுகூரப்படுகிறது.

அமரர் பணியால் மேன்மையுற்ற கல்லூரியில் கல்வி கற்ற பலர் உள்நாடுகளிலும், புலம் பெயர் நாடுகளிலும் உயர் நிலையில் பணிபுரிந்து கல்லூரிக்கு பெருமை சேர்த்து வருகின்றனர். காலமறிந்து சூழறிந்து தேவையறிந்து அனைவருக்கும் கல்வியினை வழங்கி 90 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று கல்லூரியானது தேசியப் பாடசாலையாக மிளிர்வதையிட்டு அனைவரும் மகிழ்வடைகின்றோம்.

நிறுவுநர் நினைவு நாளும், பரிசில் தினமும் நடைபெறுகின்ற இன்றைய நன்நாளிலே எண்ணிய பணிகளையெல்லாம் திண்ணியமாய் முடித்த கலங்கரை விளக்கான அமரர் அவர்களை அனைவரும் ஒன்றிணைந்து நினைவு கூர்வதோடு அவரது எண்ணங்கள் ஈடேறி மென்மேலும் உயர்நிலையடைந்து "கற்றாங்கு ஒழுகுக" என்ற மகுடவாசகத்திற்கு அமைவாக மாணவர்கள் ஒழுக்கசீலர்களாகவும் நாடு போற்றும் கல்வி விற்பன்னர்களாகவும் வளர வாழ்த்துகின்றோம்.

வாழ்க அமரர் பணி!
வளர்க கல்லூரி!

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,**
**புத்தூர்.**

### சிவாச்சாரியரின் ஆசிச்செய்தி

ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் நிறுவுனராகிய மழவராயர் கந்தையா அவர்களின் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவாகிய இந் நன்நாளில் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் நன்கு கல்வி கற்று இந்தக் கல்லூரிக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை தேடித்தர வேண்டி எல்லாம் வல்ல ஸ்ரீ சோமாஸ்கந்தப் பெருமானை திரிகரண சுத்தியுடன் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

**சாமி சோமசுந்தரக்குருக்கள்,**
**சிவன் தேவஸ்தானம்,**
**புத்தூர்.**

### அதிபரின் வாழ்த்துச் செய்தி

"நான் கற்பிப்பது அறிவையல்ல அறிவைஅறியும் அறிவையே."
-ஆர்னால்ட்

இவ் அறிஞரின் கருத்திற்கு அமைய வள்ளலாரின் செயல் அமைந்திருக்கிறது எனலாம். ஒரு மனிதனைப் புனிதமாக்க அறிவு ஒன்றே ஆயுதம் எனக்கருதியதன் விளைவே இக் கல்லூரியின் தோற்றம் எனலாம்.

அன்னாரின் அன்றைய சிந்தனை இன்று எத்தனை சிறார்களுக்கு அறிவுப்பசியை போக்கியிருக்கிறது. மறைந்த வள்ளலாரின் பணிகள் இன்றும் மங்காமல் மறையாமல் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வள்ளலார் அமைத்த கல்லூரியில் நானும் கல்வி பயின்றவன் என்கின்ற ரீதியில் மகிழ்வடைகிறேன். அன்னார் இக் கல்லூரியை உருவாக்கும் போது எவ்வெவ் சிந்தனைகள் மனதில் தோன்றினவோ அவற்றை எம் மாணவர்கள் சிறப்புறப் பெற்று கல்வி. கலை. பண்பாடு. ஒழுக்கம் என யாவற்றிலும் சிறந்து கல்லூரியின் புகழைப் பறைசாற்ற வேண்டுமென நிறுவுநர் நாளும் பரிசில் தினமான இந் நன்நாளில் இறைவனை வேண்டுகின்றேன்.

இன்று எமது கல்லூரி வசதிமிக்க விஞ்ஞான ஆய்வு கூடம். தொழில்நுட்ப ஆய்வுகூடம். புத்தாக்க ஆய்வுகூடம். கணித ஆய்வு கூடம் என பல வளங்களையும் பெற்று தேசியப்பாடசாலை. மும்மொழிப்பாடசாலை என்ற புகழ் நாமங்களை சூடி நிற்கின்றது. இக் கல்லூரி மேலும் சிறப்படைந்து வள்ளலாரின் புகழ் மணம் பரப்ப இதய சுத்தியுடன் பணி செய்ய இந்நாளில் திடசங்கற்பம் பூணுவதோடு வள்ளலாரின் அருளாசியினையும் வேண்டி நிற்கின்றேன்

**திரு.சின்னத்தம்பி திரிகரன்**
**கல்லூரி முதல்வர்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி ,புத்தூர்.**

### ஆரம்ப பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி

பல்வேறு சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டு பல தசாப்தங்களாகக் கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரித் தாயின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்-2022 இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

அமரர்.மழவராயர் கந்தையா அவர்களின் எண்ணத்தில் உதித்த இந்தப் பாடசாலை எமது புத்தூர்ச் சமூகத்திற்கு கல்வி. கலை. அறிவியல். விளையாட்டு என அத்தனை விடயங்களையும் புகட்டும் ஓர் அறிவுக்கூடமாகத் திகழ்வதையிட்டு அமரர். மழவராயர் கந்தையா அவர்களை எமது சமூகம் என்றென்றும் நன்றியுணர்வுடன் நினைவுகூர வேண்டும். அண்மைக்காலமாக இப்பாடசாலையின் வளர்ச்சி அனைத்துத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருப்பது யாவரும் அறிந்த விடயமே. அதற்காக அயராது உழைத்து வரும் அதிபர். பிரதி அதிபர்கள். ஆசிரியர்கள். மாணவர்கள். பெற்றோர்கள். தர்மகர்த்தா சபையினர். பழைய மாணவர்கள் அனைவருக்கும் இந் நன் நாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை துறை ரீதியாக இன்றைய தினம் பரிசில்களைப் பெறும் மாணவச் செல்வங்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். மேலும் இக்கல்லூரித் தாயானவள் தன் மிடுக்குடன் வீறு நடைபோட எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு.செ.ஜெயகாந்தன்**
**அதிபர்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திரு. செல்லத்துரை இரட்னபிரகாசம்

யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாக கொண்டவரும், மத்திய வங்கியில் கடமை ஆற்றியவருமான திரு. S.இரட்னபிரகாசம் 08.09.2022 இறைவனுடன் சங்கமித்தார். அவர் மத்திய வங்கியில் கணக்காய்வு Director ஆக கடமையாற்றி 1990 ஆம் ஆண்டு இளைப்பாறியவர். இவர் காலஞ்சென்ற நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், சுகுமாரனின் (UK) அன்புத் தந்தையும், தாரினியின் (UK) அன்பு மாமனாரும், சரண்யா, கிறிஸ் டவுஸ் (UK) பாட்டனாரும், காலஞ்சென்ற கொக்குவிலைச் சேர்ந்த திரு-திருமதி செல்லதுரையின் அன்பு மகனும், திரு.நடராசா, காலஞ்சென்ற திருமதி.நடராசா, திருமதி.குமாரசாமி, திரு.இராசையா.மற்றும் திரு.சுப்பிரமணியம் அவர்களின் அன்பு சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் அவருடைய இல :115/4, W.A.Silva Mawatha கொழும்பு 06 இல்லத்தில் 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 11.09.2022 காலை 9.00 மணிக்கு நடைப்பெற்று, 11.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்:
R.சுகுமாரன் (மகன்) 2501477 (வீடு)
00947979841838 (Mobile)

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

CS 36443

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

# கோணேஸ்வரர் அபகரிப்பை ஆராயும் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், செப்.11

திருக்கோணேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் திட்டமிட்டு பெரும்பான்மையினத்தவருக்கான நிரந்தர வர்த்த நிலையங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அது தொடர்பில் ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூர் கோயில் வீதியிலுள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிராந்திய அலுவலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் அனைவரும் கலந்துகொண்டு திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்கு எதிரான கண்டனங்களைப் பதிவு செய்யவேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வரின் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கோணேஸ்வரர் ஆலய நிர்வாக சபையினர் உட்படப் பலர் கலந்துகொண்டு அங்குள்ள நிலைமை தொடர்பில் விளக்கமளிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் அமிர்தநாதர் அகஸ்ரின்

எங்கள் நிழல் நீரே
எங்கள் குடையும் நீரே

இப்போது எங்களுக்கு நிழலும் இல்லை
இப்போது எங்களுக்கு குடையும்
- இல்லை
ஒருநாள் எங்கள் நிழலாகவும்
- குடையாகவும்
வருவீரென நம்புகின்றோம்.



மண்ணில் 12.12.1939
விண்ணில் 11.09.2021

4 ஆம் வட்டாரம் மண்டைதீவு.
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு 22 - 02 - 1939



உதிர்வு 05 - 09 - 2022

## திருமதி யோகீஸ்வரி குணசிங்கம்

சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகீஸ்வரி குணசிங்கம் அவர்கள் கடந்த 05.09.2022 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தபால் அதிபர் இராசையா குணசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கஸ்தூரியார் வளவு வைத்திய சிரோன்மணி பரராஜசிங்கம், நல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசையா பாரிஜாதபுஷ்பம் தம்பதியரின் மூத்த மருமகளும், வத்சலா (இலங்கை) ராஜ்மோகன் (கனடா), கௌசலா (சிங்கப்பூர்), சியாமளா (லண்டன்), பத்மஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தசொரூபன், செல்வஅனுஷாதேவி, அருணன், இராமச்சந்திரன், குகதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இரகுநாதன், கமலாசனி, யோகநாதன், சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆரபி, சௌமியன், அபிரதன், அக்ஷயன், அனுஷியா, அனுருத்தன், சாகரி, சஜன், ரிஷி, நேத்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுகந்தினி, குகன் ஆகியோரின் பெரியம்மாவும், கோபிகா, சாம்பவி, மயூரன், கஸ்தூரி, விநோபா, சோபன், சோபிதா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பொன்னம்பலவாணர், கிருஷ்ணராணி, சிவநாதன் (ஓய்வுபெற்ற அதிகாரி - மின்சார சபை) சுகுணா, கங்கா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (11.09.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (93/21 இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்) நடைபெற்று தகனக்கிரியை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**தகவல் : ராஜ்மோகன் (மகன்)**
**0016477181968 (கனடா), 077 152 9148 (இலங்கை)**
**93/21, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்.**

(CS 20689) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 10 . 1939



மறைவு 08 . 09 . 2022

## குரூஸ் வில்பிரட்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விஸ்வமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட குரூஸ் வில்பிரட் 08.09.2022 கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குரூஸ் ரோசம்மா தம்பதிகளின் தவப்புதல்வனும், காலஞ்சென்ற டேவிட் ஜோசப்பின் தம்பதிகளின் மருமகனும், யூலியா கிறேசின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரோஸ்மலர், நீற்றா, மேரிமாகிறேற் (Canada), காலஞ்சென்ற விக்டர் ஆகியோரின் அன்பு சகோதரனும், றெமிஜியா பியற்றிஸ், ஜோண்சன் மக்சி (Johnson builders ), றொபின்சன் றெக்ஸ், பியூட்டி மாகிறேற், நிக்ஷன் ஜெரல், காலஞ்சென்ற ஜெராட் கொட்சன்,மேரி மில்கிறேற் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயராஜா, காலஞ்சென்ற மேரி ஸ்டெல்லா யூயின் (Teacher), மேரி மாகிறேற் (Teaching Hospital - Jaffna), லக்ஸ்மினி, சிவகுமார், விசாலினி (Teacher),றொசாந்தன் ஆகியோரின் மாமனாரும் பிரசன்னா, ஜது சிந்துஜா, டியூக் ஜொபித்தா (Teacher AISM), மேரி ஜொயனா, ஜெசூரன் (Engineering Student Malaysia), ஜெனித்தா, தஜீவன், மதுசா, ஜோன், கிங்சிலி, ஜோய்சன், ஜெரின், ஜெரோன், அஸ்வின், அசான் ஆகியோரின் பேரனும் தாய்சாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை 11.09.2022 (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று 12ம் கட்டை விஸ்வமடு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்**
**மகன் (ஜோன்சன்)**
**(T.P.: 0778 485 486**

(cs46451) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருக்கோணேஸ்வரம் ஆலய விவகாரம்;

# ஆக்கிரமிப்புகளை உடன் அகற்றி புனித பிரதேசமாக அறிவியுங்கள்

## சட்டத்தரணி ந.ஶ்ரீகாந்தா இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், செப். 11

தமிழர் தாயகத்தின் தலைநகர் என்று உணர்வுபூர்வமாக கருதப்பட்டு வந்திருக்கும் திருகோணமலையில் அமைந்துள்ள வரலாற்றுத் தொன்மைமிகு திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் சுற்றாடலில் உள்ள காணிகளை ஆக்கிரமித்து கையகப்படுத்திட எடுக்கப்படும் நடவடிக்கை பற்றிய செய்திகள் அபாய அறிவிப்பாக அமைந்துள்ளன. இவற்றை இல்லாதொழித்து திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டும் என அறுபதுகளில் தமிழர் தரப்பில் ஒலித்த அதே கோரிக்கையை மீண்டும் முன்வைப்பதற்குரிய நியாயமும் அவசியமும் முன்னெப்போதும் இல்லாத அளவில் இப்போது ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஶ்ரீகாந்தா தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கட்சியால் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

தமிழர் தாயகத்தின் கேந்திர பூமியான திருகோணமலை தொடர்ந்து எதிர்நோக்கி நிற்கும் ஊடுருவல்களை உற்று நோக்கும் எவருக்கும் நிலைமையைப் புரிந்து கொள்வது ஒன்றும் கடினமானது அல்ல. திருகோணமலை காப்பாற்றப்பட வேண்டுமானால் விட்டுக்கொடுப்புக்கள் தவிர்க்கப்பட முடியாதவை.

தமிழர் வரலாற்றை இருட்டடிப்புச் செய்வதிலும் வாழ்விடத்தை பறித்தெடுப்பதிலும் பேரினவாதிகள் கூட்டாக செயற்படுவதை எங்களில் எவரும் கைகட்டிப் பாத்திருக்க முடியாது. போரின்போது ஏற்பட்ட இடப்பெயர்வால் வெறிச்சோடிப்போன பழந்தமிழ்க் கிராமங்களும் அவர்களின் வயல் நிலங்களும் ஆக்கிரமிப்பாளர்களின் கைகளிலேயே பெருமளவில் தொடர்ந்து இருந்து வருகின்றன.

இந்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக இதுவரையில் எடுக்கப்பட்டு வந்துள்ள நடவடிக்கைகளில் இப்போது சுற்றுலாத்துறை அமைச்சும் இணைந்துள்ளது. இந்தக் கூட்டு முயற்சியே திருக்கோணேஸ்வரம் ஆலயக் காணிகளை அபகரிக்க முன்னெடுக்கப்படுகின்றது.

நல்லூர்க் கந்தன் ஆலயத் தேர்த் திருவிழாவுக்கு ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்திருக்கலாம். நல்லூர் சந்நிதான மடாதிபதியை தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் தேடி வந்து சந்தித்திருக்கலாம். இவை எல்லாம் சிங்கள பௌத்த பேரினவாதம் உலக அரங்கில் தன் சொந்தத் தேவைகளுக்காக அரங்கேற்றும் அப்பட்டமான சித்து விளையாடல்கள் மட்டுமே. இவை அறிவுள்ள தமிழர்கள் மத்தியில் ஒரு போதும் எடுபடாது. மாறாக பேரினவாதத்தின் இயல்பும் நோக்கமும் கோணேசர் குன்று உட்பட தமிழினத்தின் தொன்மையான வரலாற்றுச் சான்றுகளை அது தொடர்ந்து குறிவைத்துக் கொண்டிருப்பதில் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையை மாற்ற திருக்கோணேஸ்வரம் ஆலயத்தைப் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என அறுபதுகளில் தமிழர் தரப்பில் ஒலித்த அதே கோரிக்கையை மீண்டும் முன்வைப்பது தற்போது அவசியமானதொன்றாகும்- என்றுள்ளது. (ஏ-14)



அனலைதீவு புளியந்தீவு நாகேஸ்வரர் ஆலயத் தேர்த்திருவிழா நூற்றுக்கணக்கான பக்தர்கள் சூழ நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ஏ-14,9)

## பாடசாலைகளுக்கு ஒரு ரூபா வீதம் சேதனப் பசளை வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.11

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு ஒரு ரூபா வீதம் சேதனப் பசளைகளை விநியோகிப்பதற்கு கடந்த சபை அமர்வின்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பாடசாலைகளில் பெறப்படுகின்ற திண்மக் கழிவுகளில் இருந்து 5 வீத திண்மக்கழிவுகளின் மூலம் பெறப்படும் சேதனப் பசளையை பாடசாலைகளின் தோட்ட விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு ஒரு ரூபாவுக்கு வழங்கலாம் என்று பிரதேச சபையின் தவிசாளர் ஜெபநேசனால் திட்டமொன்று முன்வைக்கப்பட்டது.

இதன்மூலம் பாடசாலைகளில் சுழற்சி முறையில் ஒழுங்காக திண்மக்கழிவகற்றல் இடம்பெறுவதோடு. பாடசாலைகளின் சுத்தம் மற்றும் குறைந்த சலுகையிலான சேதனப் பசளை என பல்நோக்கங்களை அடைய முடியும். அத்துடன் இதற்கு சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்டமும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது என்றும் தெரிவித்தார். இதன் போது குறித்த திட்டத்துக்கு ஏகமனதான அங்கீகாரம் சபையால் வழங்கப்பட்டது. (ஏ-14,125)



## பிரபல ஓவியர் தவம் மறைவு

யாழ்ப்பாணம், செப். 11

வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த பிரபல ஓவியரும் அச்சுத்துறை நிபுணருமான தவம் என்று அழைக்கப்படும் வீ.சுப்பிரமணியம் தனது 74ஆவது வயதில் உடல்நலக்குறைவால் கடந்த புதன்கிழமை காலமானார்.

1960 ஆம் ஆண்டு தொடக்கம் பத்திரிகைத்துறை ஓவியராக பணியாற்றிய தவம் தமிழ் ஓவியர்கள் வரிசையில் முதன்மையானவர்.

நவீன அச்சுத்துறையில் ஆர்வம் கொண்ட அவர் கொழும்பில் அச்சு நிறுவனம் ஒன்றையும் நிறுவியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அவரது இறுதிக்கிரியையில் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு அவருக்கு அஞ்சலி செலுத்தினர். (ச)

## அரச உதவிகள் பெறுவோரை மீள்பதிவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 11

அரச நலத்திட்ட உதவிகளைப் பெறுபவர்கள் மீள பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்று வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான அரச நலன்புரி நன்மைகள் சபையின் நலத்திட்ட உதவித் தொகைகளைப் பெறுவதற்கு தகுதியான நபர்களை அடையாளம் காணும் பொருட்டே அவர்களை மீள பதிவு செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கத்தைக் கொண்ட நலன்புரி நன்மைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சகல நலன்புரி நிவாரண நன்மைக் கொடுப்பனவின் பொருட்டு தகுதியான நபர்களை அடையாளம் காண்பதற்காக புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கம் செயற்படுத்தும் சமுர்த்திக் கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு, விசேட தேவையுடையோர் கொடுப்பனவு, சிறுநீரக நோயக் கொடுப்பனவு, பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு போன்ற ஏதேனும் ஒரு நலத்திட்டத்தின் கீழ் பயனடைய தகுதியுடையவராயின் விண்ணப்படிவத்தை https://wbb.gov.lk/test/en/Documents/Dowunload/Benefisary_Form_tamil.pdf எனும் இணையத்தளத்தில் பிரவேசித்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்தை முழுமையாகப் பூரணப்படுத்தி சம்பந்தப்பட்ட கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தி பூரணப்படுத்தப்பட்ட பின்னர், விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் பிரதேச செயலக சமூக பாதுகாப்பு நலன்புரிகள் தொடர்பான உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஏ-14)

## வினைத்திறமை தடைப்பரீட்சை

வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II இல் கடமையாற்றும் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2018 (I) 2022 ஆனது ஏற்கனவே கடந்த மே மாதம் 14ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டு, நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமையின் காரணமாக மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டிருந்தது.

அதற்கமைய குறித்த பரீட்சையானது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படவுள்ளது.

பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் 0212219939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ் நகரில் உடனடி வேலை வாய்ப்பு

வாழ்வில் முன்னேறி சாதித்து காட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்பவரா நீங்கள்?

**வெளிநாட்டு சுற்றுலாக்கள் கார், வீடு வாங்கி ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டுமா?**



மாத வருமானம் 50,000 தொடக்கம்

- O/L பரீட்சை சித்தி பெற்றவர்கள்
- பகுதி நேர வேலை வாய்ப்பு
- தகுதிக்கேற்ற உயர்பதவிகள்

உங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

**077 560 2579, 076 890 3761**

(CS 20618) (3/6)

## வேலை வாய்ப்புகள் ஹோட்டல் ஓவியா

HOTEL OVIYA

**1. உணவகப் பணியாளர்கள் (Restaurant Stewards)**

அனுபவம் வாய்ந்த உணவகப்பணியாளர்கள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் (Motor bike license) உள்ள Home Delivery Boy தேவை.

**2. தொழில் நுட்பவியலாளர் (Technician)**

Electrical Plumbing, A/C Repairing Generator Repairing தொடர்பான அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**3. ஆண் வரவேற்பாளர் (Receptionist)**

தமிழ் சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சியுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

மேற்படி பதவிகளுக்கு குறைந்த 5 வருடங்கள் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

தொடர்புக்கு: முகாமையாளர் (Manager) : 077 366 0828

47, Mill Road, Vavuniya. Email :hoteloviya@gmail.com

(CS 1026) (3/6)

## சுற்றுலாவிடுதி விற்பனைக்கு



- கொடிகாமம் மிருசுவில் பிரதேசத்தில் சகல வசதிகளுடன் 14 படுக்கை அறைகளைக்கொண்ட சுற்றுலா விடுதி விற்பனைக்குண்டு
- மில்லியன் - 165
- உடன் விற்பனைக்கு
- சுமார் 25 நிமிடத்தில் யாழ்ப்பாண நகரத்திற்கு செல்ல முடியும்
- A தரத்திலான சுற்றுலா உல்லாச விடுதி என இலங்கை சுற்றுலா அதிகாரசபையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளன

(எ.38036) (2.6)

Rohana Group: 077 0024 763

077 7121 463 / 076 901 9947

## UK / CANADA குடி பெயர்வதற்கான வாய்ப்பு!!!

குடும்பத்துடன் UK / Canadaவில் குடிபெயர்வதற்கான விசா

நீங்கள் 30 வயதிற்கு மேற்பட்ட திருமணமானவராயின், உங்களுக்கு உங்களது குடும்பத்தினருடன் ஐக்கிய இராச்சியத்திற்கு மற்றும் கனடாவிற்கு சட்டபூர்வமாக சென்று குடிபெயர்வதற்கான ஓர் வாய்ப்பு!!!

**நீங்கள் J B P VISA SOLUTION ஐ தெரிவு செய்வது ஏன்?**

- 100% சரியான தகவல்களை வழங்குதல் மற்றும் சரியான வழிகாட்டுதல்
- எந்தவொரு தரகரும் இன்றி, 15 வருடங்கள் ஐரோப்பாவில் தங்கியுள்ள இலங்கை Consultant உடன் நேரடியாக தொடர்பு கொள்ள கூடிய வாய்ப்பு
- குறைந்த பட்ச சேவை கட்டணத்தில் ஆரம்பித்து மிகுதி பணத்தை தங்களது தேவை பூர்த்தியானதன் பின் செலுத்தக்கூடிய வாய்ப்பு
- ஐரோப்பிய ஒன்றியத்தின் எந்தவொரு நாட்டிலும், அல்லது இங்கிலாந்து மற்றும் கனடாவில் ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற்று கொடுப்பது தொடர்பில் Solicitorsகளின் ஒத்துழைப்பு.

தொடர்புகளுக்கு: 0772 281 085

E-Mail அனுப்புதல் : info@thevisasolution.com

J B P VISA SOLUTIONS (PVT) LTD

(Registered as a limited liability company in Sri Lanka PV 00203433)

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாண வைத்தியசாலை வீதியில் 33ம் இலக்கத்தில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

**1) முகாமையாளர் 2) சிட்டை எழுதுனர் (பில் கிளாக்)**

**3) பொதி செய்பவர்கள்**

அனுபவம் உள்ளவர்கள் (ஆண்கள்) விரும்பத்தக்கது. உங்கள் சுயவிபரக் கோவையை பின்வரும் ஈ.மெயிலுக்கு அனுப்பி வைக்கவும்.

**077 734 9649 ssyathu23@gmail.com**

## தேவை

புடைவை கடை வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை.

(CS 20717) (3/6) T.P 077 636 7393

## வாடகைக்கு

யாழ். சிவன் பண்ணை வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

076 023 9797 (CS 20613) (3/6)

## வேலையாள் தேவை

கொழும்பில் வீடொன்றில் நோயாளியை பார்வையிட வேலையாள் தேவை.

077 522 2533

## மணமகன் தேவை

1990 ஆம் ஆண்டு பிறந்த மூலம் நட்சத்திரமுடைய விவாகரத்தான மணமகளுக்கு மணமகன் தேவை. ஐரோப்பிய நாடுகள் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை

074 306 5931 (CS 20712) (3/6)

## தமிழ் பாட வகுப்புக்கள்

தரம். 09.10.க.பொ.த சாதாரண. க.பொ.த.உயர்தர வகுப்புக்களுக்கான தமிழ்மொழிப் பாடங்கள் யாழ்நகரின் அனுபவம் மிக்க பெண் ஆசிரியரால் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படுகின்றது.

(ஜ46402) (26)

077 532 7636

## வீடு வாடகைக்கு

மு/புதுக்குடியிருப்பு. கைவேலி திம்பிலி வீதியில் இணைந்த குளியலறை மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

077 166 2959 (CS 20703) (3/6)

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் அத்தியடி வீதியில் மாடி வீட்டின் மேல் பகுதி வாடகைக்கு உண்டு. (CS 20613) (3/6)

076 106 1503, 077 711 0960

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1991ஆம் ஆண்டு பிறந்த அரசாங்க உத்தியோகத்தராக உள்ள தனுசு ராசி பூராடம் 1ஆம் பாதம் மொத்த கிரக பாவம் 44 உயரம், 5 அடி 4 அங்குலம் உள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. (CS 20704) (3/6)

தொடர்புக்கு : 071 058 1725

## விநியோகஸ்தர் மற்றும் மொத்த வியாபாரிகள் தேவை

வட மாகாணம்

**நூடுல்ஸ், பப்படம்**

வடமாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கு அனுபவம் உள்ள விநியோகஸ்தர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் தேவை. கூடிய இலாபம் சிறந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

COLOMBO FOOD PVT LTD

Tel: 077 696 44 66

E-mail: colombofood51@gmail.com

## D P GLOBAL VENTURES (PVT) LTD.

Company Reg. No: PV 2804

## விநியோகஸ்தர் தேவை

டேவிட் பீரிஸ் குழுமத்தின் உணவு மற்றும் குடிபானப் பிரிவான, டி பி குளோபல் வெஞ்சர்ஸ் (பிரைவட்) லிமிடெட் (DPGV) நிறுவனம் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைக்காக இயற்கையான மற்றும் பெறுமதிசேர் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது.

ஜூஸ், தேன், கித்துல் பாணி மற்றும் மஞ்சள் பேஸ்ட் உள்ளிட்ட உயர் தரத்திலான உற்பத்திப் பொருட்களை அனைவரும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் கிடைக்கச் செய்யும் வகையில் தனது பிரசன்னத்தை விஸ்தரிக்கும் செயற்பாட்டில் DPGV ஈடுபட்டுள்ளது.

நாடு முழுவதும் நடுத்தர வணிகங்கள் மினி சூப்பர் மார்க்கெட்களில் விநியோகத்தினை மேற்கொள்ள விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.

**தேவைப்பாடு**

- வங்கி உத்தரவாதம் (ஆகக் குறைந்தது 1.5 மில்லியன் ரூபா)
- மீள் விநியோகத்துக்கான வாகன வசதி (சாரதி மற்றும் சுமை தூக்குபவருடன்)
- அலுவலக இடத்துடன் கூடிய முக்கிய இடத்தில் களஞ்சியத்துக்கான இடம்

தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு தினசரி மறு-விநியோக கொடுப்பனவுடன் கூடிய கவர்ச்சிகரமான விநியோகஸ்தருக்கான கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இரண்டு வார காலத்துக்குள் உங்கள் வணிகம் குறித்த விபரங்களை தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவைக்கவும்.

விற்பனை முகாமையாளர்
டி.பி குளோபல் வெஞ்சர்ஸ் (பிரைவட்) லிமிடெட்
இல. 144, ஷைலதலாராம வீதி,
மின்னஞ்சல்: DPGVsales@dpgle.com
011 4700600 / 077 5112819

## இலவச கருத்தரங்கு

வவுனியா, செப்.11

பல்கலைக்கழக அனுமதி தொடர்பான இலவச கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை பம்பைமடு வவுனியாப் பல்கலைக்கழகத்தில் சூசைரட்ணம் கட்டடத்தொகுதியில் நடைபெறவுள்ளது.

க.பொ.த. உயர்தரம் 2021 ஆண்டு பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்திருக்கும் அனைத்துப் பாட மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்தல், இணைய வழிப் பதிவு மற்றும் பல்கலைக்கழகப் பாடத்தெரிவு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு தொழில்வழிகாட்டல் அலகு, வவுனியாப் பல்கலைக்கழகத்தின் ஒழுங்கமைப்பில் வெளிச்சம் அறக்கட்டளையின் நிதி அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. (எ-110)

## இரண்டாம் கட்ட டீசல் விநியோகம்



சாவகச்சேரி, செப்.11

காலபோக நெற்செய்கைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கைதடி கமநல சேவை நிலைய பிரிவுக்குட்பட்ட கமக்கார அமைப்பு விவசாயிகளுக்கு இரண்டாம் கட்ட டீசல் நாளை திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது.

விவசாயிகள் தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன்கைதடி கமநல சேவைகள் நிலையத்துக்கு வரவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்



## கந்தசாமி தவமணி (முத்து அக்கா)

காளி கோவிலடி மூளாயினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விஸ்வகுல வழித்தோன்றல் கந்தசாமி தவமணி (முத்து அக்கா) கடந்த (08.09.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான நடராசா அன்னபூரணம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற நடராசா கந்தசாமியின் அன்பு மனைவியும், தங்கம்மா, காலஞ்சென்ற நாகராசா, நாகபூசணி, நாகேஸ்வரி, சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசதுரை, நாகேஸ்வரி, மங்களேஸ்வரி, இரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனியும், சுதாகரன், சுதாயினி, சுஜாதா, விஜிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், லதாயினி, லலிதா ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், குமுதினி, சுபாஸ்கரன், பிரபாகரன், பிரதீபன், ஜெயதீபன், மதனகுமார் ஆகியோரின் அருமை மாமியாரும், யுலக்ஷனா, தோஸ்மினா, சிவரூபன், சிவானா, சஷ்மிஹா, சபீனா, கஜீனா, அஜிபன், அதியன், அபிகாந், அபினயா, அபிலாஷ், லிந்திக்கா, தரங்கினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2022) திங்கட்கிழமை முற்பகல் 10:00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல் :
**077 891 8306** (CR 38044) (3/6) **குடும்பத்தினர்**

# இளைஞர்களை இணைக்கும் பொறுப்பு நாமல் எம்.பியிடம்!

கொழும்பு, செப்.11 ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்வதற்கான பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கட்சி தலைவரான மஹிந்த ராஜபக்ச, தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ச ஆகியோரே இந்தப் பொறுப்பை நாமலிடம் ஒப்படைத்துள்ளனர்.

அடுத்து நடைபெற்றவுள்ள உள்ளாட்சிமன்றத் தேர்தலை இலக்கு வைத்தே இதற்கான நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது. மொட்டுக் கட்சி மீது இளைஞர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். மக்கள் போராட்டத்தின் போது அதைக் காண முடிந்தது. இந்தநிலையில் இளைஞர்களை இலக்கு வைத்து மாவட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் பரப்புரை நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

(எ-44)


ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்
இல்லப்பணியாளர்கள்

## பதவி வெற்றிடங்கள்

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**1. பெண் மேற்பார்வையாளர்கள் (பெண், முதியோர், சிறுமிகளுக்காக)**

தகைமைகள்
- வயது 35 - 55
- கல்வி க.பொ.த சாதாரணதரம்
- சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
- தங்குமிடம் உணவு இலவசம்

**2. பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்**

தகைமைகள்
- வயது 35 - 55
- கல்வி க.பொ.த சாதாரணதரம்
- தொழில் அனுபவம்
- சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
- உணவு இலவசம்

**3. குறிப்பு :**

நேர்முகத் தேர்வில் கிராம சேவகரின் நற்சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். மற்றும் தேசிய அடையாள அட்டை, கல்வித்தகைமை அனுபவம் தொடர்பான சான்றிதழ்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**4. விண்ணப்ப முடிவுத் திகதி : 25.09.2022**

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி
ஸ்ரீபரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம்
வதிரி, கரவெட்டி.


தொலைபேசி இலக்கங்கள் : 021 226 3136
021 226 5069
077 514 7045

திரு. சி.ந.கதிர்வேலு
(தலைவர்)

(CR 38047) (3/6)


# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 10 . 1954



இறப்பு 07 . 09 . 2022

## அமரர் கந்தசாமி குணரட்ணம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடா (EAGLESTONE LANE BARRIE ONTARIO, CANADA வை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி குணரட்ணம் (பபி) கடந்த (07.09.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், மாசிலாமணி அவர்களின் அன்புக் கணவரும், யதுநந்தன் (கனடா), துஷ்யந்தன் (கனடா), துஷ்யந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமென்டா (கனடா), நீரஜா (கனடா), ரஞ்சித் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி அருளானந்தம், சதானந்தம், நித்தியானந்தம், பரமானந்தம் மற்றும் செல்வரத்தினம் (கனடா), இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அணிக்கா, ஈர்த்தன், அக்ஷே, அபினா, ரியானா, ஏற்றியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
**76/1, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.**
**தவானந்தன் - 077 028 6950**
**பிரேம்குமார் - 077 604 0543**
(CS 20722) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 - 09 - 1918



இறப்பு 09 - 09 - 2022

## திருமதி பாறுபதியார் ஆறுமுகம் (கண்மணி)

(வயது - 104)

யாழ். அராலி தெற்கை பிறப்பிடமாகவும் மலேசியா Kualalumpur, கனடா பிறம்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பாறுபதியார் ஆறுமுகம் (கண்மணி) அவர்கள் கடந்த (09.09.2022) வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர், சிவகாமிபிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற ஆறுமுகம் வேலுப்பிள்ளை (கணித சிங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், குகநேசன் (உடுவில்), இரவிநேசன், காலஞ்சென்ற ஐங்கரநேசன் (சிவம்), நிமலநேசன் (நேசன்), நிசாகரநேசன் (சோதி), நேசலட்சுமி (ஜெயா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, செல்லத்துரை, பொன்னம்பலம், விஸ்வலிங்கம் (ராசு), மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னம், பரமேஸ்வரி (ராணி), சந்திராதேவி, அருந்தவராசலட்சுமி (அமிலா), மனோகரரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜாத்தா (சுஜி - யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), தாட்சாயினி (ரேக்கா), தாஷா, ராஜினி, நேசஜீவன், மதன்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரீதிகா, சாணுகா, கம்சிகா, ஜெரன், ஜேடன், கனுஷ்கா, அபிஷேக், கிரிஷேக்கா, விஹானா, கேயான், அகிலேஷ், நிலக்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**No.34, "[illegible]தீபம்",
உடுவில் மேற்கு சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.**
**T.P : 077 921 9980**
**பேர்த்தியார்
திருமதி சுஜாத்தா தவநேசன்**
(CS 20721) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் - ஊர்காவற்றுறை இடையே பாதைச் சேவையை சீரமைக்க கோரிக்கை



யாழ்ப்பாணம், செப்.11

காரைநகர் - ஊர்காவற்றுறை பாதைச் சேவையை சீராக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அந்தப் பாதையூடாக போக்குவரத்துச் செய்யும் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இந்தப் பாதைச் சேவை இடம்பெறாமையால் தாங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ள அவர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்த விடயத்தில் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கின்றது எனவும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

காரைநகர் மற்றும் வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு உள்ளிட்ட பல இடங்களில் இருந்து ஊர்காவற்றுறை, வேலணை மற்றும் தீவுப் பிரதேசத்தில் உள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களும், இதேபோன்று தீவகத்தில் இருந்து காரைநகர் மற்றும் இதர பிரதேசங்களில் உள்ள அலுவலகங்களுக்கு செல்லும் அரச உத்தியோகத்தர்களும் மற்றும் பொதுமக்களும் என ஆயிரக்கணக்கானோர் தினமும் இந்தப் பாதை ஊடாகவே பயணத்தை மேற்கொள்கின்றோம்.

எரிபொருள் இன்மையைக் காரணம் காட்டி கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக பாதைச் சேவை இடம்பெறவில்லை. இந்தக் காலத்தில் தனியார் படகுச் சேவை இடம்பெற்று வருகின்றது. படகு மூலமான பயணம் ஆபத்துக்கள் நிறைந்தது என்பதுடன் எமது மோட்டார் சைக்கிள்களும் சேதமடைகின்றன. மோட்டார் சைக்கிள்களை ஏற்றி இறக்கும்போது கீழே வீழ்ந்து உதிரிப்பாகங்கள் சேதமடைகின்ற சம்பவங்களும் அவ்வப்போது நிகழ்கின்றன. இருவழிக் கட்டணமாக தினமும் 200 ரூபா பணம் செலுத்தவேண்டியுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் எமது வாகனங்களின் உதிரிப்பாகங்களை அடிக்கடி மாற்றுவது, தினமும் 200 ரூபா பணம் செலுத்துவது என்பதும் எங்களை கடுமையாகப் பாதித்துள்ளது. இந்த விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ந்தும் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கின்றது என நாம் உணர்கின்றோம். மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரமே தங்களிடம் இருப்பதால் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள முடியாத காலங்களில் சேவையை மேற்கொள்ள முடியாமல் உள்ளது என வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த விடயத்தில் தாங்கள் அதிகூடிய கரிசனை எடுத்து பாதைச் சேவை தடையின்றி சீராக நடைபெற ஏற்பாடு செய்வதன்மூலம் அரச உத்தியோகத்தர்களினதும் பொதுமக்களினதும் வீண் சிரமங்களுக்கும் பொருளாதார இழப்புக்களுக்கும் தீர்வு பெற்றுத்தருமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)


நிதி அமைச்சு

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை

ETF அறிவித்தல்

2021 ஆம் ஆண்டில் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த ETF அங்கத்தினர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்களை கோரல்

2021 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தினர்களின் 7,000 **பிள்ளைகளின்** கல்வி நடவடிக்கைகாக ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா **பன்னிரண்டாயிரம்** (ரூ.12,000/-) நிதி உதவி வழங்குவதற்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையானது தீர்மானித்துள்ளது.

விண்ணப்பங்களை எப்படி பெற்றுக்கொள்ளலாம்

- எமது வலைத்தளத்திலிருந்து - **www.etfb.lk**
- 2022.09.12 ஆம் திகதியிலிருந்து பின்வரும் அலுவலகங்களில் அலுவலக நேரங்களில்

பிராந்திய அலுவலகங்கள்

தலைமையகம் : புலமைப்பரிசில் பிரிவு, "மெஹெவர பியச" 19 வது மாடி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.

01. கம்பஹா — இல.58/B, மேரி பிசோ மாவத்தை, கம்பஹா. தொ.இல.033-2234520/ 033-4922530/033-3687610
02. கண்டி — இல.79, வீடமைப்பு செயலகம், யட்டிநுவர வீதி, கண்டி. தொ.இல.081-2233793/081-2237525,081-2232446
03. இரத்தினபுரி — இல.53/1/2, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. தொ.இல. 045-2222529 / 045-2222930
04. காலி — இல.30/1, ஸ்ரீ தேவமித்த வீதி, காலி. தொ.இல.091-2245814 / 091-2231129
05. அனுராதபுரம் — இல.87/25, முதலாம் ஒழுங்கை, தர்மபால மாவத்தை, அனுராதபுரம். தொ.இல. 025-2222185 / 025-2222150
06. மாத்தறை — இல.63/02, காளிதாச மாவத்தை, மாத்தறை. தொ.இல. 041-2231877 / 041-2237607 / 041-2224366
07. களுத்துறை — இல.294, காலி வீதி, களுத்துறை வடக்கு. தொ.இல. 034-2237722 / 034-2223040
08. கேகாலை — இல.247/1, கொழும்பு வீதி, கேகாலை. தொ.இல. 035-2222991
09. குருநாகல் — இல.27, செஞ்சிலுவை கட்டிடம், கச்சேரி வீதி, குருநாகல். தொ.இல. 037-2228194 / 037-2056394
10. ஹம்பாந்தோட்டை — இல.57, வில்மட் வீதி, பெத்தேவள, ஹம்பாந்தோட்டை. தொ.இல. 047-2222460 / 047-2222462
11. பதுளை — இல.9B, கங்கபட வீதி, பதுளை. தொ.இல.055-2225357 / 055-2224482
12. அம்பாறை — இல.693, மல்வத்த வீதி, அம்பாறை. தொ.இல. 063-2222845
13. யாழ்ப்பாணம் — இல. 86,1/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021-2220010
14. வவுனியா — இல. 69/1/1, மில் வீதி, வவுனியா. தொ.இல. 024-2228225
15. திருகோணமலை — இல.455, ஆண்டான்குளம், கண்டி வீதி, திருகோணமலை. தொ.இல. 026-2056606 / 026-2056607
16. நுவரெலியா — இல.56, லோசன் வீதி, நுவரெலியா. தொ.இல. 052-2224457 / 052-2224475
17. மஹரகம — இல.133, 2ஆம் மாடி, பிரிஸ்டல் ஹவுஸ், மஹரகம. தொ.இல.011-2745511
18. கட்டுபெத்த — இல.464, 2ஆம் மாடி, காலி வீதி, கட்டுபெத்த மொரட்டுவ. தொ.இல.011-2655080
19. நவம் மாவத்தை — இல.02,வேகந்த வீதி, கொழும்பு 02. தொ.இல.011-2302240

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி : 2022/10/14

பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் முடிவடையும் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளபடமாட்டாது.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

புலமைப்பரிசில் அலுவலர், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம், "மெஹெவர பியச" 19 வது மாடி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.

தலைவர்/பிரதான நிறைவேற்று அலுவலகர்,
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை.

மேலதிக விபரங்களுக்கு : புலமைப்பரிசில் அலுவலகம் 011-7747281, 011-7747282






வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தீர்த்தத் திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்துகொண்டு அன்னதானக் கந்தனின் அருளை வேண்டினர். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ்.பிரபல மோட்டார் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
யாழ்.நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.
வயதெல்லை 18-25

074 310 9487

## வேலையாட்கள் தேவை

யாழ்.கொழும்பு அதி சொகுசு பேருந்து சேவையில் ஈடுபடும் A/C பஸ்களுக்கு பஸ் உதவியாளர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

076 009 4946


# தூதுவருக்குக் கடிதம் அனுப்ப தடை ஏற்படுத்தப்படவில்லை!

### யாழ். மாநகர பதில் மேயர் விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஜப்பானால் வழங்கப்படவிருந்த வாகனங்களை கையேற்காது இழப்பை ஏற்படுத்தினார் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளருக்கு எதிராக மாநகரசபை உறுப்பினர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ள நிலையில், அந்த விவகாரத்தில் தான் தொடர்புபடவில்லை என்று யாழ்ப்பாணம் மாநகர சபை பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தி 09.09.2002ஆம் திகதிய "உதயன்" பத்திரிகையில் வெளியாகியிருந்தது. உறுப்பினர் மேற்கொண்ட முறைப்பாட்டில் ஜப்பான் அரசாங்கத்தால் வழங்கப்படவிருந்த நன்கொடை வாகனங்களின் தீர்வைக்கென அந் நாட்டுத் தூதரகத்தால் யாழ். மாநகர சபைக்கு வழங்கப்பட்ட நிதியை தூதரகம் மீள வழங்கக் கோரியதை அடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடியதன் அடிப்படையில் குறித்த வாகனங்களுக்கான வேண்டுகோளை முன்வைக்குமாறு ஜனாதிபதி தெரிவித்திருந்ததால், அது குறித்து ஜப்பானியத் தூதரகத் துக்கு பதில் முதல்வர் து.ஈசன் எழுத்துமூலம் வேண்டுகோள் அனுப்ப முற்பட்டதை மாநகர ஆணையாளர் தடுத்ததன் மூலம் சபை உறுப்பினர் களுக்கான சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விளக்கமளித்துள்ள பதில் முதல்வர் து.ஈசன், ஜப்பானியத் தூதுவருக்குக் கடிதம் எழுதமுற்பட்டபோது தடை ஏற்படுத்தப்பட்டது என்பது தவறு, அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

## 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

மண்ணில் 23 . 03 . 1954



விண்ணில் 12 . 08 . 2022

12.08.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவி

### அமரர் முத்தையா தங்கமணி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன்அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து உதவியோருக்கும், தொலைபேசி மற்றும் நவீன தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகளூடாகவும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணன் கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி சுசிலாதேவி மகேந்திரராசா

வேலணை மேற்கு 08ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசிலாதேவி மகேந்திரராசா அவர்கள் நேற்று (10.09.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் காவேரி தம்பதியினரின் அன்பு மகளும் திரு.செல்லத்துரை மகேந்திரராசா (அப்பு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும் காயத்திரி, கஜமுகன், விஜிதரன், வினோஜன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), நிறஞ்சனி (ஆசிரியர்,யா/நாரந்தனை கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் கனகலிங்கம், யோகலிங்கம், இராசலிங்கம், அமரர் சிவலிங்கம், குகராசா, அமரர் கலாதரன், அமரர் கலைமகள், இராசகுலதர்மலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அமரர் கனகரத்தினம், அமரர் செல்வராசா, அமரர் பரமேஸ்ரன், அமரர் திவ்யரத்தினம் கந்தசாமி, அமரர் செல்வராணி கந்தவேள், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமநாதன், தட்ஷாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜீவன், சாம்பவி, ஆரித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சிவலிங்கம் அசோக்குமார் (காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்-யாழ்ப்பாணம், பிரதேச சபை உறுப்பினர்-வேலணை), சிவலிங்கம் அச்சுதன், சிவலிங்கம் அருட்சுதன் (ஆசிரியர், வேலணை மத்திய கல்லூரி, தலைவர் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் சிற்பனை) ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் வேலணை மேற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

0777147923, 0779361331, 0773343983


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் 4G வலையமைப்பை சிறப்புறக்கொண்டிருக்கும் பல்தேசிய கொம்பனிக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- விற்பனைப்பிரதிநிதி (Sales Representative - ஆண்)
- சிம் அட்டை விற்பனைப்பிரதிநிதி (SIM Sales Representative - ஆண்,பெண் இருபாலரும்)

மேற்படி வெற்றிடங்களுக்கு முன் அனுபவம், கல்வித்தகைமை என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும். அடிப்படைச் சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள், தரகுப்பணம் உட்பட 60000 மேற்பட்ட சம்பளம் பெற்றுக்கொள்ளலாம்.
https://powerx.ampal.group/career/?g=22

தொடர்புகளுக்கு 078 696 7101
078 500 0580, 072 500 0580

HATCH
62/33, பழைய தபாற்கந்தோர் வீதி
யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியரும் சேவையாளர் சங்க உறுப்பினருமான
**திருமதி கிருத்திகா கஜன்**
அவர்களின் அன்பு மாமனார்

### திரு.இராசையா சுந்தரலிங்கம்



10.09.2022 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளவதோடு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சேவையாளர் சங்கம்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 12 - 1948



மறைவு 09 - 09 - 2022

### முத்து பாலசுப்பிரமணியம்

(முன்னாள் கே.கே.எஸ் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து பாலசுப்பிரமணியம் 09.09.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து சுந்தரி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற தம்பிஐயா லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரபாகரன், கமலன் (லக்ஸ்மி ஸ்ரோர்ஸ் K.K.S றோட் கொக்குவில்), பேசிலின் (ராஜன், பெரியகடை மார்க்கட்), சுமணன் (Sarvodaya Development Finance), கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் மஜீரன், லதீஸ்வரி (ஒஸ்மானியக் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கரிஸனா, தர்ணியா, சஸ்விகன், தேர்ச்சிகன், கிருசோபன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று,(11.09.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/10, சேர்ச் வீதி, ஓட்டுமடம்
யாழ்ப்பாணம்.

077 985 1217

தகவல்: குடும்பத்தினர்.
077 978 9341

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பொறுப்புக்கூறல்...

அத்துடன் தற்போதைய நெருக்கடியின் மையத்தில் உள்ள மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகளைக் கண்காணிப்பதற்கும், அறிக்கையிடுவதற்கும், பரிந்துரைகளை வழங்குவதற்கும் இலங்கை தொடர்பான நிபுணர் பொறிமுறையை அமைக்கவேண்டும் என்றும் மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இலங்கை கடுமையான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இலங்கையில் தண்டனையின்மை என்பது சட்டத்தின் ஆட்சி, நல்லிணக்கம், நிலையான அபிவிருத்தி என்பவற்றுக்கு மையத்தடையாக உள்ளது.

போர் முடிவடைந்து பதின்மூன்று வருடங்கள் கடந்தபோதும், ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பயனுள்ள நிலைமாறுகால நீதி செயல்முறையைத் தொடரத் தவறி வருகின்றன.

போர்க்குற்றவாளிகள் என்று கூறப்படுபவர்களுக்கு அரசாங்கப் பதவிகள் மற்றும் வெகுமதிகளை வழங்கியது. காணாமw;போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் அலுவலகம் போன்ற உள்நாட்டு நிலைமாற்று நீதி அமைப்புக்கள், இழப்பீடுகள் பெரும்பாலும் பொருத்தமற்றதாகிவிட்டன அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து சர்வதேச கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் மிகவும் முக்கியமானது.

இந்தநிலையில் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் திட்டத்தை பலப்படுத்துவதற்காக, இலங்கை மீதான தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு உறுப்பு நாடுகளை மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

அத்துடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்து, அதன் பயன்பாட்டுக்கு உடனடித் தடை விதிக்க வேண்டும். இடைப்பட்ட காலத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அமைதியான போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

அத்துடன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தை உடனடியாக ஏற்றுக்கொண்டு அதை முழுமையாக செயற்படுத்தவேண்டும் என்பதை இலங்கையிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் கோரியுள்ளது. (அ-ஒ-இ)

### காக்கா...

களுத்துறை மாவட்டத்தின், பாணந்துறை தேர்தல் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'இந்த நாட்டை வங்குரோத்தாக்கிய காக்கை கூட சுதந்திரமாக அமெரிக்கா செல்கிறது.

இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைந்து விரட்டியடித்த முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீண்டும் இலங்கைக்கு திரும்பி யுள்ளார். அவர்கள் அந்தச் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் போதே இந்நாட்டின் பொது மக்களை ஒன்றுதிரட்டி போராட்டத்தில் ஈடுபட்ட லஹிரு மற்றும் தமிதா போன்றோரை அரசாங்கம் சிறைக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றது.

அன்று இந்நாட்டில் அடக்குமுறையை ஆரம்பித்தவர்கள் மஹிந்த ராஜபக்சவுக்காக அலரி மாளிகையில் திரண்ட குண்டர்கள்தான். அவர்கள் அனைவரும் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றனர். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஒட்டுமொத்த நாட்டு மக்களும் ஒன்றிணைந்து பொதுப் போராட்டத்தின் மூலம் ஜனாதிபதியையும் பிரதமரையும் விரட்டியடித்தனர். ஆனால், அதற்கு பதிலாக மொட்டுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதியொருவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி மொட்டுக்கு தனது நன்றிக் கடனை நிறைவேற்றி வருகின்றார். மக்களுக்கு ஆற்ற வேண்டிய தமது கடமைகளை மறந்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி ராஜபக்சக்களுக்கு கடன்பட்டிருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி ராஜபக்சக்களுக்கு கடன் பட்டிருக்கவில்லை-என்றார். (அ-ஒ-இ)

### புத்தகங்களுக்கு...

களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அதேவேளை மாணவர்களுக்குத் தேவையான சீருடைகளில் 70 வீதமானவற்றை வழங்குவதற்கு சீன அரசாங்கம் முன்வந்துள்ளது.

அடுத்த ஆண்டுக்கான முதல் தவணை எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால், பாடப் புத்தகங்களை அச்சிடும் பணிகளை நிறைவு செய்ய முடியும் என்று கல்வி அமைச்சர் கூறினார். (அ-ஒ-இ)

### உள்நாட்டு...

உள்நாட்டுப் பொறிமுறைகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இதன்போது மீண்டும் வலியுறுத்தியதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி குறிப்பிட்டார்.

மனித உரிமை நடைமுறைகளை மேம்படுத்துவதில் இலங்கையின் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கான பங்களிப்பு குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் கூறினார். (அ-ஒ-இ)

### விவசாயிகளுக்கு..

வாகி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர் கொழும்பை நேற்று வந்தடைந்தார். அவர் ஜா -எல பகுதிக்குச் சென்று அங்குள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

விவசாயத்தின் போது எதிர்கொள்ள நேரிட்ட பல்வேறு சவால்கள் தொடர்பில் விவசாயிகளிடம் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர் கேட்டறிந்து கொண்டார். எரிபொருள் நெருக்கடி, உரமின்மை காரணமாக தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல்களை எதிர்கொண்டதாக அவர்கள் கூறினர்.

இந்நிலையில், நாட்டின் விவசாயிகளின் தேவைகளுக்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதாக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர் அறிவித்துள்ளார்.

அந்த நிதியில் விவசாயிகளுக்கு உரம் மற்றும் விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. (அ-ஒ,இ)

### எடை குறைத்து...

வேண்டும். ஆனால், சிலர் பாணின் நிறையை 300 அல்லது 350 கிராம் வரை குறைத்து 190 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். (அ-ஒ-இ)

### புலனாய்வுத்...

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அறிக்கை கடந்த 8 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

மீரிஹானவில் உள்ள முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வீடு தாக்கப்பட்டதைத் தொடர்ந்து 74 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் சேதப்படுத்தப்பட்டதைத் தடுப்பதற்கு புலனாய்வுப் பிரிவினர் போதிய தகவல்களை வழங்கிய போதிலும் பொலிஸாரும், இராணுவத்தினரும் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

குறிப்பாக வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதமாக்கப்படுவதைத் தடுக்குமாறு உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்ட போதிலும், கீழ்நிலை அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் வழங்கப்படவில்லை எனவும் தெரிய வந்துள்ளது.

சாட்சியங்களின்படி, பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் புலனாய்வு அமைப்புகளின் நடத்தையில் மூன்று குறைபாடுகளை விசாரணைக் குழு அவதானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-இ)

### நிலக்கரி...

விநியோகிப்பதற்கு விலை மனுவைப் பெற்றுக்கொண்ட விநியோகஸ்தர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அனல்மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியை பெற்றுக்கொள்வதற்காக, விநியோகத்தர்கள் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை தீர்க்கும் நோக்கில் வலுசக்தி அமைச்சருக்கும், விநியோகஸ்தர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை சட்டரீதியாகத் தீர்ப்பது மற்றும் நிலக்கரி கொள்வனவு தொடர்பிலான மாற்று யோசனைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

### உறவுகளுக்கு...

ஈர்த்துக் கொள்ளும் வகையில் நேற்றுப் பயணத்தை ஆரம்பித்தனர்.

குரலற்றவர்களின் குரல் அமைப்பு நேற்று பிற்பகல் 2 மணியளவில் நடத்திய ஊடக சந்திப்புக்கு பின்னர் இந்தப் பயணம் ஆரம்பமானது.

தேசிய சிறைக்கைதிகள் தினம் நாளை கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் இந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டதாகக் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் வகையில் அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இந்தப் பயணத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்தப் பயணம் நேற்று மாலை வவுனியாவை சென்றடைந்தது. (அ-ஒ,20)

### யாழ்ப்பாணத்தில்...

2019ஆம் ஆண்டில் மீண்டும் இது அதிகரித்து 15 ஆயிரத்து 99 பனை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் சங்கானை, காரைநகர், கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே அதிகளவான பனை மரங்கள் அனுமதியுடன் தறிக்கப்பட்டுள்ளன.

'சட்டபூர்வமான எண்ணிக்கை ஒரு லட்சம் எனில் அதற்கு மேலதிகமாக 50 ஆயிரம் பனை மரங்கள் சட்டபூர்வமற்ற முறையில் தறிக்கப்பட்டிருக்கலாம். பனை மரம் சட்டபூர்வமற்ற முறையில் தறிக்கப்படுவது குறைவு. அதன் மீதான கண்காணிப்பு அதிகம் என்பதால் இந்த நிலைமை. மேலும், கடந்த 8 ஆண்டு காலப் பகுதியில் தறிக்கப்பட்ட இந்த எண்ணிக்கையை விட பல மடங்கு எண்ணிக்கையில் பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

அதற்காக தறிக்கப்பட்டதையும், நடுகை செய்யப்பட்டதையும் நாம் ஒரு போதும் சமப்படுத்தமுடியாது. ஏனெனில், பனையின் முளைதிறன் குறைவு என்பதுடன், அது பயன்தருவதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும். தென்னைப் பயிர்ச்செய்கையை பெரிய அளவில் மேற்கொள்வதற்காக, பனை மரங்கள் உள்ள காணிகளை தீயிட்டு அழிக்கின்றனர்.

இவ்வாறு எமது பனை வளம் அழிக்கப்படுகின்றது' என்று வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டினார். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் தினத்தையொட்டி பொலிஸாரால் சமூகப்பணி



முல்லைத்தீவு, செப்.11
156 ஆவது பொலிஸ் தினத்தையொட்டி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பல்வேறு சமூகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. வள்ளிபுனம் பகுதியிலுள்ள நடனமிட்டான் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகிலுள்ள குளம் சுத்தம் செய்யப்பட்டு குளக்கரையில் மரக்கன்றுகள் நடப்பட்டன. புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 35 பேருக்கு உணவு வழங்கப்பட்டது. (ச-19)

## ஊர்காவற்றுறை தேவன்கணை பிள்ளையாருக்கு இன்று தேர்

ஊர்காவற்றுறை தேவன்கணை பிள்ளையார் தேர்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற உள்ளது. வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து மு.ப. 10 மணிக்கு தேரில் எழுந்தருளி வீதியுலா வருவார்.


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். 1976 இல் பிறந்த திருமணமாகாத B.Sc பட்டதாரி அரச உத்தியோக மணமகனுக்கு திருமணமாகாத படித்த நற்குணமுள்ள தகுந்த மணமகள் தேவை.

076 667 8996

## பெண் வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றிற்கு 18 - 30 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள் தேவை. சம்பளம் 35 000

077 937 0000 (CS 20709B) (3/6)

## வேலை ஆட்கள் தேவை

நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள இனிப்புத் தொழிற்சாலைக்கு வேலைக்கு பெண்கள் தேவை

077 969 3210

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் புடைவை நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் வரலாம். பழக விரும்புவர்களும் வரலாம்.

077 8799943

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு சமையலாளர் (Chief Cook) வேலைக்கு ஆள்கள் தேவை.

077 668 1840

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 1988.11.06 பிறந்த, அத்தம் 2ம் பாதம், கன்னி ராசி German Citizen மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 263 9947 (CS 20711) (3/6)

## காணிகள் விற்பனைக்கு

இருபாலை சந்திக்கும் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்குமிடையில் 4 பரப்பு (நான்கு) காணியும், அரியாலை பூம்புகார் றோட்டில் 8 பரப்பு (எட்டு) காணியும் விற்பனைக்கு உண்டு.

0771933490, 0761991779

## வேலை வாய்ப்பு

சுண்டுக்குளி ஆரம்பப் பாடசாலையில் தரம்: 2 இல் கல்வி கற்கும் சிறுமிக்கு உதவி ஆசிரியர் தேவை.
வேலை நேரம்: காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை
கச்சேரி, நல்லூர் பகுதிகளை அண்டி வசிப்போர் விரும்பத்தக்கது.
வயதெல்லை: 18 - 25 வரை
சம்பளம் விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

077 104 1923

## வெல்டிங் வேலையாள் தேவை

வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.
சம்பளம் 75,000 – 90,000 மதிய உணவுடன்

077 937 0000 (CS 20709A) (3/6)

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் முன்னணி நகை வியாபார காட்சி அறைக்கு கணினி அறிவுடைய நகை விற்பனையாளர் (ஆண்/பெண்) இருபாலாரும் தேவை. வெளிமாவட்ட ஆண் பணியாளர் தங்கி நின்று கடமை புரியலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

சந்தோஷ் ஜுவலறிஸ்
இல. 97A, 99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நியூ மைதிலி ஜுவலர்ஸ்
இல. 38,40 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(NEL 931) (3/6)

## சுத்திகரிப்பு பணியாளர் தேவை



யாழ்நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு பணியாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
மேலதிக தொடர்புகளுக்கு:
077 656 8168

## வாடகைக்கு

இல.305, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள 3 அறைகளில் 2 குளிரூட்டப்பட்ட அறைகளுடன் வாகனத்தரிப்பிடம் உள்ள டங்கலான வீடு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 071 8396 833
தொடர்புகொள்ளவேண்டிய நேரம்: 4.00 pm - 6.00 p.m
(cs 46460) (2.6)

## வாடகைக்கு கட்டடம்

யாழ். நகர் K.K.S. வீதியில் சிவன்கோவிலுக்கு அருகில் அமைந்த 3800 சதுர அடி விஸ்தீரணமான இரண்டாம் மாடியில் உள்ள கட்டடம் பகுதியாகவோ, முழுமையாகவோ வாடகைக்குண்டு.

077 310 7823

## Vacancy for Software Developer and Data Analyst

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for candidates for the posts of Web Application Developer and Data Analyst.

**Qualifications:**
- Degree in Computing/IT or equivalent experience
- Good knowledge of programming
- Knowledge in Database Management Systems
- Knowledge in Mobile programming is a plus.

**Send Your CV to siva@monthlywarranty.com**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.
- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150,000) மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 077 6585 999, 076 4365 814, 077 8748 135

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 18 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 076 755 8606, 077 911 6983

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் இயங்கும் மருத்துவ நிறுவனமொன்றிற்கு பணியாளர்கள் தேவை.
- கணக்கு உதவியாளர்கள் (பெண்கள்)
- கணினி உதவியாளர்கள் (பெண்கள்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும்

வனிக்கா மெடிக்கல்ஸ்
இல.203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(cs.46452) (2.6)

## GUEST HOUSE

உங்கள் விடுமுறை நாட்களை மகிழ்ச்சியுடன் கழித்திட கரவெட்டி விக்கினேஸ்வரா வீதியில் சகல வசதிகளோடும் கூடிய "தாமோர்" இல்லத்தை நாடுங்கள்.

தொடர்புகளுக்கு :
மயூரன் : 077 907 7254
மீரா : 0014168188546


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலோத்துங்கன் வாகையொடு மீண்டான்
குவலயமே நடுங்க அரசாண்டான்
'உலாத் தங்கள் பேரில், இதோ!'
ஒரு புலவர் குரலெடுத்து
'நிலாத் திங்கள்' எனத் தொடங்க மாண்டான்
-மஹாகவி

Registered as a Newspaper

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஆவணி 26 ஞாயிற்றுக்கிழமை (11.09.2022) சிகரம் : 115




# ஸ்ரீலங்காவின் மீட்பர் யார்?

ஒ ந.பரமேஸ்வரன்

ஸ்ரீலங்காவின் மீட்பர் யார் என்பதே இப்போது எல்லோரிடமும் உள்ள ஒற்றைக் கேள்வி. கடந்த சில தினங்களாக' உள்ளூர் ஊடகங்களிலும் சர்வதேச ஊடகங்களிலும் முக்கியமான இடம்பிடித்துள்ள செய்தி , சர்வதேச நாணய நிதியம் ஸ்ரீலங்காவை பிணை எடுத்துள்ளது என்பதுதான். இதில் வேடிக்கை என்னவென்றால் ஆங்கில ஊடகங்கள் அனைத்தும் (உள்ளூர்,சர்வதேசம்) ஒரே தலைப்பை பிரசுரித்திருப்பது தான் (IMF Bail Out Sri Lanka). இந்தச்செய்தியை படித்ததும் சிரிப்புத்தான் வருகிறது. உண்மையிலேயே சர்வதேச நாணய நிதியம், ஸ்ரீலங்காவை பிணை எடுத்துள்ளதா என்று கேட்டால் அல்லது ஆராய்ந்தால் அதற்கான பதில், இலங்கை சீனாவின் கடன்பொறியில் இருந்து சர்வதேச நாணய நிதியத்தின் கடன் பொறியில் சிக்கியுள்ளது என்பதாகத்தான் இருக்கும். சர்வதேச ஊடகங்கள் அனைத்தும் அமெரிக்கா அல்லது மேற்குலகம் சார்பானவை . அவை இப்படி ஒரு செய்தியை வெளியிடுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் சர்வதேச நாணய நிதியம் அமெரிக்கா அல்லது மேற்குலகின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகிறது என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

கடன் என்றால் அது யாரிடம் வாங்கினாலும் கடன் தான். அது சீனாவாக இருந்தாலென்ன, அமெரிக்காவாக இருந்தாலென்ன, எதியோப்பியாவாக இருந்தாலென்ன, கடன் என்றால் கடன் தான். இந்தக் கடனை எப்படி மீளப்பெறுவது என்று மேற்குலகத்துக்குத்தெரியும். அதற்காகவே சர்வதேச நாணய நிதியம், காலஎல்லையை நிர்ணயம் செய்கிறது. குறிப்பிட்ட காலஎல்லைக்குள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாவிட்டால் வட்டியை மட்டுமாவது செலுத்துங்கள்' என (கிராமப்புறங்களில் மீற்றர் வட்டிக்காரர்கள் கேட்பது போல்) சர்வதேச நாணய நிதியம் கேட்கும் . இது பொதுவான கடன் கொடுக்கல் வாங்கல் நடைமுறை.

சர்வதேச நாணய நிதியத்துக்கு நன்றாகவே தெரியும், இலங்கையால் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாது என்று. எனவே இலங்கை மேலதிக கடனை சர்வதேச நாணய நிதியத்திடம் கேட்கும். அப்போது இலங்கையை சர்வதேச நாணய நிதியத்தின் கடன்பொறியில் இலகுவாக சிக்க வைத்துவிடலாம். அதனூடாக இலங்கையை மேற்குலக சார்பான நாடாக மாற்றிவிடலாம் என்பதே சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம். ஆக மொத்தத்தில் இலங்கை சீனாவின் கடன்பொறியில் இருந்து சர்வதேச நாணய நிதியத்தின் கடன் பொறியில் சிக்கியுள்ளது என்பதே யதார்த்தம். இலங்கையின் இன்றைய நிலைமைக்கு, 1948ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையை ஆட்சி செய்தவர்கள் இலவசங்களை அள்ளி வழங்குவதற்காகவும், பயங்கரவாதம் என்ற பெயரில் தமிழர்களை அழிக்கும் நோக்குடனும் தொடர்ச்சியாக எதுவித அச்சமோ, கூச்சமோ இன்றி சர்வதேச நாடுகளிடம் கையேந்தியதே முக்கியமான காரணம். இதைவிடவும் இன்னொரு காரணி, நாம் இறக்குமதி செய்வதில் காட்டும் அக்கறையை ஏற்றுமதியில் காட்டுவதில்லை.

இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கைக்குள் புகுந்த காலத்தில், இலங்கையர்களுக்கு மிகவும் பிடித்த பருப்பு தொன் கணக்கில் இறக்குமதி செய்யப்பட்டது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பருப்புக்கு, ஒரு கிலோவுக்கு 10 சதம் வீதம் அரசியல்வாதிகளுக்கு கொமிசன் கிடைத்தது. இப்பிடி கொமிசன் கிடைத்தால் ஏன் ஏற்றுமதியைப் பற்றி அரசியல்வாதிகள் சிந்திக்கப் போகின்றார்கள்?

ஒருமுறை 'இதயம்பேசுகிறது' மணியம் இலங்கைக்கு வந்தபோது, சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவரிடம் இவ்வாறு சொன்னார், " இலங்கை நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட நாடுதான். ஆனால் ஜப்பானில் இருந்து வரும் ரின்மீனைத்தான் அதிகம் உண்கிறோம்"

இப்படி, உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தாமல், அவற்றை ஏற்றுமதி செய்து வருமானத்தைப் பெருக்காமல், தனியே இறக்குமதிப் பொருளாதரத்தை நம்பியிருந்தால் நாடு நாசமாகத்தானே செய்யும்?

கடன்பட்டு சொகுசு வாழ்க்கை வாழும் சிலர் எம்மிடையேயும் இருக்கிறார்கள். அவர்களைப் போன்றதே ஸ்ரீலங்காவின் நிலையும். 'விடங்கொண்ட இராமபாணம் செருக்களத்துற்றபோது கடன்பட்டார் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கைவேந்தன்' என கம்பன் பாடி விட்டு போய்விட்டான்; இருபதாம் அல்லது இருபத்தோராம் நூற்றண்டில் இலங்கையை ஆண்ட வேந்தர்கள் எவருமே கடன் வங்குவதைப்பற்றியோ அதை எவ்வாறு திருப்பி செலுத்துவது என்பது பற்றியோ எள்ளளவும் கவலைப்படவில்லை.விளைவு? இன்று மக்கள் அனைவரும் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பிச்சை எடுத்தாவது பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்குவேன் என கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த கூறியுள்ளார்.ஐயா கல்வியமைச்சரே! பிச்சை எடுத்து பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்குவதற்காகவா மக்கள் உங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்கள்? உங்களால் நாட்டை நிர்வகிக்க முடியாவிட்டால் போய் வீட்டுத்தோட்டம் செய்து உங்கள் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதர நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான ஒரே வழி ஏற்றுமதிகளை அதிகரித்து அந்நியச் செலாவணி இருப்பை அதிகரிப்பதே; தற்போது உள்ள சூழ்நிலையில் நாடாளுமன்றில் உள்ள 225 திருடர்களில் ஒருவராவது இதைப்பற்றி சிந்தித்ததாகத் தெரியவில்லை.

ரஷ்யாவை மீட்க லெனின் பிறந்தார். சீனாவை மீட்க மாவோ வந்தார், சிங்கப்பூரை மீட்க லீ வந்தார். ஸ்ரீலங்காவை மீட்க யார் வருவார்?

ஸ்ரீலங்காவை மீட்க எவருமே இல்லையென்றே குடுகுடுப்பைக்காரன் சொல்கிறான்.




> கடன்பட்டு சொகுசு வாழ்க்கை வாழும் சிலர் எம்மிடையேயும் இருக்கிறார்கள். அவர்களைப் போன்றதே ஸ்ரீலங்காவின் நிலையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மகாராணியின் கணவர் ஃபிலிப்**

1926 ஆம் ஆண்டு பிறந்த இளவரசி எலிசபெத், 1952 ஆம் ஆண்டு தனது தந்தையான ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் மரணத்துக்குப் பிறகு ராணியானார். அவர் 1947ஆம் ஆண்டு எடின்பரோ கோமகன் ஃபிலிப்பை திருமணம் செய்தார்.

டென்மார்க் மற்றும் கிரீஸின் இளவரசர்தான் ஃபிலிப். இவர் 1921 இல் பிறந்தார். இரண்டாம் உலகப் போரில் ரோயல் கடற்படையில் பணியாற்றினார். பின்னர் எலிசபெத்தை மணம் முடித்து இங்கிலாந்தின் முதற்குடி மகன் ஆனார். ஃபிலிப் 2017ஆம் ஆண்டு அரச கடமைகளில் இருந்து ஓய்வுபெற்றார். அவர் 2021 ஏப்ரல் 9, அன்று மரணமடைந்தார். எலிசபெத்-ஃபிலிப் தம்பதியருக்கு சார்ள்ஸ், ஆன், அண்ட்ரூ, எட்வேர்ட் என்னும் நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

**70** ஆண்டுகாலமாக இங்கிலாந்தை ஆட்சி செய்த மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் வாழ்வு 2022 செப்ரெம்பர் 22 ஆம் திகதியோடு – 96 வயதோடு – முடிவுக்கு வந்தது. மிக நீண்டகாலம் ராணியாக இருந்தவர் என்ற சாதனையோடு சாவெய்திய எலிசபெத் மகாராணி பற்றியே இப்போது திரும்பிய இடமெல்லாம் பேச்சு. எலிசபெத்துக்கு பின்னர் அவரது மகனான சார்ள்ஸ் மன்னராக முடிசூடுகின்றார். சார்ள்ஸுக்குப் பின்னர் அடுத்த முடிக்குரியவர் யார்? இங்கிலாந்து அரச குடும்பத்தின் உறுப்பினர்கள் யாவர்? என்பன பற்றிய சிறுகுறிப்புகள் இங்கே தரப்படுகின்றன.



# மகாராணியின் 'வாரிசுகள்'



**மன்னர் சார்ள்ஸ்**

மகாராணி எலிசபெத்தின் முடிக்குரிய வாரிசான சார்ள்ஸ், முன்னாள் வேல்ஸ் இளவரசியான டயானா ஸ்பென்சரை மணந்தார். ஜுலை 29, 1981 டயானா வேல்ஸ் இளவரசி ஆனார். அவர்களுக்கு வில்லியம், ஹரி என்று இரண்டு மகன்கள் பிறந்தனர். பிறகு, இவர்களுக்கு இடையே 1996இல் திருமண முறிவு ஏற்பட்டது. ஓகஸ்ட் 31, 1997 அன்று, இளவரசி டயானா பாரிஸில் கார் விபத்தில் கொல்லப்பட்டார். ஏப்ரல் 9, 2005 இல் கமிலா பார்க்கர் பவுல்ஸ் என்பவரை சார்ள்ஸ் இரண்டாவது திருமணம் செய்தார். மகாராணியின் மறைவுக்கு பின்னர் சார்ள்ஸ் மன்னராகியுள்ளார்.



**இளவரசி ஆன்**

மகாராணியின் இரண்டாவது பிள்ளையான ஆன், 1950 இல் பிறந்தவர். இவர் இருமுறை திருமணம் செய்தார். முதல் கணவர் கப்டன் மார்க் ஃபிலிப்ஸ், இரண்டாவது கணவர் அட்மிரல் டிமோடி லோரன்ஸ். ஆன்-மார்க் தம்பதியருக்கு பீட்டர், ஜாரா என்று இரு பிள்ளைகள் உள்ளனர். இளவரசி ஆன், சேவ் த சில்ட்ரன் போன்ற பொது அமைப்புகளில் தன்னார்வப் பணி செய்கிறார்.

**இளவரசர் ஹரி**



சார்ள்ஸ் - டயானா தம்பதியரின் இளைய மகனான இளவரசர் ஹரி, 1984 இல் பிறந்தார்.

இளவரசர் ஹரி சான்ட்ஹர்ஸ்ட் ரோயல் இராணுவ அக்கடமியில் பயிற்சி பெற்று இராணுவத்தில் லெப்டினன்ட் ஆனார். ஹெலிகொப்டர் பைலட்டாக பணியாற்றினார்.

அவர் கப்டன் வேல்ஸ் என்று அறியப்பட்டார். தனது 10 ஆண்டு கால ஆயுதப்படை சேவைகளில், ஆப்கானிஸ்தானில் இரண்டு முறை, 2012 முதல் 2013 வரை அபாச்சி ஹெலிகொப்டர் துணை விமானியாகவும் துப்பாக்கி சுடும் வீரராகவும் பணியாற்றினார். அவர் 2015இல் இராணுவத்தை விட்டு வெளியேறினார். இப்போது ஆபிரிக்காவில் காட்டுயிர் பாதுகாப்பு மற்றும் ஆயுதப் படைகளின் காயமடைந்த உறுப்பினர்களுக்கு இன்விக்டஸ் விளையாட்டுகளை ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட சேவைகளில் கவனம் செலுத்துகிறார்.

2018 மே 19 இல் அமெரிக்க நடிகை மேகன் மார்க்கலை ஹரி மணந்தார். ஜனவரி 2020இல், "அரச குடும்ப உறுப்பினர்களாக இருப்பதிலிருந்து விலகி, பிரிட்டன் மற்றும் வட அமெரிக்காவுக்கு இடையே எங்கள் வாழ்வை எளிமையாகக் கழிக்க விரும்புகிறோம். அதனால் நிதி ரீதியாக சுதந்திரமாகச் செயற்படவுள்ளோம்" என்று ஹரி-மார்க்கல் தம்பதியர் ஓர் அதிர்ச்சிகரமான அறிவிப்பை வெளியிட்டனர். அதன்படி அரண்மனையை விட்டு வெளியேறி, அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றனர்.

ஹரி- மார்க்கல் தம்பதியினருக்கு ஆர்ச்சி ஹரிசன் (ஆண்), லலிபெட் டயானா (பெண்) என்ற இரு குழந்தைகள் உள்ளனர். தனது தாயார் டயானாவின் பெயரையே தன் மகளுக்கும் ஹரி சூட்டியுள்ளார். அத்தோடு அரச குடும்பப் பட்டப் பெயர்களையும் தன் குழந்தைகளுக்கு வழங்காமல் ஹரி தவிர்த்திருந்தார்.



**இளவரசர் அண்ட்ரூ**

மகாராணியின் மூன்றாவது பிள்ளை இளவரசர் அண்ட்ரூ, 1960 பிறந்தார். இவர் சாரா பெர்குசன் என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு பியாட்ரீஸ், யூஜின் என இரு பிள்ளைகள் உள்ளனர். எனினும் 1996 இல் சாராவும், அண்ட்ரூவும் விவகாரத்துச் செய்தனர். அண்ட்ரூ 22 வருடங்கள் இங்கிலாந்துக் கடற்படையில் பணியாற்றினார்.

எனினும் அமெரிக்க கோடீஸ்வரரான ஜெஃப்ரி எப்ஸ்டீன் என்பவரோடு இவரும் இணைந்து பாலியல் கடத்தலில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. ஜெஃப்ரி எப்ஸ்டீன் தற்கொலை செய்துகொண்டார். அண்ட்ரூ தனக்கும் அவருக்கும் இடையிலான நட்பை விலக்கிவிட்டு, அரச கடமைகளில் இருந்து விலகினார். எனினும் தன் மீதான குற்றச்சாட்டை அவர் கடைசி வரை ஏற்கவில்லை.



**இளவரசர் வில்லியம்**

சார்ள்ஸ் - டயானா தம்பதியரின் மூத்த மகனான இளவரசர் வில்லியம், 1982 இல் பிறந்தார். இப்போது அவர்தான் சார்ள்ஸுக்கு பின்னர் மன்னராக முடிசூடும் தகுதி கொண்டவர்.

தாயார் டயானா உயிரிழந்தபோது வில்லியமுக்கு 15 வயது. பின்னர் அவர் செயின்ட் அண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் கற்கச் சென்றபோது, கேட் மிடில்டன் என்பவரோடு காதல் கொண்டு, அவரை 2011இல் மணம் முடித்தார். வில்லியம் - கேட் மிடில்டன் தம்பதியருக்கு ஜோர்ஜ் (ஆண்), சார்லோட் (பெண்), லூயி (ஆண்)என்ற மூன்று பிள்ளைகள் உள்ளனர். வில்லியம் மன்னரானால் அவருக்குப் பின்னர் முடிக்குரியவராக ஜோர்ஜ் விளங்குகின்றார்.

இளவரசர் வில்லியம், முதலில் கடற்படையிலும், பின்னர் வடக்கு வேல்ஸில் அமைந்துள்ள ஆங்கிலேசியில் இருக்கும் ஆர்ஏஃப் பள்ளத்தாக்கில் தேடல் மற்றும் மீட்பு விமானியாகவும் பணிபுரிந்தார். பின்னர் அரச குடும்பப் பணிகளின் நிமித்தம் அவர் 2017இல் விமானப்படையை விட்டு விலகினார்.

**இளவரசர் எட்வேர்ட்**



மகாராணியின் நான்காவது பிள்ளைதான் இளவரசர் எட்வேர்ட். இவர் 1964 இல் பிறந்தார். 1999ஆம் ஆண்டு சோஃபி ரைஸ் என்பவரை எட்வேர்ட் திருமணம் செய்தார். இந்தத் தம்பதிக்கு லேடி லூயி, விஸ்கவுன்ட் செவர்ன் ஆகிய இரண்டு பிள்ளைகள் உள்ளனர். கடற்படையில் பணியாற்றிய எட்வேர்ட் சிறிது காலத்துக்குப் பிறகு, சொந்தமாக தொலைக்காட்சி தயாரிப்பு நிறுவனம் ஒன்றை உருவாக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழர்களை ஏமாற்றுகின்றதா ஜெனிவா?

அ.நிக்ஸன்

ஈழத்தமிழர்களின் இன அழிப்பு விசாரணைக் கோரிக்கைகள் மாத்திரமல்ல, போர்க்குற்றங்களுக்கான சர்வதேச விசாரணைப் பொறிமுறையைக்கூட நீர்த்துப் போகச் செய்யும் நோக்கிலேயே ஜெனிவா மனித உரிமைகள் பேரவையும் , அமெரிக்கா போன்ற மேற்குலகமும், ஐரோப்பிய நாடுகளும், இந்தியாவும் செயற்படுகின்றன என்பது தற்போது பகிரங்கமாகவே வெளிப்பட்டுள்ளது.

'யுனிவேர்சல் யூறிஸ்டிக்சன்' (Universal Jurisdiction) எனப்படும் முழு நிறை நியாயாதிக்க விசாரணைப் பொறிமுறை ஊடாகப் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்கள் விசாரணை செய்யப்பட வேண்டுமென ஜெனிவா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் பரிந்துரைத்துள்ளார். இந்தப் பரிந்துரை சர்வதேச விசாரணை என்பதில் இருந்து கீழிறங்கிவரும் ஏற்பாடாகவே காணப்படுகின்றது.

சர்வதேச விசாரணை என்பதற்கும், யுனிவேர்சல் யூறிஸ்டிக்சன் எனப்படும் முழு நிறை நியாயாதிக்கம் எனப்படுகின்ற விசாரணைப் பொறிமுறைக்குமிடையே வேறுபாடுகள் உண்டு. சர்வதேச விசாரணை என்பது ஒரு சர்வதேச நீதிமன்றத்தால் அல்லது சர்வதேச சிறப்பு நீதிமன்ற முறை ஒன்றை உருவாக்கி நடத்தப்படுவது . இலங்கைக்கு வருகை தந்தும் கூட சர்வதேச நீதிபதிகள் விசாரணை நடத்தவதற்கான நியாயாதிக்கம் அங்கே உண்டு. ஆனால், முழுநிறை நியாயாதிக்க விசாரணை முறை என்பது, போர்க்குற்றவாளிகள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, அந்தந்த நாடுகளில் கைது செய்யப்பட்டு அந்தந்த நாட்டுச் சட்டங்களின் கீழ் விசாரணை செய்யப்படுவதைக் குறிக்கும். அதாவது ஒரு நாட்டின் எல்லைக்குள் சென்றால் மாத்திரமே, போர்க்குற்றவாளிகளைக் கைது செய்து விசாரணை நடத்தலாம். ஆனால் இலங்கையில் போர்க்குற்றம் புரிந்ததாகக் குறிப்பிட்ட சில இராணுவத் தளபதிகளுக்கு அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் பயணத் தடையை ஏற்கனவே விதித்திருக்கின்றன. வேண்டுமானால் இப் பயணத்தடையை ஏனைய நாடுகளும் பிறப்பிக்கலாம்.

ஆகவே பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்குச் சென்றால் விசாரணை நடத்தப்படும் என்று தெரிந்த நிலையில், போர்க்குற்றம் புரிந்தவர்களென அடையாளமிடப்பட்டுள்ள இலங்கை இராணுவ அதிகாரிகளோ அல்லது இலங்கையின் பாதுகாப்பு உயர் அதிகாரிகளோ குறித்த நாடுகளுக்குப் பயணம் செய்வதை தாமாகவே தவிர்த்துக் கொள்வர். வெளிநாடுகளுக்குச் சென்றால் மாத்திரமே விசாரணையை நடத்த முடியும் என்பதால், இலங்கைக்கு வந்தோ அல்லது வேறு நாடுகளுக்குச் சென்றோ போர்க்குற்றம் புரிந்த எந்த ஒரு படை அதிகாரிகளையும் எந்த ஒரு நாட்டுச் சட்டத்தின் கீழும் கைது செய்ய முடியாது. இதனால் அமெரிக்கா போன்ற சில நாடுகள் இலங்கை இராணுவ மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மீது விதிக்கின்ற பயணத்தடை கூட இலங்கை ஒற்றை ஆட்சிக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் ஒரு உத்திதான் என்பது கண்கூடு.

இந்த நிலையில் 'யுனிவேர்சல் யூறிஸ்டிக்சன் 'எனப்படும் முழுநிறை நியாயாதிக்க விசாரணை முறை என்பது வெறுமனே காலம் கடத்தும் ஒரு செயற்பாடு மாத்திரமே. அத்துடன் தமிழர்களைத் திருப்திப்படுத்த முடியுமெனவும் நம்புகின்றனர். இருந்தாலும் இந்த விசாரணை முறையைக் கூட இந்தியா விரும்பவில்லை என்றே தெரிகின்றது. ஏற்கனவே கூறப்பட்ட சர்வதேச விசாரணைப் பொறிமுறைகளையும் இந்தியா விரும்பியிருக்கவில்லை.

ஏனெனில் சர்வதேச விசாரணை என்பதற்குள் சாட்சியப் பொறிமுறை உள்ளது. இதனால் சாட்சியங்கள் திரட்டப்பட்டு அதனடிப்படையில் விசாரணை நடத்தப்படும் முறையை இந்தியா விரும்பவில்லை என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்று. ஏனெனில் இந்தியாவில் காஷ்மீர் பிரச்சினை உண்டு. அத்துடன் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் இந்தியப் படைகள், இந்தியப் பொலிஸார் மீதும் உண்டு. இந்தப் பின்னணியிலேயே இலங்கை விவகாரத்திலும் மேற்படி விசாரணை முறைகள் எதற்கும் இந்தியா விரும்பவில்லை என்பது பட்டவர்த்தனம். ஆனால் 2015 இல் மைத்திரி =ரணில் அரசாங்கத்தில் கொண்டுவரப்பட்டதுபோன்ற ஒரு புதிய தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்படும்வரை, 'யுனிவேர்சல் யூறிஸ்டிக்சன்' எனப்படும் முழுநிறை நியாயாதிக்க விசாரணை முறையைக் காண்பித்து இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க மேற்கு நாடுகள் முற்படுகின்றன.

டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் காலத்தில் அமெரிக்கா சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகியிருந்தபோது, ஏனைய மேற்கு நாடுகள் முழுநிறை நியாயாதிக்க முறையை முன்வைத்தன. அதற்கான சாட்சியப் பொறிமுறை ஒன்றும் உருவாக்கப்பட்டது. ஆகவே அமெரிக்காவின் இது தொடர்பான நிலைப்பாடு இனிமேல்தான் தெரியவரும். 2015 இல் இலங்கை ஒற்றையாட்சி அரசுக்குச் சாதகமான முறையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் கூட, அதற்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கவில்லை. ஏனெனில் அந்தத் தீர்மானத்தில் கலப்புமுறை விசாரணைப் பொறிமுறை இருந்தது. அதேபோன்று இந்த ஆண்டும் புதிய பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து அதனைத் தீர்மானமாக அமெரிக்கா நிறைவேற்றினாலும், அந்தத் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவாக வாக்களிக்கக்கூடிய வாய்ப்பில்லை.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவோடு இந்தியா இணைந்து ஒரே புள்ளியில் செயற்பட்டாலும், போர்க் குற்றங்களுக்கான எந்த ஒரு விசாரணைப் பொறிமுறைக்கும் இந்தியா ஒத்துழைக்காது . இதனாலேயே ஜெனிவாத் தீர்மானத்துக்கு ஆதரவாகப் பல சந்தர்ப்பங்களில் வாக்களிக்காமல் இந்தியா நழுவிச் சென்றிருந்தது. அத்துடன் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் தன்னை ஒரு முதலாளியாக நிலை நிறுத்தவே இந்தியாவும் விரும்புகின்றது. இதனால் அமெரிக்காவும், இலங்கை விவகாரத்தில் தற்போதைக்கு முழுநிறை நியாயாதிக்க விசாரணை முறையைக் காண்பித்து அழுத்தம் கொடுத்துவிட்டுப் பின்னர் அந்த விசாரணை முறையையும் இல்லாமல் செய்து இந்தியாவோடுதான் இணைந்து நிற்கும்.

இந்தியாவுடன் சேர்ந்து இயங்கும் அமெரிக்காவின் இந்த அணுகுமுறை என்பது ஈழத்தமிழர்களுக்குக் கடந்தகாலப் படிப்பினை. இந்த நிலையில், இன அழிப்புத் தொடர்பாக முழுமையான சர்வதேச விசாரணையைக் கோர வேண்டிய தமிழ்த்தரப்பு, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் (International Criminal CourtICC) இலங்கையைப் பாரப்படுத்த வேண்டுமெனக் கோருகின்றது.

ஆனால் இது தவறு. ஏனெனில் 2002 ஆம் ஆண்டுதான் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. ஆகவே அங்கு இலங்கை விடயம் பாரப்படுத்தப்பட்டால், 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சம்பவங்கள் மாத்திரமே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அதாவது 2002 இல் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்குப் பின்னர், மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் 2006 ஆம் ஆண்டு மீண்டும் போர் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே அனைத்து விசாரணைகளும் நடத்தப்படும். அப்படியானால் இன அழிப்பு விசாரணையாக அதனை நடத்த முடியாது.

வெறுமனே இருதரப்பு போர்க்குற்ற விசாரணையாகவும் குறிப்பிட்ட சில இராணுவத் தளபதிகள் மாத்திரமே தண்டிக்கப்படுகின்ற, அல்லது தண்டனை வழங்கப்பட்ட பின்னர் பொது மன்னிப்பு வழங்குவதாகவே இது அமையும். சிலவேளைகளில் 2002 க்கு பின்னர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்படுவர். இந்தப் பொதுமன்னிப்புக்களின் பின்னர் இன அழிப்புக் குறித்த விசாரணையைத் தமிழ்த்தரப்புக் கோரவே முடியாது. ஆகவே தான் 1951 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரையான காலம் வரை இன அழிப்பு விசாரணை வேண்டுமானால், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் இலங்கையைப் பாரப்படுத்த வேண்டுமெனக் கோருவதில் அர்த்தம் இல்லை. எனவே இன அழிப்பு, மனித குலத்துக்கு எதிரான படுகொலைகள், போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமானால், சர்வதேசச் சிறப்புக் குற்றவியல் விசாரணைப் பொறிமுறை ஒன்றையே தமிழ்த்தரப்பு அழுத்தம் திருத்தமாகக் கோர வேண்டும்.

12 ஆம் திகதி ஒக்ரோபர் மாதம் 1950 அன்று இலங்கை அரசு (சிலோன்) ஐ.நா.உறுப்புரிமையைப் பெறுவதற்கு முன்னராகவே இன அழிப்பு என்ற குற்றத்தைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச சாசனத்தை ஏற்றுக் கொண்டது. இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச சாசனத்தின் நியாயாதிக்கம் இலங்கைத்தீவை மட்டுமல்ல ஏனைய நாடுகளையும் உள்ளடக்கி 1951 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் நாளில் இருந்து ஏற்பட்டு விட்டது. ஆகவே இலங்கையைப் பொறுத்தவரை இங்கு நடைபெற்ற இன அழிப்புக் குற்றம் சர்வதேச விசாரணையின் நியாயாதிக்கத்துக்குக் குறித்த நாளில் இருந்து உட்படுத்தக்கூடியது.

ருவாண்டா, முன்னைய யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளுக்கு எதிரான இன அழிப்பு விசாரணைகள், சர்வதேச சிறப்புக் குற்றவியல் விசாரணைப் பொறிமுறையின் மூலமே இடம்பெற்றன. இதற்கான உத்தரவை ஐக்கிய நாடுகள் சபைதான் வழங்கியிருந்தது. ஆகவே சர்வதேச உதாரணங்கள் இருந்தும், ஏன் தமிழ்த்தரப்பு இந்த விவகாரத்தில் ஒருமித்த குரலில் செயற்படவில்லை ?

புவிசார் அரசியல் போட்டிகளினால் பலஸ்தீனம் இதுவரை ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கப்படவில்லை. அமெரிக்க, இஸ்ரேல், ரஷ்யா, சீனா என்ற போட்டிகளினால், ஐ.நா.வில் பலஸ்தீனம் என்ற நாட்டுக்கான அங்கீகாரத்தை வழங்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது. ஆனாலும் பலஸ்தீனியர்கள், அமெரிக்காவின் விருப்பத்துக்கோ அல்லது தமக்குச் சார்பான நாடுகளின் புவிசார் அரசியல் தேவைக்கு ஏற்றவாறோ இணங்கி, பலஸ்தீனம் தனிநாடுதான் என்ற தமது கோரிக்கையை ஒருபோதும் விட்டுக் கொடுக்கவேயில்லை. ஆகவே இதேபோன்று இன அழிப்பு விசாரணைதான் தேவை என்பதில் தமிழ்த்தரப்பு ஏன் பிடிவாதமாகவும் ஒரே குரலிலும் நிற்கவில்லை என்ற கேள்வி எழுவது இயல்பானது.

தனியே தமிழர்களை மாத்திரம் உள்ளடக்கும், தமிழர்கள் என்ற தனியொரு இனத்துக்கான தனிநாட்டையே ஈழத்தமிழர்கள் கோரி வந்திருக்கிறார்கள் என அன்றில் இருந்து 2009 க்குப் பின்னரான அரசியல் சூழலிலும் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளிடம் பரப்புரை செய்து வருகின்றது. இந்தப் பரப்புரையில் ஒரு பெரும் பொய்மை புதைந்து கிடக்கிறது. தமிழ் நாடு, தமிழ் ஈழம் என்று தமிழர்கள் தமது தாயகத்தை அடையாளம் செய்த போதும். அதனை ஒருபோதும் ஓரினத்துக்கு மட்டுமே உரியதாகவும், மற்றைய இனங்களை முழுமையாகப் புறக்கணித்ததாகவும் தமது தாயகக் கோட்பாட்டை தமிழர்கள் ஒருபோதும் முன்வைத்ததில்லை. இலங்கை அரசாங்கத்தின் இந்தப் பரப்புரையைக்கூட முறியடிக்கத் தமிழ்த்தரப்பு முயற்சி எடுக்கவில்லை. ஆனால் சமகாலப் புவிசார் அரசியல் போட்டிகளைக் கன கச்சிதமாகப் பயன்படுத்தித் தமக்குச் சாதகமான முறையில் சிங்கள ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக 2009 க்குப் பின்னரும் ஈழத்தமிழர் விவகாரத்தில் அமெரிக்கா- இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளைச் சிங்கள ஆட்சியாளர்கள் மிக நுட்பமாகக் கையாண்டு வருகின்றனர். ஆனால் 'தமிழர்கள் கேட்பது, ஓரினத்துக்கும் மட்டுமான தனிநாடு அல்ல, பாரம்பரியத் தாயகம் அங்கீகரிக்கப்பட்ட சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வையும், இலங்கை ஒற்றையாட்சி அரசின் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணையும்தான். 1950 களிலேயே இன அழிப்பு ஆரம்பித்துவிட்டது 'என்ற விடயங்கள் பரப்புரை செய்யப்பட வேண்டும். 2009 க்குப் பின்னரான சூழலில் தமிழ் வரலாற்றுப் பாடநூல்களில் பௌத்த சமய மற்றும் சிங்கள மன்னர்களின் வரலாறுகள் சிங்களச் சொற்கள் திணிக்கப்பட்டுள்ளதாகவும் ஆதாரங்களோடு எடுத்துச் சொல்லவும் முடியும். ஆகவே தமிழர்கள் இன்னமும் தனிநாட்டைத்தான் கேட்கிறார்கள் என்ற இலங்கை அரசாங்கத்தின் பொய்யான பரப்புரைகளுக்கு எதிராகவும், தமிழர்கள் கடந்த எழுபது வருடங்களுக்கும் மேலாக எதிர்நோக்கி வரும் இன அழிப்புச் செயற்பாடுகளையும் சர்வதேச அரங்கில் ஆவணமாகப் பதிவு செய்திருக்க வேண்டும். சர்வதேச நீதியைத் தொடர்ச்சியாகக் கோரியிருக்கவும் வேண்டும்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெனிவாவை விளங்கிக்கொள்ளல்

○ நிலாந்தன்

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை எனப்படுவது ஒரு நாட்டுக்கு எதிராகத் தீர்மானத்தை நிறைவேற்றலாம். ஆனால் அதை நடைமுறைப்படுத்தும் ஆணை அந்தப்பேரவையிடம் கிடையாது. அதை நடைமுறைப்படுத்தும் உபகரணம் எதுவும் அந்தப் பேரவையிடம் கிடையாது. ஒரு நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கோ, பயன்பொருத்தமான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கோ பேரவையால் முடியாது. மாறாக குறிப்பிட்ட ஒரு நாடு பேரவையோடு இணங்கிச் சென்றால் அந்த நாட்டுடன் இணைந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அந்த நாட்டின் இணையனுசரணையோடு ஐ.நா. அலுவலர்கள் தொழிற்பட முடியும். அதன்மூலம் ஒரு தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியும். அதுதான் 2015 ஆட்சி மாற்றத்தின் பின் நடந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஐ.நா. தீர்மானத்துக்கு இணைஅனுசரணை வழங்கியது.

ராஜபக்சக்கள் ஆட்சியில் இருந்தவரை ஐ.நா. தீர்மானங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவே நிறைவேற்றப்பட்டன. அவை ஒருவிதத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான மேற்கத்திய வியூகங்களின் பகுதியாகக் காணப்பட்டன. அவை தமிழ்மக்களுக்கு ஆதரவானவை என்ற வெளித்தோற்றத்தைக் கொண்டிருந்தாலும், அவற்றுக்குப் பின்னால் இருந்த இராஜதந்திர இலக்கு என்னவென்றால், சீனாவை நோக்கிச் சாயும் இலங்கை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதுதான். இந்த அடிப்படையில் ராஜபக்சக்களின் காலத்தில் ஐ.நா. தீர்மானங்கள் அரசாங்கத்துக்கு எதிரானவை. ஆனால் ரணிலுடைய காலத்தில் 2015இல் ஐ.நா.வுடன் அவர் இணக்கத்துக்கு வந்தார். அவ்வாறு இணை அனுசரணை வழங்கி உருவாக்கப்பட்டதுதான் நிலைமாறு கால நீதிக்கான 30/1 தீர்மானம்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க இணை அனுசரணை வழங்கி உருவாக்கிய தீர்மானத்தின் பிரகாரம் கட்டமைப்புசார் மாற்றங்களை செய்யவில்லை. நிலைமாறு கால நீதி இலங்கைத்தீவில் ஓரழகிய பொய்யாக மாறியது. 'நாங்கள் ஒரு பரிசோதனை செய்தோம். அதில் தோற்று விட்டோம்' என்று சுமந்திரன் வவுனியாவில் வைத்து தெரிவித்தார். ஏனெனில் கூட்டமைப்பு நிலைமாறுகால நீதியின் பங்காளியாகக் காணப்பட்டது.

இது 2015 ஆட்சிமாற்றத்தின் பின் நிகழ்ந்தது. அதன்பின் ராஜபக்சக்கள் மறுபடியும் வந்தார்கள். அவர்களுடைய காலத்தில் அரசாங்கத்துக்கு எதிராக ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த ஆண்டு 46/1 தீர்மானத்தின் மூலம் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான ஒரு கட்டமைப்பு அலுவலகம் பரிந்துரைக்கப்பட்டது.

இப்பொழுது ரணில் வந்து விட்டார். தர்க்கத்தின்படி பார்த்தால் இந்தமுறை வரக்கூடிய தீர்மானம் ரணில் விக்கிரமசிங்கவின் இணையனுசரணையோடு நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான வாய்ப்புகள் உண்டா?

ஏனெனில் 2015 இல் ரணில், ராஜபக்சக்களுக்கு எதிரான ஆட்சி மாற்றத்தின் கருவி . ஆனால், இப்பொழுது அவர் ராஜபக்சக்களின் முன்தடுப்பு. அவருடைய வெளிவிவகார அமைச்சர் யார் என்றால், ராஜபக்சக்களின் தனிப்பட்ட வழக்கறிஞரான அலி சப்ரி. கடந்த திங்கட்கிழமை அலி சப்ரி பின்வருமாறு தொனிப்பட தெரிவித்தார்

"...இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்களின் உண்மையை கண்டறிவதற்காக உள்ளகப் பொறிமுறை ஒன்று எதிர்வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் பேச்சுவார்த்தைமூலம் இணக்கமொன்றை ஏற்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கின்றோம்" .

ஆனால், 2015ஆம் ஆண்டைப்போல இம்முறை அரசாங்கத்தின் இணை அனுசரணையோடு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படக்கூடிய வாய்ப்புகள் மிகக்குறைவாகத் தெரிகின்றன. அதற்காக, கடந்தவாரம் வெளிவந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை அரசாங்கத்தை விமர்சித்திருப்பதை வைத்து புதிய ஜெனிவாத் தீர்மானத்தைக் குறித்து தமிழ்மக்கள் அதிகம் எதிர்பார்க்கலாமா?

இந்த இடத்தில் தமிழர்கள் உற்றுக் கவனிக்க வேண்டிய ஜெனிவா யதார்த்தம் ஒன்று உண்டு. என்னவெனில், கடந்த 13 ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைக்கும் ஜெனிவாத் தீர்மானத்துக்கும் இடையே காணப்படும் இடைவெளிதான். அது தமிழ்மக்களுக்கு விரக்தியூட்டக்கூடிய ஏமாற்றகரமான ஓர் இடைவெளி. அதுதான் தமிழ்மக்கள் அதிகம் உழைக்க வேண்டிய ஓர் இடைவெளியும். கடந்த பல ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைகள் அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றன. ஆனால் தீர்மானங்கள் அவ்வாறு இல்லை. அதை இன்னும் சரியாகச் சொன்னால், தீர்மானத்தை பெரும்பான்மை வாக்குகளோடு நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக பெரும்பாலான நாடுகளைத் திருப்திப்படுத்தும் விதத்தில் தீர்மானம் நீர்த்துப்போகச் செய்யப்படும் என்பதே ஜெனிவா யதார்த்தம் ஆகும். அதாவது ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையரின் அறிக்கையில் காணப்படும் அரசாங்கத்துக்கு அச்சுறுத்தலான விமர்சனப் போக்கு ஐ.நா. தீர்மானங்களில் இருப்பதில்லை. இம்முறை தீர்மானத்திலும் அப்படித்தான் அமையும்.

அதேசமயம், முன்னைய தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சாட்சிகளையும் சான்றுகளையும் திரட்டுவதற்கான அலுவலகத்தை ஓர் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் பதிலீடு செய்ய முடியாது. ஏனென்றால் அந்த அலுவலகம் ஏற்கனவே இயங்கத் தொடங்கிவிட்டது. அது ஒரு பலமான அலுவலகம் அல்ல. கடந்த ஆண்டு ஜனவரி மாதம் மூன்று தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஜெனிவாவுக்கு கூட்டாக எழுதிய கடிதத்தில் கேட்டிருந்த பொறிமுறைக்கு நிகரான ஒரு கட்டமைப்பு அல்ல. அது மனிதஉரிமைகள் பேரவைக்கு கீழ் தான் இயங்கும். கடந்த 13 ஆண்டுகளாக மனிதஉரிமைகள் பேரவை தமிழ்மக்களுக்கு எப்படிப்பட்ட நீதியைப் பெற்றுத் தந்தது என்பது எல்லாருக்கும் தெரியும்.

ஆனால் அந்தப்பலவீனமான அலுவலகத்தைக் கூட சீனா போன்ற நாடுகள் மேலும் பலமிழக்கச் செய்ததாக புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. அவ்வலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை சீனா தலையிட்டு குறைத்துவிட்டதாக மேற்படி அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. அவ்வலுவகத்துக்கு முதலில் பிரித்தானியாவும் நோர்வேயும் நிதியுதவி வழங்குவதாகக் கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு விசேடநிதியை ஒதுக்காமல், ஐ.நா.வின் பொது நிதி ஒதுக்கீட்டுக்கூடாக அந்த அலுவலகத்தை இயக்க வேண்டும் என்று சீனா போன்ற நாடுகள் வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது. இது கடந்த ஆண்டு நடந்தது. ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவைக்கு ஏற்கனவே நிதிப்பற்றாக்குறை உண்டு. அந்தப்பற்றாக்குறை அவ்வலுவகத்திலும் பிரதிபலித்தது. கடந்த ஆண்டு ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் இந்நிதிப்பற்றாக்குறை தொடர்பாக சுட்டிப்பாகக் கூறியுள்ளார். நிதி போதாமையால்தான் அவ்வலுவலகம் முழு வேகத்தோடும் முழுப் பலத்தோடும் இயங்க முடியவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. நிதி போதாமையால் அதன் ஆளணி 13 இல் இருந்து 8 ஆகக் குறைக்கப்பட்டது. எனினும் அவ்வலுவலகம் இப்பொழுது இயங்குகின்றது. அது சாட்சியங்களையும் சான்றுகளையும் சேகரித்து வருகிறது. அவ்வலுவலகத்தை பலவீனப்படுத்தும் நோக்கத்தோடு அல்லது அந்த அலுவலகத்துக்குரிய காரணங்களை வலுவிழக்கச் செய்யும் நோக்கத்தோடு அலி சப்ரி உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றைக் குறித்து பேசுகிறார்.

ஆனால் உள்நாட்டுப் பொறிமுறை, உள்நாட்டுச் சட்டங்கள், உள்நாட்டின் யாப்பு என்பவை தமிழ் மக்களுக்கு நீதியை வழங்க முடியாதவை என்ற கருதுகோளின் அடிப்படையில்தான் நிலைமாறுகால நீதி என்பது 2015ஆம் ஆண்டு பரிந்துரைக்கப்பட்டது. உள்நாட்டு நீதி போதுமானதாக இருந்தால் ஏன் நிலை மாறுகால நீதி என்ற ஐ.நா. ஏற்பாட்டை குறித்து சிந்தித்திருக்க வேண்டும்? மேலும், ஈஸ்ரர் குண்டு வெடிப்புக்கு நீதி கேட்டு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஏன் ஐ.நா. விடம் முறையிட வேண்டும்? உள்நாட்டு நீதிக் கட்டமைப்பை அவர் நம்பவில்லை என்பதைத்தானே அது காட்டுகிறது? எனவே உள்நாட்டின் நீதியின் போதாமை காரணமாகத்தான் ஐ.நா.வின் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது . அதன் அடுத்த கட்டமாக 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் எல்லாவற்றுக்குப் பிறகும் இலங்கை அரசாங்கம் இப்பொழுதும் உள்நாட்டுப் பொறிமுறை குறித்து கனவு காண்கிறது என்றால் அந்தக் கனவுக்கான துணிச்சல் எங்கிருந்து வருகிறது? ரணில் விக்கிரமசிங்கவை மேற்கு நாடுகள் கைவிடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலா? அந்த நம்பிக்கை காலப்பொருத்தமுடையது அல்ல என்பதனை மேற்கு நாடுகள் நிரூபித்தால்தான் தமிழ்மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கலாம்.

ஜெனிவாவில் இலங்கையை மையப்படுத்தி கடந்த சில ஆண்டுகளாக சீனா ஒருவித நிழற்போர் நிலைமையைத் தோற்றுவித்திருக்கிறது. அரசாங்கத்துக்கு எதிராக தீர்மானத்தைக் கொண்டுவரும் நாடுகள் ஒருபுறம், சீனா உட்பட இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவான நாடுகள் இன்னொருபுறம். இதில் சீனா கடந்த ஆண்டு தெளிவாக- வெளிப்படையாக- தான் இலங்கை அரசாங்கத்தின் பக்கம் என்பதை அறிவித்துவிட்டது. இந்த முறையும் கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் ருவிற் பண்ணிய செய்தியின்படி சீனா அரசாங்கத்தோடுதான் நிற்கும்.

ஏற்கனவே சான்றுகளையும் சாட்சிகளையும் திரட்டுவதற்கான அலுவலகத்துக்குரிய நிதியை தந்திரமாக குறைத்தது சீனா போன்ற நாடுகள்தான் என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு. இப்பொழுது சீனா வெளிப்படையாகவே இலங்கை அரசாங்கத்தின் பக்கம் நிற்கின்றது. இப்படிப்பட்ட ஒரு ஜெனிவாக் களத்தில் இந்தியா என்ன நிலைப்பாட்டை எடுக்கும்?

கடந்த ஆண்டு இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஒரு நாட்டுக்கு எதிராகத் தீர்மானம் வரும்பொழுது வாக்கெடுப்பைத் தவிர்ப்பது என்பது நடுநிலையானது போலத் தோன்றலாம். ஆனால் ஜெனிவாவில் அரசாங்கத்துக்கு ஆதரவான நாடுகள் குறைவாக இருக்கும் ஒரு பின்னணியில் வாக்களிக்காமல் விடுவது என்பது அரசாங்கத்தைப் பாதுகாக்காமல் விடுவதுதான்.


ஆனால் தமிழ்மக்கள் அதைவிட வெளிப்படையாக இந்தியா தங்கள் பக்கம் நிற்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். கடந்த 9 மாதங்களாக இலங்கைக்கு அதிகம் உதவிய நாடு இந்தியா. அந்த உதவியை ரணில் விக்கிரமசிங்க உயிர் மூச்சு என்று வர்ணித்தார். சிங்கள-பௌத்த அரசுக்கட்டமைப்புக்கு உயிர் மூச்சை வழங்கிய இந்தியா, தமிழ் மக்களின் விடயத்தில் தெளிவான, வெளிப்படையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும். கிழக்கில் சீனா ஆழமாகத் தன் கால்களைப் பதித்து வருகிறது. வடக்கிலும் சீனா அவ்வாறான முன்னேற்பாடுகளில் இறங்கியிருக்கிறது.

இவ்வாறான ஒரு பின்னணியில் ஜெனிவாவில் சீனா அரசாங்கத்தின் பக்கம் நிற்கும்பொழுது, இந்தியா யாருடைய பக்கம் நிற்கிறது என்பது தமிழ்மக்களைப் பொறுத்தவரை முக்கியமானது. ஏனெனில் கடந்த 13 ஆண்டுகளாக எந்த நாடு தங்கள் பக்கம் நிற்கிறது அல்லது நிற்கவில்லை என்பதனை தமிழ்மக்கள் நிறுத்துப்பார்க்கும் ஒரே அனைத்துலக அரங்காக ஜெனிவாதான் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா. துவாரகன்

**1847 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6 ஆம் திகதி பருத்தித்துறையை வந்தடைந்த மருத்துவர் கிறீன் வல்வெட்டித்துறையில் வசித்த வண. கோப் பாதிரியாரது இல்லத்தில் ஓரிரவு தங்கி 1847 ஒக்ரோபர் 8 ஆம் திகதி வட்டுக்கோட்டையைச் சென்றடைந்தார். அடுத்தநாளே தமிழ் படிக்க ஓர் ஆசிரியரையும் அமர்த்திக் கொண்டார். ஓர் ஆண்டு காலத்துக்குள் தமிழில் சொற்பொழிவாற்றவல்ல தமிழ்ப்புலமையாளராக வேண்டும் என்பதை கிறீன் இலக்காகக் கொண்டிருந்தார்.**



# யாழ்ப்பாணத்தில் ஆங்கில மருத்துவத்தின் வெற்றிக்கு வித்திட்ட மருத்துவர் கிறீன்

9

"ஒரு சிறந்த தளபதி யுத்தம் செய்யாமல்
ஒரு நகரத்தைக் கைப்பற்றவே விரும்புவான்"
– சன் சூ.

சீனதேசத்துப் போரியல் வல்லுநர் சன் சூ வினால் 2500 வருடங்களுக்கு முன்னர் மூங்கில் கீற்றுக்களில் எழுதப்பட்ட போர்க்கலை (The Art of War) என்னும் நூலானது யுத்த மூலோபாயங்களைக் குறித்த ஆலோசனை நூலாக இருந்த போதிலும், சிக்கலான நிலைமைகளில் தீர்மானங்களை மேற்கொள்ள உதவும் தலைமைத்துவ வழிகாட்டி நூலாகவும் விளங்குகிறது.

கடந்த நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத் தமிழர்களின் மனங்களை வெற்றி கொண்ட அந்நிய தேசத்தவர்கள் பலர் இருந்தார்கள். யாழ்ப்பாணத்திலே வாழ்ந்து தன்னலமற்ற பணியாற்றி தமிழர்களின் மனதிலே இடம்பிடித்த ,மருத்துவத்துடன் தொடர்புடைய மறைந்து போன இருவரை இங்கே மீள நினைவூட்டுகின்றேன்.

ஒருவர், வடமாகாணம் என்று அழைக்கப்பட்ட அன்றைய யாழ்ப்பாண பிராந்தியத்தின் பிரித்தானிய குடியேற்ற நாட்டுப் பிரதிநிதி, சேர் பேர்சிவல் ஒக்லண்ட் டைக் (Sir. Percival Acland Dyke: Pro Consul of the British in mid nineteenth Century Northern Sri Lanka. Dyke had lorded over as an almost autonomous administrator) "புரோகொன்சல்" - ஓர் அரசன் தனது சொந்த நாட்டு மக்களைப் பாதுகாப்பது போல் தமது ஆளுகைக்கு உட்பட்ட குடியேற்ற நாட்டு மக்களைக் பாதுகாப்பது பிரித்தானிய புரோகொன்சல்களது கடமை.

டைக் யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபராக (01.10.1829 - 09.10.1867) கடமையாற்றிவர். இவரே யாழ். போதனா மருத்துவமனையின் ஸ்தாபகர். டைக், யாழ்ப்பாண மக்களுக்கு அளப்பரிய சேவை செய்த அரச அதிகாரிகளில் ஒருவர். தனது சொந்த வருமானத்தில் 27 ஏக்கர் நிலப்பரப்பை வாங்கி இன்று பழைய பூங்கா என்று அழைக்கப்படும் காணியில் மரங்களை நாட்டி, வளர்த்து யாழ். நகரத்தில் ஒரு பூங்காவை உருவாக்கியவர். அதனை யாழ்ப்பாண மக்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்காக தனக்குப் பின்னரும் எவரும் அதனை மீள உரிமைகோராத வண்ணம் விக்ரோரியா மகாராணியாரிடமிருந்து விசேட உறுதியையும் பெற்றிருந்தார். டைக் தனது ஆளுகைக்குள் இருந்த யாழ்ப்பாணத்தில் மக்கள் அச்சமின்றி வாழும் வகையில் சட்டம் ஒழுங்கைப் பேணியவர். அன்றைய யாழ்ப்பாணத் தமிழர்கள் டைக் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தனர். பேர்சிவல் ஒக்லண்ட் டைக் தனது சம்பளத்தின் பெரும் பகுதியை யாழ். போதனா மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளுக்காகவும் செலவிட்டவர். கோப்பாயில் வசித்து வந்த டைக் 09.10.1867 அன்று மறைந்த போது , அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக வட மாகாணத்தில் இயங்கிய கச்சேரி, நீதி மன்றங்கள் மற்றும் சுங்கம் முதலான அரச நிறுவனங்கள் யாவும் 5 தினங்கள் பூட்டப்பட்டன. டைக் யாழ்ப்பாண மக்களால் ராஜா என்று அழைக்கப்பட்ட கௌரவத்துக்குரியவர். மற்றவர், மருத்துவர் கிறீன். முன்னவர் பிரித்தானியர், பின்னவர் அமெரிக்கர்.

1847 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6 ஆம் திகதி பருத்தித்துறையை வந்தடைந்த மருத்துவர் கிறீன் வல்வெட்டித்துறையில் வசித்த வண. கோப் பாதிரியாரது இல்லத்தில் ஓரிரவு தங்கி 1847 ஒக்ரோபர் 8 ஆம் திகதி வட்டுக்கோட்டையைச் சென்றடைந்தார். அடுத்தநாளே தமிழ் படிக்க ஓர் ஆசிரியரையும் அமர்த்திக் கொண்டார். ஓர் ஆண்டு காலத்துக்குள் தமிழில் சொற்பொழிவாற்றவல்ல தமிழ்ப்புலமையாளராக வேண்டும் என்பதை கிறீன் இலக்காகக் கொண்டிருந்தார். அதே நேரம் வட்டுக்கோட்டையிலே சிறு டிஸ்பென்சரி ஒன்றை நிறுவி நோயாளர்களைப் பார்வையிடவும் ஆரம்பித்தார்.

1847 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20 ஆம் திகதி நோயாளர் ஒருவரைப் பார்வையிடுமாறு கிறீனுக்கு அழைப்பு வந்தது. அடுத்து நிகழ்ந்தவை, யாழ்ப்பாணத்தில் கிறீன் மேற்கொண்ட முதலாவது சத்திர சிகிச்சை, தன்னை உலகப் புகழ்பெற வைக்கும் என்று கிறீனும் நினைத்திருக்கவில்லை; கிறீனை, யாழ்ப்பாணத் தமிழர்கள் கடவுளின் தூதுவர் என்று கருதி வியப்பார்கள் என்று அமெரிக்க மிசனரிகளும் நினைத்திருக்கவில்லை.

1884 இல் மருத்துவர் கிறீன் மறைந்த போது மானிப்பாயில் கிறீன் ஆரம்பித்த மருத்துவக் கல்லூரியில் முதல் வகுப்பில் மருத்துவ மாணவனாக இருந்த மருத்துவர் இளையதம்பி வைத்திலிங்கம், கிறீன் மேற்கொண்ட முதலாவது சத்திர சிகிச்சையையும் அன்று யாழ்ப்பாணத்தில் நிலவிய சூழ்நிலையையும் நினைவு கூர்ந்து பின்வருமாறு விவரிக்கின்றார்.

"அன்று யாழ்ப்பாணத்தில் (1847 இல்) ஒரு சில ஆங்கில மருத்துவர்களே இருந்தார்கள். அன்று ஆங்கில மருத்துவத்தைப் பின்பற்றுவதில் யாழ்ப்பாண மக்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. புகழ்பெற்றிருந்த சுதேச மருத்துவர்களை மீறி, ஆங்கில மருத்துவர்களை நாட ,யாழ்ப்பாணத்தவர்கள் விரும்பவில்லை. இந்தநிலையில் எனது உறவினரும் தமிழ், சமஸ்கிருத மொழிப் பண்டிதருமான முத்துத்தம்பி என்பவர் நீண்டகாலமாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டு எனது தந்தையாரிடம் சிகிச்சை பெற்று வந்தார். எனது தந்தையார் சுதேச மருத்துவர். முத்துத்தம்பி அவர்களைப் பீடித்த காய்ச்சல் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் இருந்தது. நோயின் தீவிரத்தைத் தாங்க முடியாமல் நோயாளி சிகிச்சையை பெற்றுக் கொள்ளாது சிலநாள்கள் காணமற்போயிருந்தார். அவரை சுகப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை எனது தந்தையார் இழந்திருந்தார். வேறு புகழ்பெற்ற சுதேச மருத்துவர்களிடம் ஆலோசித்த போதும் அவர்களும் முத்துதம்பியவர்களது நோயைக் குணப்படுத்த இயலாது என்றே கைவிரித்தனர்.

பண்டிதரான முத்துத்தம்பி அமெரிக்க மிசனரியிருக்குத் தமிழ் கற்பித்து வந்த போதிலும், மிசனரி மருத்துவர்களை நாட விரும்பவில்லை. சுதேச மருத்துவர்கள் அனைவரும் கூடி நீண்ட ஆலோசனைக்குப் பின்னர் வட்டுக்கோட்டைக்கு அப்போது வருகைதந்து சில நாள்களேயான ஆங்கில மருத்துவரும் அமெரிக்கருமான கிறீனை அழைப்பது என்று முடிவு செய்தனர். இம்முடிவும் விருப்புடன் எடுக்கப்பட்டதல்ல. மருத்துவர் கிறீன் . முத்துத்தம்பியைப் பரிசோதித்துவிட்டு உடனடியாகச் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்; நோயாளியைக் காப்பாற்ற வேறு வழியின்றியே சம்மதித்தனர். கிறீன் நோயாளியின் அடிவயிற்றில் காணப்பட்ட கட்டியை சத்திர சிகிச்சை மூலம் வெற்றிகரமாக அகற்றி, காயத்துக்கு கவனமாக மருந்திட்டு சிகிச்சை அளித்தார். நோயாளி 100 மடங்கிலும் அதிகமாகக் குணமடைந்தார்.

ஆங்கில மருத்துவர் ஒருவர் நோயாளி ஒருவரின் வயிற்றைக் கீறி, குடலை வெளியே எடுத்து அதனை வெட்டிச் சரிசெய்து மீண்டும் வயிற்றில் வைத்துப் பொருத்தினார் என்று மக்கள் அதிசயத்துடன் கதைத்தனர். கிறீன் மேற்கொண்ட இந்த வெற்றிகரமான சத்திரசிகிச்சை பற்றிய செய்தி யாழ். குடாநாடெங்கும் பரவியது. இதன் பின்னர் குடாநாட்டின் நாலாபுறமிருந்தும் கிறீனிடம் சிகிச்சைபெற மக்கள் கூட்டமாக வர ஆரம்பித்தனர்."

மருத்துவர் கிறீன் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட முதலாவது சத்திரசிகிச்சை கிறீனுக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது. அன்று யாழ்ப்பாணத்தில் சுதேச மருத்துவருக்கும் தமிழ்ப் பண்டிதருக்கும் பெருமதிப்பிருந்தது. மக்கள் இவர்களது ஆலோசனையை முடிவாகக் கொள்வார்கள். சுதேச மருத்துவர்களால் கைவிடப்பட்ட முத்துத்தம்பி என்னும் பண்டிதருக்கு ஒரு ஆங்கில மருத்துவர் சத்திரசிகிச்சை செய்து சுகப்படுத்தியமை யாழ்ப்பாணத் தமிழர்களை ஆங்கில மருத்துவம் நோக்கி ஈர்த்தது.

**மருத்துவர் கிறீனது 200 ஆவது பிறந்த ஆண்டை யாழ்ப்பாணத்தில் நினைவு கூருதலுக்கான சொற்களின் பொழிவு:**


உடல் வலிமை குறைந்தவராகவும் வாழ்வின் பெரும்பாலான காலப்பகுதியில் உடல்நலம் பாதிக்கப்பட்டு நோயுடன் போராடுபவராகவும் விளங்கிய கிறீன், பலமாதங்கள் கடற்பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து மானிப்பாயிலே மருத்துவக் கல்லூரியை நிறுவி 26 வருடங்கள் யாழ்ப்பாணத்திலே பணியாற்றி பல்லாயிரக்கணக்கானவர்களுக்குச் சிகிச்சையளித்து உயிர்கொடுத்தார். இவர்களில் அநேகமானவர்களுக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மருத்துவர் கிறீன் 1848 இல் யாழ்ப்பாணம் மானிப்பாயில் நிறுவிய மருத்துவக் கல்லூரியில் 62 தமிழ் மாணவர்களுக்கு நேரடியாகத் தானே மருத்துவம் கற்பித்தும் மேலும் 50 இற்கும் மேற்பட்டவர்களுக்குத் தனது மாணவர்கள் மூலமும் பிற ஆசிரியர்கள் மூலமும் மருத்துவம் கற்பித்தும் யாழ்ப்பாணத்தில் மருத்துவர்களை உருவாக்கியிருந்தார். இவர்கள் அனைவரும் தமிழர்களே. இவர்களில் 33 பேர் மருத்துவர் கிறீனிடம் தமிழ்மொழி மூலம் நேரடியாக மருத்துவம் பயின்று மருத்துவர்களாயினர்.

மருத்துவர் கிறீன் அவர்களது இறுதி விருப்பம்: தான் இறக்கின்றபோது தனது கல்லறை மிக எளிமையானதாக இருக்க வேண்டும் என்றும் கல்லறையில் தமிழர்களின் மருத்துவ ஊழியர் (MEDICAL EVANGELIST TO THE TAMILS) என்ற வாசகம் மாத்திரமே பொறிக்கப்படல் வேண்டும் என்றும் இருந்தது. மாசாசுசெட்ஸ் மாநிலத்தில் உள்ள கிறீனது குடும்பக் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட கிறீனது பூதவுடலின் மீது அமைக்கப்பட்ட கல்லறையில் "தமிழர்களின் மருத்துவ ஊழியர்" என்ற வாசகங்களைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



03

# எனது ஊரிலும்தான்...

சி.கதிர்காமநாதன்

தம்பி! இந்தியா போறது பற்றி முதலாளி பிற கொண்டும் கதைக்கேல்லையோ?" இரவு அம்மா கேட்டாள்.

"இன்னும் இல்லை. கொஞ்ச நாள் செல்லும் போல கிடக்கு."

நான் மெல்லப் பேச்சை இழுத்தேன்.

"உனக்குப் போக விருப்பமில்லையோ? எங்களைப்பற்றி யோசியாதை. நீ போனலென்ன, நிண்டாலென்ன நாங்கள் அனுபவிக்கிறது அனுபவிக்கிறது தானே? ஏன் உனக்கு வாற சந்தர்ப்பத்தை விடுகிறாய்? போய் என்ன கனகாலமே நிக்கப்போறாய்? "

"ஒரு வருசம் நிப்பம். பிறகு பாத்துச் செய்யலாம். "

"ஒரு வருசம் தானேயடா தம்பி. அது 'டக்'கெண்டு ஓடிப் போயிடும் "

மறுபடியும் யோசனை என்னைப் பிடித்தது.

"என்ன சின்னப்பிள்ளை மாதிரிக் குழம்பிறாய்? அவன அவன் ஓடித்தப்பிற வழியைப் பாக்கிறான். நீயெண்டால்...?"

"போறது கஷ்டமில்லையம்மா. உவங்கள் முதலாளிமாரை நம்பி வெளிக்கிடுறது தான் பயம். தங்கட அலுவல் முடியிறவரையும் நல்லா நடிப்பாங்கள். காரியம் முடிஞ்சுதோ எங்களைத் தெருவிலை விட்டிட்டு வந்திடுவாங்கள். "

"உன்ரை முதலாளி நல்ல ஆள் தானே. கனக்க யோசிக்காமல் போற அலுவலைப் பார்."

அம்மா முடிவாகச் சொல்லிவிட்டாள்.

எல்லோரும் உற்சாகப்படுத்தினார்கள். இப்போதே பட்டியல் எழுதத் தொடங்கினாலும் தொடங்கியிருப்பார்கள்.

"நல்ல கதைப்புத்தகம் வாங்கலாம்" அண்ணாவுக்குப் புத்தகப் பைத்தியம். கடைசித்தங்கச்சிக்கு கோலம் போடுவது பிடிக்கும். நல்ல கோலப்புத்தகம் வாங்கலாமாம்.

"நல்லதாப்போச்சு. இந்தியாவிலை நல்ல மருந்து சம்பந்தமான புத்தகம் வாங்கலாம். அனுப்பிவை." என்றாள் என் அடுத்த தங்கை. அக்கா மட்டும் அமைதியாக இருந்தாள். இவர்களுக்கு இப்படி ஆசை என்றால் தம்பி சும்மா இருந்து விடுவானோ?

" அண்ணை தியானம், யோகாசனம் பற்றிய புத்தகங்கள் கனக்க இருக்கு. மறந்து போகாதை."

இனி அடுத்திருப்பது அம்மா தான். "நல்ல நூல் 'சாறி' அங்கை எடுக்கலாம். கட்ட நல்லாயிருக்கும்."

அப்பா தான் இடையில் அநியாயமாய்ப் போய்விட்டார்.



அவரும் இருந்திருந்தால் இதைத்தான் சொல்லியிருப்பார். "நல்ல கரைபோட்ட வேட்டி ,சால்வை எடுத்து அனுப்பு. கோயிலுக்குக் கட்டலாம். "

மனதில் தான் எத்தனை ஆசைகளை வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நான் அங்கு போய்க் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றலாமே. இரண்டு நாட்கள் வேலைக்குப் போகவில்லை. நாங்கள் இருந்த பகுதியில் ஊரடங்குச் சட்டம் போட்டிருந்தார்கள். முதல் நாளிரவு தேடுதல் நடவடிக்கையின் போது ஏற்பட்ட மோதலின் பலன் இது.

இப்படித்தான் அன்றொருநாள் இருபகுதியினருக்கும் மோதல் தொடங்கியது. யாரும் நினைத்துக்கூடப்பார்க்கவில்லை. சமாதானத்தின் தூதுவர்களாக வந்தவர்களுடன் சண்டை என்று யார்தான் எதிர்பார்ப்பார்கள்.? அன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஒருவிதமான பதற்றநிலை .

"கோட்டையைச் சுற்றிப்பெடியள் 'சென்றி' போட்டிட்டாங்கள்"

"என்ன விசரே கோட்டையில் இப்ப சிங்கள ஆமியில்லையே!"

"காலையில யாழ்ப்பாணம் போகேக்க கதைச்சினம் இரண்டு பகுதிக்கும் ஏதோ பிரச்சினை எண்டு"

ஊரடங்கு இல்லாத வேளைகளில் மட்டும் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற வீதிகளுக்கு வருவார்கள். பின்னர் வீட்டினுள் முடங்கிவிடுவார்கள். உண்மையில் எங்களின் நலன்காக்கத் தான் வந்தார்களா? அல்லது ........?

யாரிடம் சொல்லி ஆறுதல் பெறுவது? இதெல்லாம் நெஞ்சில் நிலைத்துவிட்ட சம்பவங்கள்.

இரண்டு நாள்கள் வேலைக்குப் போகக் கூடக் கஷ்டமாக இருந்தது. அவ்வளவுக்கு மனம் குழம்பிப் போய்க்கிடந்தது. இந்தியா விடயம் மனதை அரித்துக்கொண்டிருந்தது. எனக்கு ஏற்கனவே பாஸ்போட் இருந்தது மிகவும் உதவியாக இருக்கும் போலத் தோன்றியது. கடைசியில் போக வேண்டிய நிலைதான் வந்துவிடுமா....?

காலை வேலைக்குப் போக ஆயத்தப்படுத்தும் போது அம்மா கேட்டாள், "காந்தன் வீட்டுப்பக்கம் நீ போகேல்லையே? ஆளையும் இந்தப்பக்கம் காணேல்லை."

"போகத்தான் வேணும். முந்திப்பக்கத்திலை இருந்தினம். பிரச்சினையிலை. இடம்பெயர்ந்து இப்ப இருக்கிற இடமும் தூரம் தான். பாப்பம்... நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே. போவம். வழியிலை போய்வாறது தான் பிரச்சினை."

"பிரச்சினைதான் .என்ன செய்யிறது? நல்லபெடியன், நாளைக்கு நிலைமையைப் பார்த்துப் போவன்." என்றாள் அம்மா.

"என்னம்மா வெள்ளைக்கொடியைக் காணேல்லை! ஆர் எடுத்தது?"

"உவள் தங்கச்சி எடுத்துக்கொண்டு போட்டாள். கடைக்குத்தான் போனவள் வந்திடுவாள்."

வீதியிலே பச்சை உடைகள் நடந்து போயின. இரவு ரோந்து முடிந்து திரும்பிப் போறாங்கள் போலும்.

"தம்பி! ஒண்டு சொல்ல மறந்து போனன். 'சென்றியிலை' நிண்டவங்கள் சொல்லிப்போட்டுப் போறாங்கள். எங்கட வீட்டுப்பக்கம் ஆக்கள் வந்துபோயினமாம். கவனமா இருக்கட்டாம். அதுதான் நான் சொந்தக்காரர் ஒருத்தரையும் இந்தப்பக்கம் வரவேண்டாம் எண்டு சொல்லப் போறன்." அம்மா ஏக்கத்துடன் என்னைப் பார்த்துச் சொன்னாள். "ஏன் தம்பி, அவங்கள் ஆக்களிலை சந்தேகப்படுகிறாங்களோ?"

"அப்பிடித்தான் இருக்கும்"

தங்கை கடையிலிருந்து வந்துவிட்டாள். வெள்ளைக் கொடியை வாங்கிக்கொண்டேன்.

கடைக்குப் போனவுடன் முதலாளியின் மகன் சொன்னார், "இந்தக்கிழமைக்குள்ள போகலாம் எண்டு இருக்கிறன். என்னையும் ஆயத்தப்படுத்த வேண்டும். வீட்டுக்குப் போகேக்க காசுதாறன்."

நான் ஒன்றும் பேசாமல் நின்றேன்.

"எனக்கு உம்மை மாதிரி நம்பிக்கையான ஆள் தேவை. அதுதான் உம்மைக் கொண்டு போறன். பயப்படாமல் வாரும். கொஞ்சக்காலம் தானே." முந்தி இவரை நம்பிச் சிலவேலைகளில் ஈடுபட்ட போது ஏற்பட்ட சிரமம் தான் ஞாபகத்துக்கு வந்தது. "வீட்டிலை கதைச்சுப்போட்டுச் சொல்லிறன்..." என்று இழுத்தேன்.

"கதைக்கிறதுக்கு ஒண்டுமில்லை. பிறகு வந்து காசை வாங்கிக் கொண்டுபோம்"

(தொடரும்)

# தமிழர்களை...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது முழுநிறை நியாயாதிக்க விசாரணை முறையைக் காண்பித்துச் சர்வதேச நீதி என்பது தமிழர்களுக்கு எட்டாக் கனி என்ற அவ நம்பிக்கையை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் தோற்றுவித்து வருகின்றது. அதற்கு இந்தியாவும் ஒத்தூதுகின்றது. குறைந்தபட்சம் இப்படியான விசாரணை முறைகளோடு ஒத்துப்போனால்தான் நல்லது என்ற எண்ண ஓட்டத்தைத் தமிழ்த்தரப்பிடம் அமெரிக்கா போன்ற நாடுகள் விதைத்தும் வருகின்றன.பொருளாதார நெருக்கடியால் இலங்கைத்தீவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழர்கள் இலங்கை அரசாங்கத்துடன் சமாளித்துச் செல்ல வேண்டும் என்ற கருத்துக்களும் மிக நுட்பமாக ஊட்டப்பட்டு வருகின்றன. அத்துடன் இலங்கை சீனாவின் பக்கம் சென்றுவிடும். இது அமெரிக்காவுக்குப் பிடிக்காது என்ற கதைகளும் கட்டவிழ்க்கப்படுகின்றன. ஆனால் சிங்கள ஆட்சியாளர்களின் முழுமையான நிலைப்பாடு சீனாவின் பக்கம் செல்வதல்ல. ஆகவே இவ்வாறான கதைகள் மற்றும் அமெரிக்க - இந்திய அரசுகளின் புவிசார் அரசியல் - பொருளாதாரத் தேவைகள் போன்றவற்றுக்காகத் தமிழ்த்தரப்புத் தமது கோரிக்கைகளை விட்டுக் கொடுத்து அல்லது சமாளித்துச் செல்கின்ற அணுகுமுறைகளைக் கைவிட வேண்டும்.அந்த அணுகுமுறையிலும் கூட ஒரு பகுதி தமிழ்த்தரப்பு ரணில் விக்கிரமசிங்கவுடனும், மற்றைய தரப்பு சஜித் பிரேமதாஸவுடனும், சில புலம்பெயர் அமைப்புகள் அமெரிக்காவுடனும், வேறொருதரப்பு இந்தியாவின் பக்கமும் பிரிந்து நின்று வெவ்வேறாகச் செயற்படுகின்றன.அதாவது தமிழ்த்தரப்பு வெவ்வேறாகக் கையாளப்படுகின்றது.

ஆனால் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட, அதுவும் ஏதோ தமக்குச் சார்பாகவே எல்லாம் நடக்கின்றது என்ற பொய் [illegible] அப்பாவித் தமிழ் [illegible] அரசியல் - பொருளாதார பாதுகாப்புகளின்றித் தவிக்கின்றது. தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்தும் தேர்தல் கட்சிகளாகவும் தேர்தல் காலங்களில் மாத்திரம் தமிழ்த்தேசியத்தைப் பேசுகின்ற கட்சிகளாகவும் மாறிவிட்டன.

இந்தப் பின்புலத்திலேதான் ஜெனிவா மனித உரிமைச் பேரவையின் மூலம் தமது புவிசார் அரசியல் - பொருளாதார நலன்களுக்குச் சாதகமான முறையில் அமெரிக்க- இந்தியா போன்ற நாடுகள் தமிழ்த்தரப்பிடம் மிக இலகுவாகத் தமக்கு இஷ்டமான் விடயங்களைத் திணிக்க முற்படுகின்றன.

அதாவது 'சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தொல்லை கொடுக்காமல், இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் இருக்கும் தீர்வுக்கு இணங்கிச் செல்லுங்கள்' என்ற போதனை வழங்கப்படுகின்றது. அதற்காகவே 13 ஆவது திருத்தச் சட்டமும் ஜெனிவாத் தீர்மானத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இனிமேலும் காலம் தாழ்த்தாமல் செயற்பாட்டில் இறங்க் வேண்டிய பொறுப்பும் கடமையும் நேர்மையாகச் சிந்திக்கும் ஆற்றலும், குறிப்பாக அமெரிக்க - இந்திய மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களுக்குள் சிக்குப்படாமல் சுயாதீனமாக இயங்கும் தன்மையும் கொண்ட பொது அமைப்புகளுக்கே இப்போது பொறுப்பு அதிகமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வி.குமார்:

## அழியாப் பாடல்களில் அமிழ்ந்தவன்



○ கோகுலராகவன்

மெலடி கிங்' என அழைக்கப்பட்டவர் இசையமைப்பாளர் வி.குமார். தென்னிந்திய சினிமாவில் முத்தான பாடல்கள் தந்தும் பயன்படுத்தப்படாத இசையமைப்பாளர். வி.குமார் இசையமைத்து மிக பிரபல்யமான பாடல் "நான் உன்னை வாழ்த்தி பாடுகிறேன் நீ வரவேண்டும்." நூற்றுக்கு நூறு என்ற படத்தில் வரும்.

இவரது இசையில் இன்னும் நிறையப் பாடல்கள் மனதுக்கு இனிமையானவை.

வி.குமார் இயக்குநர் பாலசந்தரின் ஆரம்ப காலத் திரைப்படங்களுக்கான இசையமைப்பாளர். பாலசந்தரின்" நீர்க்குமிழி" திரைப்படத்தின்." ஆடி அடங்கும் வாழ்கையடா" பாடல் வி.குமாரின் இசைக்கோர்ப்பு. "வெள்ளிவிழா" திரைப்படத்தில் தனது இசையில் எம்.எஸ்.விஸ்வநாதனை "உனக்கென்ன குறைச்சல்" எனும் பாடலைப் பாட வைத்தவர் .

இதேபடத்தில் "காதோடுதான் நான் பேசுவேன்" எனும் மெல்லிசைப் பாடல் மூலம். துள்ளிசைப் பாடகியான எல்.ஆர். ஈஸ்வரியை மெல்லிசைப் பாடகி ஆக்கினார். பாலசந்தரின் 'எதிர்நீச்சலில்' படத்தில் இடம்பெற்ற "அடுத்தாத்து அம்புஜத்த பாத்தேளா"

எனும் குறும்பான, துள்ளலான பாடலும் இவருடையதே. இன்றும் 'சுப்பர் சிங்கர்' பாடகர்களின் தெரிவுப்பாடலாக அது இருக்கிறது.

அதே படத்தில் "தாமரைக்கன்னங்கள்" எனும் பாடல் பி.வி.சீனிவாஸ் - எஸ். ஜானகி குரலில் ஒலிக்கும் மெல்லிசையின் உச்சம். பாலசந்தர் பிரபல்யம் அடையத் தொடங்கிய பின்னர், வி.குமாரை கைவிட்டு எம்.எஸ்.விஸ்வநாதனை இசையமைக்கத் தேர்வு செய்துவிட்டார்.திரைத்துறையில் அணிகள் அடிக்கடி மாறும்.

ஆனால் பாலசந்தரின் வளர்ச்சியில் பெரும் பங்கு வி.குமாருக்குரியது. அத்தகைய பாடல்களை இசையமைத்துக் கொடுத்தார்.

இதற்கான பதிவு எதனையும் பாலசந்தர் தராதது இருவருக்குமான ஒத்திசைவை அறியாமல் போய்விடக் காரணமாகி விட்டது.




இதன் பின்னர் வி.குமார் "தேன் சிந்துதே வானம்" எனும் திரைப்படத்தில் இசையமைத்த "உன்னிடம் மயங்குகின்றேன், உள்ளத்தால் நெருங்கிறேன்" எனும் பாடல் காலத்தில் அழியாத சாகாவரம் பெற்ற பாடல். "வஞ்சி உன் வார்த்தை எல்லாம் சங்கீதம்" என்ற வரியை ஜேசுதாஸ் உருகி உருகி பாடுவார்.

இந்தப் பாடலின் இசையமைப்பின் போதும் வி.குமாரின் குழுவில் இணைந்து, இளையராஜா 'கிற்றார் ' வாசித்தார்.

ஜேசுதாஸ் தான் பாடிய பாடல்களில் தன் மனைவிக்கு மிகவும் பிடித்த பாடல் இதுவே எனக் குறிப்பிடுகிறார். கேட்க கேட்கச் சலிக்காத பாடல்களாக இசையமைப்பதில் குமார் மேதைமை மிக்கவர். இதுவே வி.குமாரின் வெற்றியாக இருந்தது. இதனால்தான் "மெல்லிசைச் சக்கரவர்த்தி" எனும் பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்த மெல்லிசை சக்கரவர்த்தி என்ற பட்டம் இலங்கை வானொலியால் வி. குமாருக்கு வழங்கப்பட்டது என்பது இன்னொரு சிறப்புத் தகவல். வி.குமார் இசையமைத்த பாடல்களை நான் அதிகம் கேட்டது இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில்தான்.

அந்தந்தத் திரைப்படங்களைப் பார்க்கக் கிடைத்தது ரூபவாகினியின் புண்ணியத்தில் தான். இரண்டுக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

முக்தா சீனிவாசன் இயக்கிய ஆயிரம் பொய்,நிறைகுடம் ஆகியஇரண்டு படங்களுக்கும் வி.குமார் இசை வழங்கினார். அதில் "நிறைகுடம்" திரைப்படத்தில் பிரபல்யமான பாடல்கள் இருந்தன.

"கண்ணொரு பக்கம் நெஞ்சொரு பக்கம் " எனும் பாடல் பிரபல்யமானது. சிறந்த இசையை வழங்கியும் முக்தா சீனிவாசன் தொடர்ந்து வி.குமாருக்கு வாய்ப்பு வழங்காததும் வியப்புத்தான்.

வி.குமார் எப்போதும் பாடல் இசையில் தொடக்க இசை, பல்லவிக்கும் அனுபல்லவிக்கும் இடையேயான இசை, பாடலுக்கிடையேயான இடையிசை . வாத்தியங்களின் தேர்வு என்பவற்றில் கவனமாக இருப்பார். இதனாலேயே அவரது பாடல்கள் கவனத்தைப் பெற்றன.

ரஜனியின் ஆரம்பகால படமான சதுரங்கம் படத்தின் இசையும் வி.குமார்தான். அந்தப் படத்தில் "மதனோற்சவம் ரதியோடுதான்", எனும் பாடல் தேர்ந்த இசைப் ' பாடல். அந்தக் கால இளைஞர்கள் முணுமுணுத்த பாடல். இந்தப் பாடலில் சாயலில் தான், இசையமைப்பாளர் ஆதித்தன் 'ரோஜாமலரே 'படத்தில் "அழகோவியம் உயிரானதோ " எனும் பாடலை உருவாக்கியிருப்பார். வி.குமாரின் இசையில் மேஜர் சந்திரகாந்த் திரைப்படத்தில் நாகேஷ் பாடி நடித்த" கல்யாண சாப்பாடு போடவா" பாடல் நாகேஷுக்கு மேலும் ஒருபடி உயர்வைக் கொடுத்தது. வி.குமார் இசையமைத்த காலத்தில், எம்.எஸ்.வி, கே.வி.மகாதேவன். ரி.ஆர். பாப்பா, வேதா ஆகியோர் கொடிகட்டிப் பறந்தனர்.

அதுவொரு சவால் மிகுந்த காலம். ஆனால் அவர்களிடமிருந்து வேறுபட்ட இசையை உருவாக்கி தனித்துவமாக வி.குமார் மிளிர்ந்தார்.

அவர் நூறு படங்களுக்கு மேல் இசையமைத்தவர். 1980 க்கு பின் வி.குமாருக்கு இறங்குமுகம். இதன் பின் இரண்டு படங்களுக்கு மட்டுமே இசையமைத்தார். ஒன்று, தியாகராஜன், சரிதா நடித்த "சங்கரி." மற்றையது, 1985 இல் முரளி, ரகுமான், ரேகா நடித்த "மீண்டும் மகான் "ஆகியவை .

இரண்டு படப்பாடல்களும் அவரது முன்னைய பாடல்களுக்கு நிகரானவை அல்ல. சங்கரியில் ராஜ்குமார் பாரதியை, வாணி ஜெயராமுடன் பாட வைத்தார்.

'மீண்டும் மகான்' வி.குமார் இசையமைத்த கடைசிப் படம். வி.குமாரின் மனைவி சுவர்ணாவும் ஒரு பின்னணி பாடகி. "இனங்களிலே என்ன இனம் பெண்ணினம்" என்ற பாடலில் ஜேசுதாஸுடனும்,

"என்னோடு என்னென்னவோ ரகசியம் "எனும் பாடலில் ஜெயச்சந்திரனுடனும் அவர் பாடி இருப்பார்.

திரைத்துறையில் குமாரின் தொய்வு காலத்தை பற்றி மிக வெறுப்பை குமாரின் மனைவி சுவர்ணா வெளிப்படுத்தினார். "நன்றி அற்றவர்கள் நிறைந்த இடம் திரைத்துறை" என்கிறார் சுவர்ணா.

வி.குமார் 1996 இல் காலமானார். ஆனால் அவரது இசையில், "நான் உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்" பாடல் ஒலித்தால் இப்போதும் ஒருகணம் நின்று கேட்காமல் தாண்டிப் போக முடியாது. திரையுலகம் ஒரு மாயை .எவ்வளவு சாதனை படைத்தாலும் ஒருநாள் ஒதுக்கியே தீரும் . வி.குமாரும் இதற்கு விதிவிலக்கல்ல.


(இன்னும் கதைப்பம்)

---

○ இராகவன்

# ஊர்ப்புதினம்





56

எங்கட போட்டோ செல்வண்ணை அண்டைக்கு எங்களையெடுத்த போட்டோ சுப்பறாயிருந்திச்சுது. அதைப் பாத்தாப்போல தான் எனக்கு இன்னும் ரண்டு மூண்டு போட்டோக்களுக்குப் போஸ் குடுத்திருக்கலாமெண்டு கவலையாயிருந்தது. பஞ்சு மாமாவின்ர கலியாண வீட்டுக்கு கறண்ட் இழுக்கலாமெண்டு எங்கடை இளையண்ணா வெளிக்கிட்டவன். வசந்தியக்காவின்ர அப்பு தான் 'ஒருநாள் கூத்துக்கு ஏன் மீசையெடுப்பான்? புகல்ல நடந்து முடியிற கலியாணத்துக்கேன் கறண்ட் இழுப்பான்? அப்படியேதுமெண்டால் லாம்பை வைச்சுச் சமாளிப்பம். இல்லாட்டில் உவன் பெரியானிட்டச் சொல்லி ஒரு பெற்றோமக்ஸ் எடுப்பம்" எண்டு மறுத்திட்டார். இல்லாட்டில் வலுஎழுப்பமாக் கறண்ட் இழுத்து, கலியாண வீட்டைக் கலர்புல்லாக்கியிருப்பான். எங்கடை இளையண்ணா பட்டங்கட்டிறது. படங்கீறுறது. டெக்கிறேசன் பண்ணுறது எண்டு இதுகளிலயெல்லாம் எந்தளவுக்கு விண்ணனோ அந்தளவுக்குக் கறண்ட் இழுக்கிறதிலயும் வலுவிண்ணன். அப்ப இந்தச் சண்டை சச்சரவுகள் தொடங்கி இயக்கங்கள் தலையெடுத்தாப்போல தொலைத்தொடர்பெல்லாம் முற்றா அறுந்துபோச்சு. இப்பவெல்லோ உந்த மொபைல் போன், சிமாட் போன் எல்லாம் வந்தது. முந்தியெல்லாம் லைன் போன்தானே? சரி, இப்ப விசயத்துக்கு வருவம்.


எங்கடை இளையண்ணா வீட்டுக்கு கறண்ட் இழுத்தகதையைப் பாப்பம். அவன் எங்கையோ சுத்திச் சுழண்டு கொஞ்சம் ரெலிபோன் லைன் வயறுகளைச் சுட்டுக்கொண்டு வந்தான். அப்ப எங்கடையூரில நல்ல வசதியான ஆக்களின்ர வீடுகளைத் தவிர மற்ற வீடுகளொண்டுக்கும் கறண்ட் இழுக்கேல்ல. கறண்ட் இழுக்காத வீடுகளில எங்கடை வீடும் ஒண்டு.

ரெலிபோன் லைன் வயறை இளையண்ணா கொண்டுவந்து வைச்சிருக்கேக்குள்ள முதல்ல எனக்கொண்டும் விளங்கேல்ல. கறண்ட் லைன் மெயின் றோட்டாலதான் போகுது. அதுக்குப் பக்கத்தில நான் ஏற்கனவே சொன்ன டாக்குத்தற்றை காணியிருக்கு. அதுக்கடுக்காத்தான் எங்கடை வீடும் வளவுமிருக்கு. அதாவது கறண்ட் லைனிலயிருந்து ஒரு அம்பது மீற்றர் தூரத்தில எங்கடை வீடிருக்கு. எங்கடை வீட்டின்ர பின்வளவு முழுக்கப் பனையள் நிக்குது. அதுக்குள்ள ஒரேயொரு வளைஞ்ச பனையும் நிக்குது. இளையண்ணா மெல்லியன் பிறவுணும் கடும் நீலமும் கலந்த பின்னல் வயர் ஒரு றோல், ஒரு ஹோல்டர், ஒரு குண்டு பல்ப், ஒரு தொங்கு ஸ்விட் (கறுப்பு) எல்லாம் வாங்கியந்து உள் வயறிங் வேலையெல்லாம் செய்துமுடிச்சான். பிறகு இரண்டு நீட்டுச் செப்புக் கம்பியள எடுத்து , வளைஞ்ச பனைவரைக்கும் லைன் அடிச்சான். அதிலை வைச்சு அந்த செப்புக் கம்பியளோட ரெலிபோன் லைன் வயறுகள் இரண்டை ஜொயின்ற் பண்ணினான். பிறகு ரெலிபோன் லைன் வயறுகள் முடியிற இடத்தில இரண்டு நோர்மல் வயறுகளை ஜொயின்ற் பண்ணி அதின்ர முடிவில இரண்டு வெள்ளிக்கம்பியளை எடுத்து வளைச்சுக் கொழுக்கியாக்கினான். இதுக்குள்ள ரெலிபோன் லைன் வயறைப் பற்றியொண்டு சொல்ல மறந்திட்டன். அது கறுப்பு நிறத்திலயிருக்கும். உள்ளுக்கை நல்ல ரெம்பறான ஆனால் வளைஞ்சு குடுக்கக் கூடிய செப்புக் கம்பியிருக்கு. இந்த லைன் அடிக்கிற வேலை முடிஞ்ச கையோட இளையண்ணா ரெலிபோன் லைன் வயறை இடுப்பில சுத்திக்கட்டிக்கொண்டு வளைஞ்ச பனையில் விறுவிறெண்டு முக்காவாசிக்கு ஏறி, வயறைச் சுத்திக் கட்டினான். பிறகு பக்கத்து நேர்ப்பனையிலயும் அதேயளவுக்கு ஏறிச் சுத்திகட்டினான். அப்பதான் எனக்கு அவன்ர பிளான் வடிவா விளங்கிச்சுது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 100



அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

..............................................................

கையொப்பம்:..................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. பல போராட்டங்கள் இதற்கானதே 6. உடல் கட்டமைப்பு 7. குரங்கு 8. குளிர்மைத்தன்மை 9. கணவன்- மனைவி 11. ஒரு மிருகம் 12.இனிவரும் காலத்தில் இதுவும் வரும் 13. வலது குறைந்தவன் 15. உமது 16. சூரியன் 17. மனிதனுக்கும் மிருகங்களுக்கும் இது அவசியமானதே 18. பாம்பு ரகம் 19. ஓர் ஆபரணம் 21. சாப்பிடு 22. கடலில் விளைவது

### மேலிருந்து கீழ்

1. உயிர் வாழ்க்கையின் வெளிப்பாடு 2. தகைமைத் தன்மை 3. தினசரி மாறுவது 4. ஒரு பெயர் 5. கண்டது கற்க இவனாவான் 8. பெருக்கல் குறி 10. நகரம் 11. யானை 12. சாதுவானது ஒரு மிருகம் 13. வேலன் 14. பலவந்தமாக (செய்வது) 15. ஓர் ஊர்வனவகை விலங்கு 16. தொடக்கமே குறிப்பிட முடியாதது. 17. நேரத்துடன் தொடர்புடையது 19. பலவல்ல 20. செய்.

**சொற்சிலம்பம் போட்டி 99 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. சிவிகை 4. கசகசா 8. பிரதியுபகாரம் 10. கடி 11. ஆதாரம் 13. தகுதி 15. தபதி 16. தலைவிரி 17. ரம் 18. நிலைமை 19. மனைவி 20. சில 21. பாதி 22. திரவம்

**மேலிருந்து கீழ்**

1. சிபி 2. விரகதாபம் 3. கைதி 4. கபடி 5. சகா 6. கரங்குவி 7. சாம் 9. யுகம் 11. ஆதரவு 12. ரதி 13. தலைமை 14. திரிசூலம் 16. தலைவிதி 18. நினை 19. மதி 20. சிவ

**சொற்சிலம்பம் போட்டி இல.100**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**16.09.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 99 இல் வெற்றி பெற்றோர் விவரம்**

**1 ஆம் பரிசு**
**ஆ.வினோதினி**
பரந்தன் ஜி.ரி.எம்.எஸ்,
கிளிநொச்சி

**2 ஆம் பரிசு**
**மா.மகாலிங்கம்**
கைதடி மேற்கு,கைதடி

**3 ஆம் பரிசு**
**அ.ராதாமணி**
ஏ25 கண்டிவீதி,
சாவகச்சேரி

**4 ஆம் பரிசு**
**ந.செல்வராணி**
காரை வடகிழக்கு
காரைநகர்

**5 ஆம் பரிசு**
**க.மதியழகன்**
[illegible]
வட்டுக்கோட்டை

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழாவில், எண்பது பேர் வரையில் மொத்தமான கயிற்றை பிடித்து இழுக்க, தேர் அசைந்து வீதியை வலம் வந்தது. தேரின் பின்னால் பக்தர்கள் பிரதிட்டை செய்து கொண்டு வந்தனர். தேர் அரைவாசித் தூரம் வந்ததும் ஒருவர் ஆயிரக்கணக்கான தேங்காய்களை ஒரு கல்லின் மீது போட்டு உடைத்தார்; அவர் தேங்காய்களை உடைத்ததும் தேர் மறுபடியும் பயணத்தை தொடர்ந்தது. தேர் இருப்புக்கு வந்ததும் பக்தர்கள் தமது வீடுகளுக்கு சென்றனர்.

இவ்வாறு திருவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கையில், நாங்கள் திருவிழா முடிந்து வீடு செல்லும் பக்தர்களுடன் ஒழுங்கைகளில் வைத்து கிறிஸ்தவ பிரசாரத்தில் ஈடுபட்டோம். அத்துடன் எமது தேவாலயத்தில் 'கிறிஸ்து பலம் வாய்ந்தவர்' போன்ற பாடல்களையும் பாடினோம். அப்போது ஒரு பிரமாணன், ஒரு சைவன் ,சைவ சமயப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் உட்பட நூற்றுக்கணக்கான பக்தர்கள் அமைதியாக எமது பிரார்த்தனையை செவிமடுத்து கொண்டிருந்தனர் . நாங்கள் அவர்களிடம் எமது கிறிஸ்தவ பிரசார நூல்களையும் ,பைபிளையும் விற்பனை செய்ததன் மூலம் எமக்கு கணிசமான வருமானம் கிடைத்தது. எமது அயல் தேவாலயத்தை சேர்ந்த ஒருவர் 'இந்த உத்தி இவ்வளவு பலனைத் தரும் என நான் எதிர்பார்க்கவில்லை; அடுத்த வருடம் இதை இன்னும் சிறப்பாகச் செய்யவேண்டும்' என்று சொல்லி மதிய உணவையும் கவனிக்காமல் பிரசாரத்தில் ஈடுபட்டார். எமது பிரசார நூல்களை வாங்கியவர்கள் கூட்டம் கூட்டமாக மரங்களின் கீழும் தமது வண்டிகளிலும் இருந்து வாசிப்பதை காணக்கூடியதாக இருந்தது. ஒரேநாளில் 2900 சிறு பிரசுரங்களை எம்மால் விற்க முடிந்தது.எல்லாம் கடவுளின் கிருபை .நாங்கள் விதைத்த விதைகள் நல்ல பலனைத் தருகின்றன.

### மானிப்பாய் , 31 ஒக்ரோபர் 1881

எமது அறநெறிப் பாடசாலையின் ஆரம்ப கால மாணவர்கள் கிறிஸ்துவைப்பற்றி பூரணமாக அறிந்திருந்தனர்.எம்மை விட சிறப்பான முறையில் அவர்கள் தமது பாணியில் விளக்கமளித்தார்கள். பின்னர் எதற்காக இவர்கள் தமது சமயத்தை விட்டு வர மறுக்கிறார்கள்? அவர்களது நாளாந்த வாழ்க்கையில், வரலாற்றில் கலாசாரத்தில்,சாதியும் சமயமும் ஒட்டிக்கொண்டுள்ளன. எல்லாவற்றையும் ஒரே நாளில் தூக்கி எறிந்து விட முடியாது. பெருமளவு தனிநபர்கள் எமது பக்கம் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். அனைத்து வீடுகளும் எமக்காகத் திறந்துள்ளன. இங்கு இப்போது பெரும்பாலானவர்கள் விபூதி பூசுவதையும் ,கோயில் திருவிழாக்களில் பங்கு பற்றுவதையும் நிறுத்தி விட்டனர்.

### மானிப்பாய் , 7 பெப்ரவரி 1882

இந்த வாரம் எனக்கு மிகவும் சோதனையான வாரமாக இருந்தது. நீங்கள் எனக்காகவும் யாழ்ப்பாணத்துக்காகவும் பிரார்த்தியுங்கள். என்றுமில்லாதவாறு நாங்கள் பிரார்த்தனையில் ஈடுபட நேர்ந்தது. எமது பாடசாலைகளிலும் கிராமங்களிலும் வழமைக்கு மாறான பிரார்த்தனையில் ஈடுபட நேர்ந்தது.சாத்தான் ஒரு மதவெறி பிடித்த சாமியார் உருவத்தில் வந்தது. தடுத்து நிறுத்த முடியாத கிறிஸ்தவ எதிரியாக அந்தச் சாமியார் காணப்பட்டார். முதல் நாளிரவு பெய்த மழைக்கு முளைத்த காளான் போல் அந்த சாமியார் காணப்பட்டார். கிறிஸ்தவத்தையும் மிசனரிகளையும் நிந்தனை செய்யும் செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டார். அவர் ஒரு புதிய விடயத்தை



சாத்தான் ஒரு மதவெறி பிடித்த சாமியார் உருவத்தில் வந்தது. தடுத்து நிறுத்த முடியாத கிறிஸ்தவ எதிரியாக அந்தச் சாமியார் காணப்பட்டார். முதல் நாளிரவு பெய்த மழைக்கு முளைத்த காளான் போல் அந்த சாமியார் காணப்பட்டார். கிறிஸ்தவத்தையும் மிசனரிகளை யும் நிந்தனை செய்யும் செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டார். அவர் ஒரு புதிய விடயத்தை சைவர்களுக்கு போதித்தார்.

சைவர்களுக்கு போதித்தார். இவர்களுடைய குருமார் மக்களுக்கு ஆன்மீகம் பற்றி எதுவும் விளக்கமளிப்பதில்லை. இந்த சாமியார் மிசனரிகளை பார்த்து அவர்களைப்போன்று பிரசாரத்தில் ஈடுபட்டார். அவர் மனிதப் பலவீனங்கள், சுயநலம், துர்க்குணம் என்பன பற்றி போதித்தார். இதனால் அவரது கூட்டங்களுக்கு மக்கள் கூட்டம் அலைமோதியது. 200-300 பேர் வரை ஒவ்வொரு இடத்திலும் திரண்டனர். கடந்த சில வாரங்களில் அவர் பத்து, பதினைந்து கூட்டங்களை நடத்தியுள்ளார்.

இந்த சாமியார் மாமிசம் புசிப்பதில்லை . அத்துடன் உணவில் உப்பு சேர்த்துக்கொள்வதில்லை. இந்த சாமியாரை ஒரு பெரிய மகான் என மக்கள் நினைக்கிறார்கள். இவர் யாராவது குறைந்த சாதிக்காரரைத் தொட்டால் உடனே குளிப்பார்.இவருடைய செந்தமிழ், கூட்டத்தில் பங்குபற்றுபவர்களில் ஐந்தில் நான்கு பேருக்கு புரியாது. கோயில் நிர்வாகம் இவருக்கு கதவுகளை திறந்து விட்டுள்ளது.

இந்த சாமியார் மருதடிப் பிள்ளையார் கோயிலில் இரண்டு தடவைகள் பிரசங்கம் செய்துள்ளார்.இவரது பிரசங்கம் மாலை ஏழு டிணி முதல் நள்ளிரவு வரை இடம்பெறும். உங்களுக்கு அவர் என்ன சொன்னார் என்று தெரிய வேண்டுமா? இவரது பிரசாங்கத்தில் பிரதான விடயமாக கிறிஸ்தவ எதிர்ப்பு காணப்படும்.

*(வரலாறு தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org